www.tamilarangam.net

# நிகரி

NIHARI

ISSUE NO-1, 27TH JANUARY 2002

இதழ் 1 – ஜனவரி 27, 2002

விலை ரூபா 12/=

'மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே' – பாரதி

WOMEN'S EDUCATION & RESEARCH LIBRARY

### சொல்லீரோ வாய்திறந்து!

*பாதை திறந்துவிடும் பஸ்ஸேறி நாங்கள்*
*வாதையின்றி யாழ்போய் வந்திடலாம்! - மோதலினி*
*இல்லையென்று ஆகிவிடும், என்னையா பிரதமரே*
*சொல்லையா வாய்திறந்து சொல்!*

–ஈழமோகம்

# பாதை திறபடுமா?

**புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் எல்லோர் முகங்களிலும் எழுந்து நின்ற கேள்வி இது தான். பாதை திறபடுமா? யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதை திறபடுமா? சுமுக நிலைக்கான பாதை திறபடுமா? சமாதானப் பேச்சுவாத்தைக்கான பாதை திறபடுமா? எல்லா வற்றுக்கும் மேலாக விடுதலை வாழ்வுக்கான பாதை திறபடுமா என்கிற பல்வேறு அர்த்தங்கள் பொதிந்ததாக இந்தக் கேள்வி எழுந்து நின்றது.**

பொருளாதாரத் தடை தவிர்க்கப்பட்டு, உணவுப் பொருட்கள் அனுப்பப்படுவதும், போர் நிறுத்தம் அமுல்ப் படுத்தப்பட்டு, சோதனைச் சாவடிக் கெடுபிடிகள் குறைந்திருப்பதும் இந்தக் கேள்விகளை இன்னும் சற்று நம்பிக்கையுடன் எழுப்ப வைத்துள்ளது.


தரைப்பாதை திறப்பதற்கு - யாழ் கண்டிப் பாதையை திறப்பதற்குத் தாம் தயார் எனப் புலிகள் சார்பில் தமிழ்ச் செல்வன் அறிவித்திருந்தது பாதை திறப்புப் பற்றிய நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியிருக்கிறது. யாழ் நகர் நோக்கி சுமுக நிலையின் கீழ் போய்வர முடியுமான ஒரு சூழல் வர வேண்டும் என்பது மக்களின் வெறும் அங்கலாய்ப்புடன் கூடிய ஒரு எதிர்பார்ப்பு மட்டுமல்ல. அது சமாதானப் பாதையின் திறப்புக்கு பலமூட்டுகின்ற ஒரு உறுதியான நடவடிக்கையும் கூட

போர் நிறுத்தமும், அதை நேர்மையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று விருப்பும் நாளது வரை நம்பிக்கை தருவதாக இருக்கிற சமாதானப் பேச்சுக்கான அக்கறையும் ஆர்வமும் இருதரப்பாலும் தெளிவாக வெளிப்பட்டும் இருக்கிற இந்த சூழ்நிலை முன்னர் இருந்ததை விட சிறப்பான ஒரு சூழ் நிலை என்பதை மறுக்க முடியாது. அப்படியானால், தரைப்பாதை திறப்புக்கான மக்களின் தீவிரமான விருப்பமும் தேவையும் சரி செய்யப்பட வேண்டு மென்பதில் அக்கறை காட்டுவதில் உள்ள தடை தான் என்ன? அதிலும் புலிகள் ஒப்புக் கொண்டபின் அதில் தயக்கம் காட்டப்படுவது ஏன்?


அரசாங்கமும், தமிழ்க் கட்சிகளும் இது பற்றி ஏன் தீவிரமாக சிந்திக்கக் கூடாது?

தரைப்பாதை திறப்பு நாட்டின் முழுமையான சமாதானப் பாதை திறப்புக்கான ஒரு ஆரம்பமாக நிச்சயமாக அமையும் என்பது புரியவில்லையா?

இவை நிகரி எழுப்புகிற முக்கியமான, அவசியமான கேள்விகள்!




## வன்னி வாழ்வும் வலி(யு)வும்











**புலித்தடை:**
**காய் நகர்த்தும் சர்வதேசம் 3**



**ஜே.வி.பி:**
**மார்க்சுடன் மார்க்சுக்கு எதிராக... 6**



**5**



**ரணிலின் பேச்சு: கீறல் விழுகிறதா?**

**16**



**தமிழ்த் தேசியத்தின் பாராளுமன்ற வருகை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை: எலும்புகளை வைத்து ஆட்களை அடையாளம் காண்கிறோம்!

-டொக்டர் எஸ்.விக்னேஸ்வரன்-

-கனகரவி

பொருளாதாரத் தடை, மருத்துவப்பொருள்களுக்கான தடை, மட்டுப்படுத்தல் என்பவற்றுக்கு மத்தியில் "கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை" அக்கராயன் குளப்பகுதியில் இயங்கிவருகிறது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சேவை செய்து வரும் இம்மாவட்ட வைத்திய சாலையை அண்மையில் நேரில் சென்று பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இங்குள்ள உண்மை நிலையை நேரில் பார்த்ததுடன் வைத்திய அதிகாரியை சந்தித்து விபரமும் கேட்டறிந்தோம்.

பொருளாதார மருத்துவ தடை மட்டுப்படுத்தல்களுக்கு மத்தியில் வைத்திய சாலையூடாக நோயாளர்களுக்க முழுமையான சேவை செய்ய முடிகின்றதா? என்ற கேள்விக்கு வைத்திய அதிகாரி அளித்த பதில் அங்குள்ள நிலையை படம் பிடித்துக் காட்டியது. வைத்திய அதிகாரி சொன்ன பதில் :

தடைகள் பற்றி எல்லோருக்கும் தெரியும். எங்களைப் பொறுத்தவரையிலே எங்களுக்கு தேவையான வைத்தியர்கள் ஊழியர்களினுடைய எண்ணிக்கையில் கிட்டத்தட்ட நாலில் ஒரு பங்கினர் தான் பணியாற்றுகின்றனர். அதாவது வைத்தியர்களாக அதிகாரிகள் தான் கடமையாற்றுகின்றார்கள். அதேவேளை இங்கு வருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை சாதாரணமாக ஒரு மாவட்ட வைத்தியசாலையிலேயே பராமரிக்கப்படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கையை விட அதிகம். இடப்பெயர்விற்குப் பின்னர் அக்கராயன் சுற்றியல் கூறு வைத்தியசாலையுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இயங்குகின்றது. 48 நோயாளர்களை பராமரிக்கக் கூடிய நிலையிலிருந்த வைத்தியசாலையிலே 200க்கு மேற்பட்ட படுக்கை வசதிகளைக் கொண்ட வைத்தியசாலையாக மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. தினசரி 200 பேர் வரையில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தார்கள். தற்போது மீளக்குடியமர்வு கிளிநொச்சிப் பகுதியில் ஏற்பட்டுக் கொண்டிருப்பதனால் கிளிநொச்சியிலே கட்டம் ஒன்று என்ற மருந்தகம் ஒன்றை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். அதே வேளையிலே உருத்திரபுரம் பகுதியில் மூடப்பட்ட வைத்தியசாலையினை மீளவும் திறந்துள்ளோம். இதனால் ஓரளவிற்கு இங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

கடந்த காலத்திலே 1996, 1997 பகுதியிலே ஒரு நாளைக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர்கள் பகுதியிலே சிக்கிச்சையளிக்கப்பட்டார்கள். இப்போது சராசரி 600 ஆக அது இருக்கின்றது. இப்பொழுது மழை பெய்து ஒரு மாதமாகின்றது. ஆகவே வெளிநோயாளர்களின் வருகை அதிகரித்துள்ளது.

விடுதி வசதிகள் மிகக் குறைவு இனிவரும் காலங்களில் நோயின் தாக்கம் அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளதால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். ஊழியர்களைப் பொறுத்தவரையிலே பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. தாதி உத்தியோகஸ்தர்கள் 30பேர் வரையில் இருக்க வேண்டும். இங்கே 8 பேர் மட்டுமே உள்ளனர். அதிலும் மீள் நியமனம் பெற்றுக் கடமையாற்றுகின்றவர்கள் இருக்கின்றார்கள். மருத்துவ மாதுக்கள் நான்கு பேர் மட்டுமே கடமையாற்றுகின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையென்று இயங்கினாலும் கூட இங்கே அக்கராயன் சுற்றியல் கூறும் இணைந்துதான் இயங்குகின்றது. இரண்டு வைத்திய சாலைகள் இணைந்த நிலையிலே செயற்படுகின்றது. இதற்கு முன்னர் உருத்திரபுரம் மத்திய மருந்தகமும் இணைந்த நிலையில் இயங்கியது. இரண்டு மருத்துவ அதிகாரிகளும் மூன்று பதிவு மருத்துவ அதிகாரிகளும் கடமையாற்றுகின்றனர். இப்படியான மிகப்பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டே சேவை செய்ய வேண்டியுள்ளது.

இதற்காக உண்மையிலே எமது பட்டதாரிகள் இங்கு வந்து சேவை செய்ய முன்வருவது தான் பெரிய காரியமாக இருக்கும். அந்த வகையில் வைத்தியக் கலாநிதி சத்தியமூர்த்தி கல்வியை முடித்து இங்கே வந்திருக்கின்றார். இனிவரும் காலங்களிலும் புதியவர்கள் வருவார்களாக இருந்தால் ஓரளவு சேவையை வழங்கக் கூடியதாக இருக்கும்.

கேள்வி : இவ்வளவு பற்றாக்குறைக்கு மத்தியில் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு எப்படி முடிகின்றது?

நாங்கள் நோயாளர்களை ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் பார்வையிட வேண்டும். சராசரி நூற்றியம்பது சத்திரசிகிச்சைகளை மேற்கொள்கின்றோம். அவசர சிசிக்சைகளையும் மேற்கொள்கின்றோம். குறிப்பாக வெடிபொருட்களிலே அகப்பட்டு கால்கள் சிதைந்து போனவர்களுக்கு கால்கள் வெட்டி அகற்றுகின்ற அவசர சத்திர சிசகிச்சைகள் செய்கின்றோம். இதை விட 1999ஆம் ஆண்டு ஸ்கானர் ஒன்று வழங்கப்பட்டது. இது வன்னியிலே உள்ள எல்லா வைத்தியசாலைகளிலுமிருந்து அந்தப் பரிசோதனைக்காக இங்குதான் நோயாளிகள் கொண்டு வரப்படுகின்றனர். அந்தவகையிலே எல்லோரும் தொடர்ச்சியாக வேலை செய்ய



டொக்டர் எஸ்.விக்னேஸ்வரன்

வேண்டும். விடுப்பெடுப்பதென்பது பெரும் கஷ்டம். நோய்வாய்ப்பட்டால் பெரிய சிரமத்தின் மத்தியில் தான் வைத்தியசாலை இயங்கும். அந்த வகையிலே விடுப்பு எடுக்க முடியாத நிலைமை உண்டு. வேறு இடங்களுக்குப் போக முடியாது. கூட்டங்கள் கலந்துரையாடல்களுக்குப் போக முடியாது.

கேள்வி : கிளிநொச்சி மாவட்டத்தின் உண்மை வெற்றி நடவடிக்கை மூலம் படையினர் நிலை கொண்டிருந்த போது 184 பேர் காணாமல் போயுள்ளனர். ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் மீண்டும் கிளிநொச்சியைக் கைப்பற்றிய பின்னர் 60க்கு அதிகமான எலும்புக் கூடுகள் பல்வேறுபட்ட இடங்களில் மலக்குழி, கிணறு போன்ற இடங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. அவை பற்றிய தகவல்களை கூறுவீர்களா?

இங்கே உண்மையில் அகழ்வாராய்ச்சி செய்கின்ற நிபுணத்துவம் பெற்றவர்கள் இல்லை. தமிழீழக் காவல்துறையினர் தங்களுடைய திறமைக்கு ஏற்ப ஓரளவிற்கு தம்மால் பெறப்பட்ட வன்கூட்டுத் தொகுதிகளை இங்கு கொண்டு வந்து தந்துள்ளனர். அவர்கள் எடுத்தவற்றிலே முற்று முழுதான வன்கூடுகள் என்று கூறக் கூடியதாக எவையுமில்லை. தொகுதி தொகுதியாகக் கொண்டு வருவார்கள். அதிலே என்புகளின் எண்ணிக்கையினை வைத்துக் கொண்டு கிட்டத்தட்ட இவை எத்தனை எனக் கணக்கிட முடிந்தது. வைத்தியசாலையில் பரிசோதனைக்காக 60க்கு மேற்பட்ட வன்கூட்டுத் தொகுதிகள் உள்ளன. பரிசோதனை செய்து ஒரு சிலவற்றை மட்டும் இனம் காணமுடிந்தது. ஏற்கெனவே கால் முறிந்தவர் அதற்குள்ளே கம்பியொன்று செய்து பொருத்தப்பட்டிருந்த ஒருவரை இனம் காணக் கூடியதாய் இருந்தது. பல்லிலே உள்ள சூத்தைகளை வைத்து ஒருவரை இனம் காண முடிந்தது. ஆபரணங்கள் கைகளிலேயே இருந்தமையாலும், சிலருடைய உடைகளைக் கொண்டும் அடையாளம் காண முடிந்தது. மண்டை பலமாகத் தாக்கப்பட்டு மண்டை ஓடுகள் சிதறிய நிலையில் கூட வன்கூடுகள் கொண்டு வரப்பட்டன. சில வன்கூடுகள் கைக்குண்டுகள் வெடித்து தாக்கிச் சிதறிய நிலையில் காணப்பட்டன. சில சிதறல்கள் எதனால் ஏற்பட்டன எனக் காணமுடியவில்லை. எங்களுக்கு உள்ள வேலைப் பழுவுக்கு மத்தியிலே வன்கூடுகளை பரிசோதிப்பதையும் மேற்கொண்டோம்.

மாவட்ட வைத்திய அதிகாரியைக் கண்டு அவரிடம் விபரங்களைக் கேட்டறிந்த பின்னர் வைத்திய சாலையினைப் பார்வையிட்டோம், விடுதிகளில் படுக்கை வசதி இல்லாது நடைபாதையில் பாயை விரித்து படுத்திருந்த நோயாளர்களைக் கண்டோம், நோயினால் வேதனை தாங்காது குழந்தைகள் கதறி அழுது கொண்டிருந்த போது அவர்களை அவசர சிகிச்சைக்காக வேறு வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதெனில் வைத்தியசாலையில் அதற்கான போதிய வசதியில்லாது இருந்த அனுபவம் பற்றி மருத்துவ தாதி ஒருவர் எமக்குக் கூறினார்.

இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியில் வைத்தியசாலையினை சுகாதாரமாக சுத்தமாக வைத்திருந்தனர். வைத்தியசாலையின் நிலைமையினைக் கண்ட தென்பகுதிப் பத்திரிகையாளர் ஒருவர், 'மக்களுக்கான வசதி வாய்ப்புக்களை இப்படி மோசமான நிலைமைக்குக் கொண்டு வந்தால் மக்கள் போராடுவார்கள் தானே" என்று கூறினார். இவ்வளவு வேலைப்பழுவுக்கு மத்தியிலும் தமது நிலைமையினை எமக்குக் கூறியும், காண்பித்தும் தமது பணிக்காக வைத்திய அதிகாரி, மற்றும் பணியாளர்கள் செல்ல நாமும் அங்கிருந்து வெளியேறினோம். அந்த வைத்திய அதிகாரி கேட்டது போன்று வன்னி மண்ணிலேயே பிறந்து வளர்ந்து கற்று மருத்துவர்களாக உருவாகி தென்பகுதி, வெளிநாடு என்று ஓடிவிடாமல் வன்னி மக்களுக்கு சேவை செய்ய யார் முன்வரத் தயாராக இருக்கிறார்கள்?

## மெல்லத்தமிழினி

# யோசிப்பாரா அவர்?

உங்களுக்கு அவ்வளவு விரைவில் மறந்து விட முடியாத ஒருவரைப்பற்றிச் சொல்ல வேண்டும் ஆட்சி மாற்றத்தின் பின் அவ்வளவாக அடிபடா விட்டாலும் அவ்வளவு இலேசில் மறந்துவிட முடியாத பெயர் அது.

யாரும் மறந்துவிட முடியாத ஒருவர் என்ற போதும், அவ்வளவாக நினைவு படுத்திக் கொள்ளும் அளவுக்கு யாருடைய அன்புக்கும் பாத்திரமான ஒருவர் என்று அவரைச் சொல்ல முடியாது. முன்னைய ஆட்சியில் இருந்தவர்களில் ஒரு சிலர் இன்னும் அவர்மீது அன்பு கொண்டிருக்கக் கூடும்.

ஆனாலும் அவரைப் பற்றி சொல்ல வேண்டும் போலிருக்கிறது.

முதலில் அவர் யார் என்று சொல்லி விட வேண்டும். அவர் வேறுயாருமல்ல, நமது முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் தான்.

'யானை மாலை போட்டதாலே ஆளவந்த ராணி" மாதிரி சந்திரிகாவின் கருணையினால் ஆட்சிக் கட்டில் அமர்த்தப்பட்டவர் அவர் என்று இந்தப் பத்தியை சரிநிகரில் எழுதிக் கொண்டிருந்த போது குறிப்பிட்டிருந்தேன். அதே கதிர்காமரைப் பற்றித்தான். இம்முறையும் அதே 'சந்திரிகா புண்ணியத்தால்" பாராளுமன்றக் கதிரையில் உட்கார்ந்திருக்கிறார்.

சொல்ல நினைத்ததற்கு காரணம் இதுதான்

ரணில் விக்கிரம சிங்கவின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் ஒரு முக்கியமான கருத்தை உதிர்த்திருக்கிறார்.

ரணில், புலிகள் மீதான தடையை நீக்குவது பற்றி தீவிரமாக யோசிக்க வேண்டும், மற்றைய நாடுகள் எமக்கு செய்யும் உதவியை இழக்க முடியுமா என்று யோசிக்க வேணும் என்று தெரிவித்திருந்து எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனாலும் அமைச்சர் கதிர்காமருக்கு அதை தனது வேண்டுகோளாக முன்வைப்பதில் அவ்வளவு ஆசை. அரசாங்கம் ஆழமாகவும் தூரதிருஷ்டியுடனும் சிந்திக்க வேணும் என்று தெரிவித்திருக்கிறார்.

பரவாயில்லை. உலகமே நான் சொல்லித்தான் இயங்குகிறது என்று கருதும் சில மனிதர்கள் நம்மத்தியில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவராக நமது முன்னாள் அமைச்சரும் இருந்து விட்டுப் போக ஆசைப்படுவதில்லை எமக்கு எந்த ஆட்சேபனையும் இருக்கவேண்டியதில்லை.

ஆனால் அவர் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். மக்கள் நாட்டில் அமைதியை எதிர்பார்த்து பொதுசன ஐக்கிய முன்னணியை ஆட்சியில் அமர்த்தினார்களாம். பொதுசன ஐக்கிய முன்னணி சமாதானத்திற்காக அரும்பாடு பட்டதாம். ஆனாலும் சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு கிடைக்காததால் 7 வருடமாக அதைக் காண முடியவில்லையாம். 'நாம் புலிகளுடன் பேச்சு வார்த்தைக்குச் சென்றோம், ஆனால் துரதிஷ்டவசமாக 19.04.1995 இல் மீண்டும் யுத்தம் ஆரம்பமாகிவிட்டது" என்கிறார் அவர்.

உங்களுக்கு சிரிப்பு வரவில்லையா?

யுத்தம் எப்படி ஆரம்பமாகும்? அதுவும் துரதிஷ்ட வசமாக? யுத்தத்தை நடத்துவதிலேயே அரசு குறியாக இருந்த காலத்தில் இருந்த அமைச்சர் ஒருவருக்கு ஏன் யுத்தம் ஏற்படும் சூழல் ஏற்பட்டது என்று தெரியாதா? சரி 'துரதிருஷ்ட வசமான" யுத்தத்தை நிறுத்த கடந்த வருடம் இரண்டு வாய்ப்புக்கள் கிடைத்தனவே. அப்போது நமது முன்னாள் அமைச்சர் என்ன சொன்னார்? யுத்த நிறுத்த கோரிக்கையையும், ஒருபக்க சார்பான புலிகளின் யுத்த நிறுத்தத்தையும், புலிகளின் வழமையான தந்திரம் என்று அவர் கூறவில்லையா?

முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பான காலம். பழையவற்றை அசைபோட்டு நிதானமாக சிந்திக்க. அப்படிச் சிந்தித்தால் சரியாக எதையாவது சொல்ல முடியாவிட்டலும் மௌனமாகவாவது இருக்கலாமல்லவா?

யோசிப்பாரோ என்னவோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலித்தடை:
# சர்வதேச அரசியலின் காய் நகர்த்தல்

-டி.சிவராம்

சிறிலங்காக அரசினுடைய வெற்றிகரமான வேலைத்திட்டங்கள் காரணமாகவே அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் புலிகளைப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்துள்ளன என்பதே அமைதிப் பேச்சுக்களுக்கு எதிராகக் கூச்சலிட்டு வரும் சிங்கள இனவாதிகளின் கருத்தாகும்.

புலிகளும் இது போன்ற ஒரு கருத்தையே கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வனின் அண்மைய செவ்வி ஒன்றிலிருந்து தெளிவாகிறது.

இது முற்றிலும் தவறான கருத்தாகும். புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் பட்டியலிட்டு அவர்கள் அங்கு நேரடியாக நிதி சேர்ப்பதற்கு தடை விதித்ததற்கும் கதிர்காமர் அந்நாடுகளில் மேற்கொண்ட இராஜதந்திர முயற்சிகளுக்கும் எதுவித தொடர்பும் கிடையாது. முாறாக அமெரிக்க கேந்திர நலன்களை இங்கு முன்னெடுக்கும் நோக்குடன் நடைபெற்று வரும் காய் நகர்த்தல்கள் தொடர்பாகவே மேற்படி தடைகள் உருவாகின என்பதே உண்மை.

முதலில் சம்பந்தப்பட்ட நாடுகளில் புலிகள் தொடர்பான நிலைப்பாடு எவ்வாறுள்ளது என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

சிறிலங்கா அரசு புலிகள் மீது விதித்துள்ள சட்டரீதியான தடையை நீக்காவிட்டால் அவர்கள் அதைப் பயன்படுத்தி மேற்படி நாடுகளில் தம்மீதான தடையை நீக்குவதற்கு ஆவன செய்திடுவர் எனவும் ஆகவே அவர்கள் தமது ஆயுதங்களைக் கைவிடும் வரை (!!) ஐ.தே.க அரசு புலிகள் மீதான தடையை வைத்திருக்க வேண்டும் என சிங்கள இனவாதிகளும் பத்திரிகையாளர்களும் கூறி வருகின்றனர். ஆனால் இவர்கள் எவருமே மேற்படி நாடுகளில் புலிகள் இயக்கத்தின் மீதுள்ள கட்டுப்பாடுகளின் தன்மையை சரியாகக் கவனிப்பதில்லை.

அதாவது புலிகள் முற்றாக தம் மண்ணிலிருந்து அற்றுப் போய்விடக் கூடிய வகையிலோ அல்லது இந்தியாவில் உள்ளதைப் போல் அவர்கள் மிக இரகசியமாக மட்டும் செயல்படும் வகையிலோ தடைகளை அந்நாடுகள் நடைமுறைப்படுத்தவில்லை என்பது முதற்கண் நோக்கற்பாலது.



"நாம் முன்னர் அரபாத் விடயத்தில் விட்ட தவறை இப்போது விட விரும்பவில்லை" என 1997இல் அமெரிக்க வெளிநாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரி ஒருவர் புலிகள் பிரச்சினையைப் பற்றிப் பேசும் போது குறிப்பிட்டார். தன் மண்ணில் கால் வைக்க முடியாத ஒரு பயங்கரவாதியாக அரபாத்தை எழுபதுகளில் அமெரிக்கா தடை செய்திருந்தது. இதனால் பிற்காலத்தில் சோவியத் குடியரசுடனான பனிப்போர் நெகிழ்வடையத் தொடங்கிய வேளையில் அரபாத்தை இணைத்து மத்திய கிழக்கில் சில கேந்திர ரீதியான காய்நகர்த்தல்களில் ஈடுபட அமெரிக்கா சிக்கல்பட வேண்டியதாயிற்று.

அமெரிக்காவின் பூகோள கேந்திர நலன்களை தேவைக்கேற்றபடி தேவைக்கேற்ற சந்தர்ப்பங்களிலோ தொடர்ச்சியாகவோ, படிப்படியாகவோ முன்னெடுப்பதற்குத் தோதான நெகிழ்வுத்தன்மை கொண்டவையாகவே அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் உள்ள புலிகள் மீதான கெடுபிடிகள் அமைந் துள்ளன. இங்கு "அமெரிக்க கேந்திர நலன்களை முன்னெடுக்கும் வகையில்" என நான் குறிப்பிடுவதற்கு ஒரு திட்டவட்டமான காரணம் உண்டு. நான் ஏலவே பல கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளபடி பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா ஆகியன அமெரிக்காவுடன் மிக இறுக்கமான பாதுகாப்பு, உளவுப்பரிமாற்றம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் உள்ள நாடுகளாகும். இவ்வொப்பந்தத்தின் கீழ் அமெரிக்கா ஒரு மூன்றாம் நாட்டுடன் போர் தொடுத்தால் மேற்படி நாடுகளும் மறுபேச்சின்றி அந்நாட்டுடன் போர் பிரகடனப்படுத்தியே ஆக வேண்டும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் தனது பூகோளக் கேந்திர நலன்களைப் பேணுவதற்கும் முன்னெடுப்பதற்கும் எவ்வகையிலெல்லாம் இந்த நாடுகளை அமெரிக்கா பயன்படுத்துகின்றது என்பதை அந்நாடுகளின் மக்கள் பிரதிநிதிகள் கூட சரியாக அறிந்திருப்பதில்லை. 1999 இல் அவுஸ்ரேலியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு இயங்கிவரும் அமெரிக்காவின் மிகப் பெரிய உளவு நிறுவனமான தேசிய பாதுகாப்பு நிறுவனத்திற்கு (National Security Agency) சொந்தமான செய்மதி ஒட்டுக் கேட்கும் நிலையத்தைப் பார்வையிட விரும்பினர். ஆனால் அவர்கள் அதற்கு அனுமதிக்கப்படவில்லை. இது போலவே மேற்படி பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் கனடாவின் உளவுத்துறை நடவடிக்கைகள் சில அமெரிக்காவின் நலன்களுக்கமையவும் கனேடிய நாடாளுமன்றத்திற்குத் தெரியாமலும் நடைபெற்று வந்துள்ளன. 1966 இல் நியமிக்கப்பட்ட Mackenzie ஆணைக்குழு அறிக்கையிலும் Royal Canadian Mounted Police இதனுடைய இவ்வாறான உளவுசார் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் உள்ளன. (1981இல் Mc.Donald ஆணைக்குழவின் பரிந்துரைகளின் பேரில் RCMP Canadian Security Intelligence Service அதாவது CSIS ஆக உருமாறிற்று) மேற்படி ஒப்பந்தத்தின் காரணமாக 1980-84 பகுதியில் அப்போதைய கனேடிய அரசு உள்நாட்டு எதிர்ப்புக் கிடையிலும் அமெரிக்காவின் குறூஸ் ஏவுகணையை (Cruise missile) பரிசோதிக்க இடம் வழங்க வேண்டியதாயிற்று. இந்த வகையில் பிரித்தானியாவைப் பற்றி நான் மேலதிகமாக விளக்கத் தேவையில்லை என எண்ணுகின்றேன். ஆக இங்கு வெள்ளிடைமலையாக உள்ள விடயம் என்ன வெனில் புலிகள் மீது தடைகளைப் போட்டுள்ள நான்கு மேற்கு நாடுகளும் உடன்படிக்கை மூலமான கேந்திரப் பிணைப்புள்ளவை என்பதாகும்.

2001 செப்.11 இற்குப் பின் உலகெங்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான அலை ஓங்கி வீசுகிறது எனக் கூறப்பட்டாலும் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்யவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். கனடா, அவுஸ்ரேலியா, பிரித்தானியா அமெரிக்கா ஆகிய நாடுகளில் புலிகள் மீது போடப்பட்ட நெகிழ்வுத் தன்மை கொண்ட தடைகளுக்கும் அமெரிக்காவின் வல்லாதிக்க கேந்திர நலன்களை முன்னெடுக்கும் பூகோள சதுரங்கக் காய் நகர்த்தல்களுக்கும் தொடர்பிருப்பதை கணக்கிற் கொண்டே ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு அமைந்தது என எண்ண இடமுண்டு.

<u>ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்யவில்லை</u>

எனவே குறிப்பிட்ட கேந்திர நோக்கு (Stratagic objective) அல்லது நோக்கங் களுக்கமையவே புலிகள் மீதான நெருக்கு தல்களும் தடைகளும் மேற்படி நாடுகளால் தேவைக்கேற்றபடி செயல்படுத்தப்படுகின்றன என்றே நான் கொள்கின்றேன். இதை நாம் மேலும் சற்றுத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் பின்வரும் இரு தகவல்களை நோக்குவோம்.

இன்று உலக அரசியல் அரங்கில் அமெரிக்காவுடன் போட்டி போடக் கூடிய வலுவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் எழுச்சி பெற முனைகிறது. இதன் காரணமாக உலகம் முழுக்க அமெரிக்கா தங்கு தடையின்றி தனது வல்லாதிக்கத்தை விரிவாக்கும் நோக்குடன் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையின் கீழ் எடுத்த முயற்சிகளை - ஈராக் மீதும் சோமாலியா மீதும் மீண்டும் தாக்குதல் - ஐரோப்பிய ஒன்றியம் இராஜதந்திர வழிமுறைகள் மூலம் எதிர்த்தது.

2001 செப்.11 இற்குப் பின் உலகெங்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான அலை ஓங்கி வீசுகிறது எனக் கூறப்பட்டாலும் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்யவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். கனடா, அவுஸ்ரேலியா, பிரித்தானியா அமெரிக்கா ஆகிய நாடுகளில் புலிகள் மீது போடப்பட்ட நெகிழ்வுத் தன்மை கொண்ட தடைகளுக்கும் அமெரிக்காவின் வல்லாதிக்க கேந்திர நலன்களை முன்னெடுக்கும் பூகோள சதுரங்கக் காய் நகர்த்தல்களுக்கும் தொடர்பிருப்பதை கணக்கிற் கொண்டே ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு அமைந்தது என எண்ண இடமுண்டு.

அடுத்ததாக கொலம்பியா நாட்டின் AUC எனும் ஆயுதக்குழுவை எடுத்துக் கொள்வோம். இது அமெரிக்காவின் ஆளுமைக்குட்பட்ட கொலம்பியப் படைத்துறையினருடன் இணைந்து இயங்கும் ஒரு அமைப்பாகும். கொலம்பியாவில் நடைபெறும் 80%க்கு மேற்பட்ட ஆட்கடத்தல், கொலை, பாலியல் வல்லுறவு போன்ற மனித உரிமைக் குற்றங்களுக்கு A.U.Cயே பொறுப்பென அமெரிக்கா சார்பு மனித உரிமை அமைப்புக்களே கூறுகின்றன. அமெரிக்காவின் மிகப் பெரும் இராணுவ உதவியைப் பெறும் லத்தீன் அமெரிக்க நாடு கொலம்பியாவாகும். போதைப் பொருள் ஒழிப்புப் போருக்கான உதவியென இது வழங்கப்படுகிறதாயினும் இவ்வுதவியின் பெரும் பகுதி இந்நாட்டு அரசுக்கெதிராக ஆயுதப் பேராட்டமொன்றை 30 வருடங் களுக்கு மேலாக நடாத்திவரும் இடதுசாரி இயக்கமான FARC ஐ இராணுவ ரீதியாக அடக்கி ஒடுக்குவதற்கே செலவழிக்கப்படுகிறது. இந்த வகையில் AUCக்கும் இந்த அமெரிக்க நிதியுதவி மறைமுகமாகப் போகிறது என்பதில் ஐயமில்லை. கொலம்பியாவில் அமெரிக்கா இராணுவ ரீதியாக தலையிட வேண்டுமாயின் (FARC அங்கு அரசைக் கைப்பற்றும் பட்சத்தில்) இந்த யுருஊ அங்கு அதன் ஐந்தாம் படையாக அதன் வடக்கு முன்னணியாக பயன்படுத்தப்படும் என்பதே ஆய்வாளரின் கருத்தாகும்.

ஆனால் AUC அமெரிக்காவின் வெளிநாட்டு பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் உள்ளது. இதேபோல இந்தப் பட்டியலில் உள்ள பிலிப்பீன்ஸ் நாட்டு முஸ்லீம் ஆயுதக் குழுவான அபு சய்யாப் (Abu Sayyaf) சவூதி அரேபியாவின் மறைமுகமான தூண்டுதல் உள்ள ஒரு அமைப்பாகும். (அமெரிக்க உளவுத் துறையுடன் கலந்தே சவூதி இந்த மாதிரியான அலுவல்களில் ஈடுபடுவது வழமையாகும்.) இந்த இயக்கத்தின் செயல்பாடுகள் அமெரிக்க மீண்டும் பிலிப்பீன்ஸ் நாட்டின் படைத்துறையுடன் நெருங்கிய உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றினை 1999 இல் கைச்சாத்திடவும் உதவியுள்ளன என்பதை நாம் நோக்க வேண்டும்.

அமெரிக்க பூகோளக் கேந்திர நலன்களை முன்னெடுக்கும் பகடைகளாகவும் பயங்கரவாதப் பட்டியலிலுள்ள இயக்கங்கள் இருக்க முடியும் என்பதையே மேற்படி உதாரணங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

அமெரிக்கா வெளிநாடொன்றில் உள்ள அரச எதிர்ப்பு இயக்கமொன்றை பயங்கரவாதப் பட்டியலிலிடுகின்ற போது அவ்வியக்கத்தின் மீதும் அதன் அரசியல் எதிர்காலத்தின் மீதும் ஒரு அழுத்தத்தைச் செலுத்திடக் கூடிய அந்தஸ்தை அடைகிறது என்பதே இதில் முக்கியமான விடயமாகும். அதாவது அந்த இயக்கம் உள்ள நாட்டின் அரசியல் எதிர்காலம் பற்றிய எந்தக் கணக்கு வழக்கிலும் அமெரிக்காவையும் கருத்தில் கொள்ள வேண்டிய தேவை தவிர்க்க முடியாதபடி சம்பந்தப்பட்ட நாட்டுக்கும் அந்த அரச எதிர்ப்பு இயக்கத்திற்கும் உண்டாகிறது.

இதற்கு ஏற்ற வகையில் அந்த அரசு எதிர்ப்பு இயக்கத்தின் மீது நுட்பமான அல்லது நேரிடையான அழுத்தங்களை செலுத்திடக் கூடிய வகையிலேயே நாம் ஏலவே கூறியபடி அமெரிக்கா மற்றும் அதன் கேந்திர உடன்படிக்கை நாடுகள் நடைமுறைப்படுத்தியுள்ள தடைகளின் நெகிழ்வுத் தன்மையுள்ளது. பாகிஸ்தானின் உதவியுடனும் சவுதி அரேபியாவின் உதவியுடனும் அமெரிக்கா உருவாக்கிய அமைப்புக்களே தலிபானும், அல்குவைதாவும் ஆகும். அவற்றின் மீதான தடையும் போரும் (2001 செப்.11 தாக்குதல்களுக்கு முன்னரே இதற்கான முடிவை அமெரிக்கப் படைத்துறை எடுத்து விட்டது.) கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மத்திய ஆசிய நாடுகளில் அமெரிக்கா தளங்கள் அமைக்க வழி கோலி விட்டன.

1988இன் பின் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பின் தளம் தமிழகத்திலிருந்து மேற்கிற்கு மாறலாயிற்று. இந்தப் பின்தள மாற்றத்தை அமெரிக்காவின் கேந்திர - பாதுகாப்பு வலைப்பின்னலக்குட்பட்ட நாடுகளான பிரித்தானியா கனடா அவுஸ்ரேலியா என்பனவும் பிரதானமாக உள்வாங்கிக் கொண்டன என்பது நோக்கற்குரியது.

1987இல் இந்திய சிறிலங்கா உடன்படிக்கை மூலம் சிறிலங்கா இந்தியாவின் கேந்திர வல்லாதிக்கத்திற்குட்பட்டது. இதைச் சாதித்த கையோடு புலிகளையும் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஓரங்கட்டும் முகமாக தமிழகப் பின்தளத்தை இந்தியா மூடலாயிற்று. ஆனால், கனடா, அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளில் 1988இற்குப் பின்னர் போராட்டத்தின் பின்தளம் வளர்ந்து வலுப்பட்டது. (இதற்குப் பெரும் வாய்ப்பாக அமைந்த கனடாவின் குடிவரவுக் கொள்கை எவ்விதமான கேந்திரப் பின்புலங்களைக் கொண்டிருந்தது என்பதைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம்.)

1993 இலிருந்து படிப்படியாக விரிவடைந்து செல்லும் இறுக்கமான உறவை வளர்த்துக் கொள்வதற்கு 1990க்குப் பின்னர் புலிகளின் படைவலு சிறிலங்காப் படைத்துறைக்கு பெரும் சவாலாக உருவெடுத்ததும் கணிசமாக உதவிற்று எனில் மிகையாகாது.

## <u>மரபுவழிப்படையாக புலிகள் பெற்ற வளர்ச்சி</u>

1991இன் பின்னர் புலிகள் ஒரு வலுவுள்ள மரபுவழிப்படையாக வளர்ச்சியடைந்திருக்காவிட்டால் சிறிலங்கா அரசு அமெரிக்க இராணுவ உதவியை நாடியிருக்கத் தேவையில்லை. 1993ம் ஆண்டில் காயப்பட்ட படைகளை வெளியேற்றுவது தொடர்பாக அமெரிக்கா சிறிலங்காவிற்கு வழங்கத் தொடங்கிய படைத்துறைப் பயிற்சி படிப்படியாக விரிவடைந்தமைக்கு புலிகளின் மரபுவழிப் படை வளர்ச்சியால் ஏற்பட்ட சவாலே முக்கிய காரணமாகும். அதாவது இந்தியாவில் தடை செய்யப்பட்ட பின்னர் புலிகள் ஒரு மரபு வழிப்படையாக வளர்ச்சியடைவதற்கான வழிவகைகள் இருந்திருக்காவிட்டால், 1987 உடன்படிக்கையின் கீழ் இந்திய கேந்திர வல்லாதிக்கத்தினுள் உள்வாங்கப்பட்டிருந்த சிறிலங்கா அதிலிருந்து விடுபட்டு அமெரிக்கப் படைத்துறையுடன் இன்றுள்ளது போல் நெருக்கமான உறவை வளர்க்க வாய்ப்பிருந்திருக்காது.

1991க்குப் பின்னர் புலிகளுக்கு மேற்கில் கிடைத்த பின்தள வசதியே அவர்களுடைய மரபுவழிப்படை வளர்ச்சிக்குப் பிரதான அடிப்படையாகுமென அமெரிக்க ராஜதந்திர வட்டாரங்கள் கருதின.

1990களின் நடுக்கூறு வரை இந்தியாவே சிறிலங்காப் படைத்துறையின் பிரதான வெளிநாட்டுப்பயிற்சி முகவராக இருந்தது. தற்போது அந்த இடத்தை அமெரிக்கா பெற்று விட்டது. ஒரு நாட்டின் படைத்துறையுடனான கூட்டுப்பயிற்சிகள், கூட்டு நடவடிக்கைகள்

தொடர்ச்சி 19ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானத் தீர்வுக்கான முன் நிபந்தனைகள் எவை?

-- விக்டர் ஐவன்





இனங்களுக்கு இடையிலான பிரச்சினைக்குத் தீர்வைத் தேடிக் கொள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசு புலிகளுடன் உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் திசையை நோக்கி வேகமாகச் சென்று கொண் டிருக்கின்றது. நாடு பொருளாதார நிலையில் என்றுமில்லாதளவு வங்கு ரோத்து நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியுற்றுள்ளது. நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள் பல்வேறுபட்டதாக இருப்பினும், அந்த அனைத்துப் பிரச்சினைகளும் ஏனைய பிரச்சினைகளோடு இரண்டறப் பின்னப்பட்டுள்ளதோடு, இனங்களுக்கிடையேயான பிரச்சினை ஏனைய எல்லாப் பிரச்சினை களையும்விட பாரதுாரமானதாக உள்ளது. புலிகள் அமைப்புக்கு எதிராக யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதோடு, ஓரளவேனும் எனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தேடிக் கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கு உள்ள திறன் முழுமையாகவே இன்று இல்லாமல் சென்றுள்ளது.

தற்போது முகம் கொடுத்து வரும் எல்லா அடிப்படைப் பிரச்சினை களிலும், தீர்வை ஏற்படுத்திக் கொள்ள மிகவும் கடினமான பிரச்சினையாக இருப்பதும் இனங்களுக்கிடையிலான பிரச்சினையேயாகும். கடக்க வேண்டிய வேலிகள் பல இருப்பினும், இனங்களுக்கிடையே நிலவும் வேலியைக் கடக்க முடியுமெனில் அது அனைத்து வேலிகளையும் தாண்டிச் செல்வதற்குச் சமனாகும். ஏனைய வேலிகள் இந்த வேலியைக் கடப்பதை விட இலகுவானதாக இருந்தாலும் இனங்களுக்கிடை யேயான வேலியைக் கடவாமல் ஏனைய வேலிகள் எதனையும் கடக்க முடியாத நிலைக்கு நாடு சரிந்து சென்றுள்ளது.

நாட்டுக்கு யுத்தம் செய்ய வேண்டிய தேவை இருப்பினும், நாடு வீழ்ந்திருக்கும் வங்குரோத்து பொருளாதார நிலையின் காரணத்தால் அதற்கான சக்தியை இழந்துள்ளது. இதிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமெனில் தேர்ந்தெடுப் பதற்காக உள்ள ஒரே மார்க்கம் சமாதானத்திற்காகச் செல்லவுள்ள மார்க்கம் ஒன்று மட்டுமேயாகும். இருப்பினும் அது மிகவும் கடினமான மார்க்கமாகவே உள்ளது. சமாதானத்தை வென்றெடுப்பதன் மூலம் ஏனைய அனைத்தையும் வென்றெடுப்பது புதிய அரசாங்கத் தின் உபாய மார்க்கமாக உள்ளது போல் தோன்றுகின்றது. பொருளாதார வீழ்ச்சியின் சரிவை நோக்கும் போது பொதுமக்கள் மீது அதிகமான பாரத்தைச் சுமத்தும் கொள்கையைக் கடைபிடிக்காமல் நாட்டுக்குத் தனியாக எழுந்து நிற்பதற்கான சக்தி இல்லை. இருந்தாலும் சமாதானத்திற்காக வேண்டி மேற்கொள்ளும் நேர்மை யான பாரிய முயற்சிகள் நாட்டுக்கு சர்வதேச அளவில் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான முக்கிய மார்க்கமாகும்.

சமாதானத்திற்கான மார்க்கம் சரளமானதுமல்ல. அது மிகவும் கடினமான சிக்கலான பயணமாகும். ஏற்படும் ஒரு சிறு தவறைக்



புலிகளின் சந்தோஷத்திற்குக் காரணமாகும் ஒரு நடவடிக்கை இராணுவத்தின் எரிச்சலுக்குக் காரணமாகலாம். அதேபோன்று இராணுவத்தினரை மகிழ்விக்கும் ஒரு நடவடிக்கை புலிகளின் எதிர்ப்புக்குக் காரணமாகலாம். சிங்கள முஸ்லிம் மக்களின் சந்தோஷத்திற்குக் காரணமாகும் இன்னொரு விடயம் தமிழ் மக்களின் எதிர்ப்புக்குக் காரணமாகலாம். இந்த பரஸ்பர நேர்மாறான தேவைகள் பற்றி முக்கிய கவனம் கொண்டு எல்லோராலும் உடன்பாட்டிற்கு வர முடியுமான தீர்வொன்றுக்கு வருவது கஷ்டமான காரியமாயினும், வெற்றி கொள்ள வேண்டியுள்ளதும் அந்த இலக்கையேயாகும்.

கொண்டு ஒரு நேரம் முழு நாட்டுக்குமே அழிவைக் கொண்டு வந்து தரலாம். ரணில் விக்கிரமசிங்கவிற்கு தேர்ந்தெடுப்பதற்கு மாற்று வழிகள் பல இல்லையென்றே கூற வேண்டும். உள்ளது ஒரேயொரு மார்க்கம் மட்டுமே. அது கடினமானதும் சிக்கலானதுமாகும்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலம் இருந்த போதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி எதிர்க்கட்சியின் பக்கமே உள்ளது. சமாதானத்திற்காக வேண்டி பொதுமக்கள் ஆதரவு கிடைத்திருப் பினும், தனக்கு எதிராக வாக்களித்த அதிகமான மக்கள் தொகையினரும் நாட்டில் வாழ்கின்றனர். பொ.ஐ.மு. ஆட்சியின் கீழ் தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டவைகளை ஐ.தே.க.வினரால் இலகுவில் மறக்க முடியாதவைகளாவதோடு, எல்லாவிதமான நோவுகளையும் மறந்து விட்டு புதிய அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் நிலையில் எதிர்க்கட்சிகளுக்கு வாக்களித்த வர்களும் இல்லை. இனரீதியாக பிளவுபட்டுள்ள மக்களிடையேயும் இருப்பது நேர்மாறான அபிலாஷை களேயாகும். வேகமாக உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவு பற்றிய பிரச்சினையும் பொதுமக்களின் கொள்கைகளில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

தீர்வொன்றிற்காக வேண்டி அனைவரும் உடன்பாட்டிற்குக் கொண்டு வரும் நிலையொன்று இல்லாவிடினும், உடன்படாத மக்களில் அதிகமானவர்களை எதிராகச் செயற்படும் நிலைக்குச் செல்லவிடாமல் வைத்துக் கொள்வது தீர்வொன்றை ஏற்படுத்திக் கொள் வதற்காக உள்ள முக்கிய நிபந்தனையொன்றாகும். தீர்வொன் றிற்கு புலிகளின் உடன்பாடும் தமிழ் மக்களின் உடன்பாடும் மட்டும் போதாது. அதற்காக வேண்டி தமிழ் முஸ்லிம் மக்களின் உடன்பாடுகளும் அத்தியாவசியமானதாகும்.

தீர்வைத் தேடிச் செல்லும் பயணத்தின் போது வேறு தவறுகள் ஏற்படாமலிருப்பது அத்தியாவசிய மாவதோடு, எதிர்சாராருக்கு தவறு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்காதிருத்தலும் வேண்டும். அதற்கு அடுத்தபடியாக இரண்டு சார்பினருக்கும் புறம்பாகவுள்ள இன்னொரு சக்திக்குப் பிரச்சினை களை ஏற்படுத்தச் சந்தர்ப்பம் வழங்காதிருத்தலும் வேண்டும்.

புலிகளின் சந்தோஷத்திற்குக் காரணமாகும் ஒரு நடவடிக்கை இராணுவத்தின் எரிச்சலுக்குக் காரணமாகலாம். அதேபோன்று இராணுவத்தினரை மகிழ்விக்கும் ஒரு நடவடிக்கை புலிகளின் எதிர்ப்புக்குக் காரணமாகலாம். சிங்கள முஸ்லிம் மக்களின் சந்தோஷத்திற்குக் காரணமாகும் இன்னொரு விடயம் தமிழ் மக்களின் எதிர்ப்புக்குக் காரணமாகலாம். இந்த பரஸ்பர நேர்மாறான தேவைகள் பற்றி முக்கிய கவனம் கொண்டு எல்லோராலும் உடன்பாட்டிற்கு வர முடியுமான தீர்வொன்றுக்கு வருவது கஷ்டமான காரியமாயினும், வெற்றி கொள்ள வேண்டியுள்ளதும் அந்த இலக்கை யேயாகும்.

இந்தக் கஷ்டமான பயணத்தின் போது பொ.ஐ.மு. அரசாங்கத்திற்கு இருந்த சில இலாபங்கள் ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு இல்லை. பொ.ஐ.மு. பாராளுமன்ற அதிகாரமும் ஜனாதிபதி அதிகாரமும் இருந்தன. ஐ.தே.முன்னணியிடம் உள்ளது பாராளுமன்ற அதிகாரம் மட்டுமே யாகும். பொ.ஐ.மு. அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போது ம.வி.மு. செயற்பட்டது பொ.ஐ.மு. அரசாங் கத்தை விமர்சித்தாலும், அதற்கு எதிராக தீர்க்கமான எதிர் நடவடிக்கைகளை முன்னெடுக்காத நிலையிலேயாகும். இருந்தாலும் ஐ.தே.மு. ஆட்சியின் கீழ் ம.வி.மு. செயற்படுவது அதற்கு மாற்றமான முறையிலேயேயாகும்.

சமாதானத்திற்காகச் செல்லும் இந்தப் பயணத்தின் போது உள்ள அடிப்படைச் சிக்கல்களுக்கு தீர்வு களைத் தேடிக் கொள்வது எவ்வாறு என்ற கேள்வியில் சமாதானச் செயற்பாடுகள் தங்கியுள்ளன. வெற்றி பெற்றவுடன் தமக்கு வாக்களித்த மக்கள் ஆர்வமான நிலையில் இருக்கும் போதே இந்தப் பிரச்சினைக்கு தீர்வைத் தேடிக் கொள்ள வேண்டும். இருந்தாலும் அது நடைபெறவில்லை. இல்லை யேல் சமாதானச் செயற்பாட்டை முக்கியமான இடத்தை நோக்கிக் கொண்டு சென்று திரும்பி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடிக் கொள்ள வேண்டும். இல்லையேல் தனக்கு எதிராக எந்த விதமான தடங்கல்களையும் செய்ய முடியாத நிலையில் சந்திரிகாவை வைத்துக் கொள்ளும் நிலையொன்று இருத்தல் வேண்டும்.

சமாதானத்தை நோக்கிச் செல்லும் பயணத்தின் போது எதிர்கட்சிகள் அதற்கு ஒத்துழைப்பைத் தரும் நிலையில் வைத்துக் கொள்வது அத்தியாவசியமானதே. இருந்தாலும் அவர்களைத் திருப்திப்படுத்தும் நிலையில் வைத்துக் கொள்வதற்காக வேண்டி சமாதானத்திற்காகப் பயணம் செய்யும் வாகனத்தின் "ஸ்டியரிங்கை"" தனது தலைவியின் கைகளில் வைத்திருக்கச் சந்தர்ப்பம் வழங்கி முன்னோக்கிச் செல்லும் கொள்கை பாரிய அழிவை ஏற்படுத்தவே வழி வகுக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரணிலின் பேச்சு: கீறல் விழுகிறதா?

-நாசமறுப்பான்


நீண்ட கிட்டத்தட்ட ஒரு வருட காலத்துக்குப் பிறகு மீண்டும் இந்த அரசியல் பத்தியை எழுத உட்காரும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிற திருப்தியுடன் எழுதத் தொடங்கும் போது ஒரு சுவையான விடயம் தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தனது வழமையான ஏற்ற இறக்கமற்ற குரலில் பாராளுமன்றத்தில் தனது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டுக் கொண்டிருக்க, அதை தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கையில் நடந்தது, நடப்பது, நடக்கப் போவது என்று முக்காலமும் உரைக்கும் ஒரு சாத்திரியின் பேச்சைக் கேட்கிற உணர்வு என்னுள் எழுந்தது. முன்னால் இருந்து சாத்திரம் கேட்பவரின் முகபாவத்தை வைத்து அவரை முழுதாக எடை போட்டு விடுகிற "சாத்திரி" வருங்காலத்தில் என்னவெல்லாம் நடந்து அவர் எப்படியெல்லாம் முன்னேறப் போகிறார் என்றும், இப்போது எப்படி எல்லாம் அவர் கஸ்டங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார் என்றும் மிகவும் உற்சாகமாகச் சொல்வார். கேட்பவரின் முகபாவம் சொல்பவரின் உற்சாகத்தை கரைபுரண்டோடச் செய்துவிடும். ஆனால் நடந்து முடிந்தவைகள் பற்றிய கேள்விகளை அவர் 'சாத்திரியின்' உண்மைத் தன்மையைப் பரிசோதிப்பதற்காகக் கேட்டுவிட்டாலோ!. அவரது முகத்தில் கலவரம் தொடங்கிவிடும். இப்படியும் இருக்கலாம் அப்படியும் இருக்கலாம் என்று சமாளிக்கத் தொங்கி விடுவார். உறுதியாக எதையும் சொல்லாமல் சுற்றிச் சுற்றி எதையாவது சொல்லி வார்த்தைகளின் அலைக்குள் கேட்பவரை மூழ்கடித்து அவர் சொல்வதெல்லாம் உண்மைதானோ என்று அவரையே நம்பவைத்துவிட வேண்டும் என்ற அளவுக்கு அவரது கதை தொடரும். ஆனால் எதுவும் உறுதியாக இருக்காது.

எனக்கு எப்போது கலியாணம் நடக்கும் என்று கேட்ட எனது நண்பர் ஒருவருக்கு அடுத்த ஆவணியில் கட்டாயம் நடக்கும். அது தப்பினால் பிறகு அடுத்த வருடம் பங்குனியில் நடந்தே தீரும். வேணுமென்றால் நான் எழுதித்தருகிறேன் என்று ஒரு சாத்திரியார் சொன்னதைக் கேட்டிருக்கிறேன். சிரித்தபடி "ஏற்கெனவே கலியாணமாகி 2 பிள்ளைகளும் இருக்கின்றன"" என்று நண்பர் கூறியதும் சாத்திரியார் ஒருகணம் ஆடிப்போய் விட்டார். பிறகு சமாளித்துக் கொண்டு 'நீங்கள் நடக்கவில்லை என்று சொன்னதால் நான் கடந்த கால பலனைப் பார்க்கவில்லை". கல்யாணபலன் மாறி மாறி வரும்"" என்று சமாளித்தார்.

ரணில் விக்கிரமசிங்க யுத்தத்தின் கொடுமை, இருதரப்பும் வெற்றியின்றி அநியாயமாக அழிவை எதிர்கொள்வது, அதனால் ஏற்படும் பொருளாதார



நெருக்கடி என்பன பற்றியெல்லாம் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் பேசினார். ஆனால் அவரது பேச்சில் அடுத்ததாக வந்த முக்கிய பிரச்சினை புலிகள் மீதான தடையை நீக்குதல் பற்றியது.

அவ்வளவு நேரம் தெளிவாகப் பேசிய அவர் சாத்திரியைப் போல தடுமாறத் தொடங்கினார். சர்வதேச சூழல், மற்றவர்களுக்கு இதனால் ஏற்படக் கூடிய பாதிப்பு என்பவை பற்றி எல்லாம் நாம் கட்டாயம் யோசித்துப் பார்க்க வேண்டும். யோசித்து இது தொடர்பாக நாம் என்ன செய்யலாம் என்று தீர்மானிக்க வேண்டும் என்று தடுமாறத் தொடங்கினார். இனப்பிரச்சினையை 24 மணி நேரத்தில் தீர்க்க முடியாது என்று அவர் கூறியபோதும், இனப்பிரச்சினை காரணமாக ஏற்பமட்ட மனப்புண்களை 24 மணி நேரத்தில் மறந்துவிடமுடியும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது என்று பேசிய போதும் அவரிடம் வெளிப்பட்ட உறுதி, தடையை நீக்குவது பற்றி பேசத் தொடங்கியதும், எங்கேயோ ஓடிப் போய்விட்டது.

புலிகள் மீதான தடையை நீக்குவது புலிகளின் எண்ணத்தை நிறைவேற்ற உதவியளிப்பதாகி விடுமோ என்ற சந்தேகம் இருப்பதை அவரது பேச்சு வெளிப்படுத்தியது. புலிகளின் எண்ணம் என்று அவர் கருதுவது எதை? பேச்சுவார்த்தையை நடாத்துவது என்ற போர்வையில் தடையை நீக்கி விட்டு சுதந்திரமாக மீண்டும் யுத்தத்திற்கு அவர்கள் தம்மை வேகமாக தயார் செய்து 'பயங்கரவாத" செயலில் இறங்குவது என்பதைத்தானா? அப்படியானால், புலிகளை இன்னமும் நாம் முழுதாக 'தடைகளை நீக்குமளவுக்கு நம்பவில்லை" அப்படி நம்புவதற்கு

> **சர்வதேச சூழல், மற்றவர்களுக்கு இதனால் ஏற்படக் கூடிய பாதிப்பு என்பவை பற்றி எல்லாம் நாம் கட்டாயம் யோசித்துப் பார்க்க வேண்டும். யோசித்து இது தொடர்பாக நாம் என்ன செய்யலாம் என்று தீர்மானிக்க வேண்டும் என்று தடுமாறத் தொடங்குகிறார். இனப்பிரச்சினையை 24 மணி நேரத்தில் தீர்க்க முடியாது என்று அவர் கூறியபோதும், இனப்பிரச்சினை காரணமாக ஏற்பமட்ட மனப்புண்களை 24 மணி நேரத்தில் மறந்துவிடமுடியும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது என்று பேசிய போதும் அவரிடம் வெளிப்பட்ட உறுதி, தடையை நீக்குவது பற்றி பேசத் தொடங்கியதும், எங்கேயோ ஓடிப் போய்விட்டது.**

உரிய அளவுக்கு எங்களிடையேயான பேச்சுகளில் இன்னமும் புரிந்துணர்வு எய்தப்படவில்லை என்று சொல்வது தானே? அந்தப் புரிந்துணர்வினை நோக்கிய செயற்பாடாகத்தான் நாம் செயற்பட்டு வருகிறோம் என்று கூற வேண்டியது தானே? ஏன் ரணில் அப்படிக் கூறவில்லை?. ஏன் புலிகள் சமாதானம் மீதான நேர்மையான அக்கறை கொண்டிருப்பது தெளிவாக வேண்டும் என்று கூறினார்? அரசு தரப்பு எல்லாக் காலமும் நேர்மையாக இருந்தது என்று அவர் உண்மையில் நம்புகிறாரா?

எதற்காக அந்நிய நாடுகளுக்கு இது பாதகமாக அமையுமோ என்பதை அவர் முக்கியமான ஒரு விடயமாகக் குறிப்பிட வேண்டும்? புலிகளை இங்கே தடை நீக்கம் செய்வது இந்தியாவையும் அமெரிக்காவையும் லண்டனையும் பகைக்கிற விடயமாக ஆகிவிடும் என்பதற்கு அவர் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

இந்தியாவில் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட பின்னும் இலங்கையில் அது தடைசெய்யப்படாமல் இருக்கவில்லையா? இலங்கையில் அது தடைசெய்யப்பட்ட பின்னும் நீண்ட காலமாக அது அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் தடை செய்யப்படாமல் இருக்கவில்லையா? இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் இடையறாத பிரயத்தனத்தின் பின்னர் தான் புலிகள் அமைப்பு அங்கு தடைசெய்யப்பட்டதே அன்றி புலிகள் அங்கு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதனால் அல்ல என்பதை பிரதமர் மறந்துவிட்டாரா? புலிகள் மீதான தடை நீக்கம் எப்படி அந்த நாடுகளுக்கு சிக்கலாக இருக்க முடியும். அவர்கள் புலிகள் மீது போட்டுள்ள தடையை நீக்கிவிடுமாறு, இலங்கை அரசாங்கம் புலிகளுக்காகப் பரிந்து கேட்காதவரை எப்படி அது அவர்களுக்குச் சிக்கலாக இருக்க முடியும்? புரியவில்லை, பிரதமரின் இந்த 'வளவளா" உரைக்கு இரண்டே இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும். ஒன்று புலிகள் மீதான தடையை நீக்குவது தனது கட்சிக்குள்ளும், எதிர்கட்சிகள் மத்தியிலிருந்தும் எழக்கூடிய எதிர்ப்பை வலுப்படுத்திவிடும் என்று அவர் அஞ்சுவது. இரண்டாவது, புலிகள் மீதான அமெரிக்க, பிரித்தானிய தடைகள் தான் அவர்களை பலவீனமான நிலைக்குத் தள்ளி பேச்சுவார்த்தை மேசைக்கு இழுத்துவந்தது. யுத்த நிறுத்த உணர்வை ஏற்படுத்தியது என்று பொதுவான கருத்தை அவரும் ஏற்றுக் கொண்டிருப்பது. இது ஒருவேளை உண்மையாக இருந்தாலும் கூட பேச்சுவார்த்தை, சமாதான முயற்சி என்பவற்றிற்கு அடிப்படையான ஒரு தவறான - அதாவது எதிராளி பலவீனமாக இருக்கையில் செய்யப்படும் உடன்பாட்டில் தமது பக்கத்துக்கு

சாதகமான முடிவை எடுக்கலாம் என்கிற மிகத் தவறான, நியாமற்ற நிலைப்பாடு இருப்பதை பிரதமர் மறந்து விட்டிருப்பதையே இது காட்டுகிறது.

சமாதானம் பலவீனத்தில் இருந்து உருவாகுவதில்லை. பலத்தினால் சாதிக்கப்படுவதில்லை. பரஸ்பர நட்புறவின் மூலமாக, சமத்துவத்தை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவே சாதிக்கப்படுவது என்பதை மறந்தால் எந்த நல்முயற்சியும் வெற்றி பெறுவதற்கான சாத்தியம் அற்பமே.

புலிகள் தடையை நீக்குமாறு கோருகிறார்கள். அது அவர்கள் பக்க நியாயம். தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பும் அதையே கூறுகிறது. அதுவும் அவர்களது நிலைப்பாடு. அதை உடனடியாக செய்யமுடியாமல் இருக்கிறது என்று அரசு சொன்னால் அதைப் புரிந்து கொள்வது ஒன்றும் கஸ்டமில்லை. அதற்கு அவகாசம் வேண்டும், இன்றும் சற்று தூரம் நாம் போக வேண்டும், பேச வேண்டும் என்று சொன்னால் அது பிரதமர் பக்கத்தில் சொல்லப்படும் நியாயமான ஒரு கருத்தாக விளங்கிக் கொள்ளப்பட முடியும்.

ஆனால் ஏனைய நாடுகள் இதை எப்படி எடுக்கும் என்று யோசிக்க வேண்டும் என்பது எந்த தாக்கமுமற்ற ஒரு நியாயம். அதை விடவும் அவர்கள் இதனால் கோபித்து எமக்கு தரும் உதவிகளை நிறுத்தி விடுவார்களோ என்று அஞ்சுவது அதைவிடவும் அற்பத்தனமான நியாயம்.

முதலில் சந்திரிகா சமாதானம் பற்றிப் பேசி மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுப் பதவிக்கு வந்தார். பிறகு இப்படித்தான் அவரது அடியும் சறுக்கியது.

இப்போது ரணிலின் முறை. ஆரம்பம் வழமைபோல் அழகாகத்தான் இருந்தது. இன்னமும் இருக்கிறது. ஆனால் இப்பேச்சின் மூலமாக அவரது குரலில் கீறல் விழத் தொடங்குகிறது. இந்தக் கீறலை தொடரவிடாமல், நேர்மையாகவும், வெளிப்படையாகவும் உண்மையைப் பேசுவது மிகவும் அவசியம். அப்போது தான் நல்லது நடக்கும் வாய்ப்பு ஏற்படும். ஒளிவு மறைவும் சாதுரியமும் நிரந்தர வெற்றியைத் தர முடியாது. இதற்கு வரலாற்றில் எமது வரலாற்றிலேயே பல உதாரணங்கள் உண்டு. ஒருவகையில் எமது வரலாறே இப்படித்தான் தோல்வி மேல் தோல்வியைப் பெற்றதாக உருவாகி வந்திருக்கிறது.

உண்மை எவ்வளவு கசப்பானதாக இருந்தாலும், அது எவ்வளவு உறுத்துவதாக இருந்தாலும் அது உண்மை என்பதை மறந்துவிடக் கூடாது. வெளிப்படையாகப் பேசுகிற செயற்படுகிற துணிவும், அக்கறையும் இருந்தால் மட்டுமே இந்த - இன்று எடுத்துள்ள முயற்சி வெற்றி பெறும்.

ரணில் இதைச் செய்வாரா, அல்லது பழையவர்களது பாதையில் வழிதவறி வீழ்ந்த இன்னொருவராகத் தானும் ஆகிப்போவாரா?

அவர் தான் பதில் சொல்ல வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஜே.வி.பி:

# மார்க்சுடன் மார்க்சுக்கு எதிராக...

-என்.சரவணன்-

> "...பாசிஸ்டுகள் தங்களின் சக்தியையும், ஸ்தாபனத் திறமையையும் பறையடித்துக்காட்டி ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதியை தங்களுக்கு ஆதரவளிக்குமாறு செய்து விடுவார்கள். அதிலும் மிதவாத ஆளும் வர்க்கத் தலைமை நம்பகத் தன்மையை இழந்து வருகிறதோ அல்லது ஸ்திரமற்றதான சூழல் உருவாகி வருகிறதோ, அந்த இடைவெளியை பாசிஸ்டுகள் கைப்பற்றி விடுகிறார்கள்.... இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் குழப்பியடிக்கப்பட்டு பலவீனப்படும் போது பாசிசம் தலைதூக்கி விடுகிறது..."
>
> "...எப்போதெல்லாம் வளமான சிந்தனைகளும் ஜனநாயகத் தன்மைகளும் முடங்குகிறதோ எப்போதெல்லாம் முதலாளித்துவ தேசியவாதம் தோல்வியைத் தழுவுகின்றதோ- அப்போது பழமைவாதம் பாசிசத்துக்கான தளத்தை உருவாக்கிக் கொள்கிறது.."
>
> 
>
> "...பாசிசம் பெரு முதலாளிகளாலோ நிலப்பிரபுக்களாலோ உருவாக்கப்படுவதல்ல. குட்டி பூர்சுவாக்களாலும் வியாபாரிகளாலும் உருவாக்கப்படுவது.."
>
> - கிரெம்ஷி

இன்றைய நிலையில் இலங்கையின் பேரினவாத கருத்துருவாக்கத்திற்கும், செயல்வாதத்துக்கும் (activism), தலைமை தாங்கும் சக்தியாக ஜே.வி.பி. ஆகிவிட்டிருக்கிறது என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் மெய்ப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் வரலாற்றில் சோஷலிசம் தேசிய சோஷலிச சிந்தனையை நோக்கி நகர்ந்து, பின் பேரினவாதம் ஈறாக பாசிசத்தை வந்தடைந்த சந்தர்ப்பங்கள் நமக்கொன்றும் புதிய செய்தியல்ல. இது உலகில் நடவாததும் அல்ல. ஹிட்லரின் பாசிசப் பின்னணியும் இதே பரிணாமத்தைக் கொண்டது தான்.

தனிநபர்களாக இருக்கட்டும், இயக்கமாகட்டும் இந்த அனுபவங்களைக் காண்கிறோம், பிலிப் குணவர்தனா, நளின் டி சில்வா, சம்பிக்க ரணவக்க போன்ற பாத்திரங்களின் உருவாக்கத்தின் பின்புலமும் இதில் அடங்கும்.

இந்த வரலாற்றின் நீட்சியாக இன்று ஒரு ஜே.வி.பி.

மார்க்சிடம் கற்று மார்க்சியத்துக்கே தலைகீழாக செயற்படுகிற வரிசையில் ஜே.வி.பி வந்தடைந்திருப்பது என்பது வெறும் தற்செயல் நிகழ்வல்ல. இலங்கையின் சிங்கள தேசியவாதமும், சிங்கள பேரினவாதமும் சமாந்தரமாக போட்டிபோட்டுக்கொண்டு வளர்ந்த அதே சமாந்தரத்தோடு தான், மார்க்சிய போர்வைக்குள் ஏனைய பேரினவாத சக்திகளும் தம்மை பலப்படுத்தியும், கொழுத்தும் வந்திருக்கின்றன.

ஜே.வி.பி.யின் உருவாக்கத்தின் சித்தாந்தத் தளம் வர்க்க அரசியலாக இருந்த போதும் ஜே.வி.பி.யின் இருப்பு சார்ந்த சித்தாந்த தளமானது பேரினவாத நீக்கம் பெற்றதாக அமையவில்லை. அதன் தொடர்ச்சி இன்று பேரினவாத அரசியலை விட்டுப்பிரியமுடியாத, பேரினவாத அரசியலையே முதன்மை நிகழ்ச்சி நிரலாகக் கொள்கின்ற இடத்திற்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. ஜே.வி.பியின் ஒவ்வொரு காலகட்டத்தேய அரசியல் நடவடிக்கைகளைப் பார்த்தாலும், அதன் கோசங்களைப் பார்த்தாலும் அவ்வப்போது பிரதான அரசியல் சந்தையில் செல்லுபடியான கோசங்களை முன்கையெடுத்து அதற்கு தலைமை கொடுக்கும் சக்தியாக விளங்கி வந்திருப்பதைக் காணலாம். இங்கு குறிப்பிடுகின்ற சந்தையில் செல்லுபடியான கோசமென்பது சிங்கள சிவில் சமூகத்தில் அந்தந்த காலகட்டத்தில் எழுந்த பேரினவாத கோசங்களே. இதில் கொஞ்சம் கொருளாதார காரணிகளும் சேர்த்துக் கொள்ளப்படும்.

இந்த வழிமுறையின் காரணமாகத் தான் ஆளும்குழுமம் 1983 இனக்கலவரத்திற்கு காரணமென்கிற குற்றச்சாட்டை சுமத்தி ஜே.வி.பி.யின் மீது தடைவிதித்து, அடக்குமுறையை கட்டவிழ்க்கவும் வசதியாக இருந்தது.

1987இல் இலங்கை இந்திய உடன்படிக்கையையும், மாகாண சபைகள் முறைமையை எதிர்த்தது ஜே.வி.பி. மாகாண சபை ஈழத்துக்கு வாய்ப்பளிக்கும் என்று கூறி மாகாண சபைத் தேர்தலில் வாக்களித்தவர்களை கொன்ற அதே ஜே.வி.பி. இன்று அதே மாகாண சபையில் பிரதிநிதித்துவம் வகிப்பதென்பது வெறும் அரசியல் தந்திரோபாயம் சார்ந்த விடயம் அல்ல. பெரும் அரசியல் மோசடியே.



இன்று இலங்கையில் இடதுசாரி இயக்கமென்று ஒன்றுமில்லை. அனைத்து இடதுசாரி இயக்கங்களும் கடைசியாக வந்தடைந்ததும், அழிந்து போனதுமான அதே பாராளுமன்ற பாதைவழியே இன்னும் பல படிகள் மேலே போய் தனது அழிவைத் தேடிக் கொண்டிருக்கிறது. ஆனால் இம்முறை ஜே.வி.பி. தோல்வியுறாது. ஏனெனில் அது இடதுசாரித்துவ நாமத்தை இழந்து நாளாகிவிட்டது. இனி அது ஒரு தேசிய, வலதுசாரி, பாராளுமன்ற, இனவாதகட்சி. இதன் அடுத்த கட்டம் பாசிசமாக வடிவமெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்படியான ஒரு வடிவம் கொண்ட அமைப்பில் சோஷலிசத்தின் கூறுகள் இல்லாமலிருக்காது. ஹிட்லரின் தேசிய சோசலிச சித்தாந்தத்திலும் இந்த குணங்கள் இருக்கவில்லையா?

ஜே.வி.பி. கடந்த தேர்தல் பிரச்சாரத்தின் போது பல பத்திரிகைகளில் விளம்பரமொன்றை வெளியிட்டிருந்தது.

பொருளாதார அபிவிருத்தி பற்றிய அணுகுமுறைகளை சீனாவிடமிருந்தும், சட்டம், பொறுப்பு பற்றிய அணுகுமுறைகளை அமெரிக்காவிடமிருந்தும், சமூக நலன்புரி அணுகுமுறைகளை ஐரோப்பாவிலிருந்தும், தேசிய பாதுகாப்பு அணுகுமுறைகளை இந்தியாவிலிருந்தும், தேசப்பற்றை கியுபாவிடமிருந்தும், பெற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம் என்பதே அந்த விளம்பர அறிவிப்பு. உண்மையில் இன அடக்குமுறை அணுகுமுறைகளை ஹிட்லரிடமிருந்தும் என்கிற வசனத்தை சேர்த்திருந்தால் ஜே.வி.பி.யின் பாதை மேலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும்.

நடந்துமுடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி.யை விட இனவாதம் கக்கிய வேறு கட்சிகள் இருக்குமா என்கிற கேள்வியை பரவலாக கேட்கக்கூடியதாக இருக்கிறது. சிஹல உறுமயவின் நிகழ்ச்சி நிரலை அப்படியே சுவீகரித்ததால் அத் தேர்தலில் சிஹல உறுமயவின் வாக்கு வங்கிக்கு போட்டியாக இருந்தது ஜே.வி.பி.தான். சிஹல உறுமய தோற்கடிக்கப்படுமளவுக்கு அந்த வாக்கு வங்கியை அப்படியே கைப்பற்றிக்கொண்டது ஜே.வி.பி. தனது நிகழ்ச்சி நிரலைக் கைப்பற்றிக் கொண்ட ஜே.வி.பி.யை நோக்கி சிஹல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க ஒரு கட்டத்தில் முடிந்தால் தலதா மாளிகைக்குச் சென்று வணங்கி சிங்கள பௌத்தத்தை நிரூபிக்கட்டும் என்று சவாலிட்டார். ஜே.வி.பி. தலைவர் சோமவங்ச வந்தார் தலதா மாளிகைக்கு போய் பிக்குமாரிடம் காலில் விழுந்து வணங்கி ஆசிபெற்றுத் திரும்பி அந்தச் சவாலை நிறைவேற்றினார்.

அவரின் தேர்தல் பிரச்சார உரைகள் அனைத்துமே மோசமான இனவாதத்தைக் கக்கின. யுத்தவெறிபிடித்த அந்த உரைகளின் போது, அரசு தமது சொற்படி கேட்டால் இராணுவத்துக்கு 50,000 பேரைத் திரட்டித் தருவதாகவும் கூறினார். மேலும்

"நாங்கள் இந்த அரசாங்கங்களைப் போல போருக்கு அடிக்கடி இடைவேளை தந்துகொண்டிருக்க மாட்டோம். அடி கொடுத்தால் எப்படி கொடுப்போம் தெரியுமா, அமெரிக்கா ஆப்கானிஸ்தானுக்கு கொடுப்பதைப்போல மலைகளை குடைந்துகொண்டு ஓய்வு கொடுக்காமல் அடித்து முடிப்போம்." என்று தேர்தல் பிரச்சாரத்தின் போது சொன்னவர் ஜே.வி.பி.யின் தலைவர் சோமவங்ச அமரசிங்க.

ஜே.வி.பி. கடந்த டிசம்பர் 26ஆம் திகதி அரசியல் குழுவால் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது. அதன் தலைப்பு "தமிழீழ கோரிக்கையைக் கைவிட்டு ஆயுதங்களை ஒப்படைக்கும்வரை புலித்தடையை நீக்காதே." இருபக்கங்கள்கொண்ட அந்த அறிக்கையின் இறுதியில்

"இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதென்பது புலிப்பயங்கரவாதிகளுக்கு கப்பம்கொடுத்தோ அல்லது கீழ்படிவதன் மூலமாகவோ அல்ல." அரைவாசிக்கு தோல்வியடைந்த புலிப்பயங்கரவாதத்தை துடைத்தெறிவதன் மூலமாகவே....

"ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் நிபந்தனையின்றி புலிப்பயங்கரவாதத்துடன் போர் நிறுத்தம் செய்திருக்கிறது. இன்னும் சிலநாட்களில் நிபந்தனையின்றி புலித்தடையை நீக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது....

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனி அரசுக்கான கோரிக்கைக்காக நடாத்திவரும் ஆயுத இயக்கத்தைக் கைவிட்டு அவர்கள் வசமுள்ள ஆயுதங்களை ஒப்படைக்கும் வரை அவர்கள் மீதுள்ள தடையை நீக்குவது பற்றி குறைந்தது சிந்திக்கக் கூடக் கூடாது என இந்த அரசாங்கத்தை நோக்கிமக்கள் அழுத்தம் பிரயோகிக்க வேண்டிய காலம் வந்திருக்கிறது.

இனவாதத்தை திருப்திப்படுத்துகின்ற அறிக்கைகளையும், சுவரொட்டிகளையும் உடனுக்குடன் வெளியிட்டு தமது சிங்கள பக்தி நிலைப்பாட்டை அறிவித்துக் கொண்டிருக்கும் போக்கின் தொடர்ச்சி இதுவென்றாலும் இதன் உள்ளடக்கத்தில் இருக்கின்ற விசமத்தைப் போலவே வேடிக்கையை இனங்காண்பது முக்கியமானது.



"புலிப்பயங்கரவாதம் பாதி தோல்வியடையச் செய்யப்பட்டிருக்கிறது. இனி செய்யவிருப்பது அதனை முழுமையாக துடைத்தெறிவதே. தடை நீக்கம், போர்நிறுத்தம் இரண்டும் அபாயகரமானது. புலிகள் தமிழீழத்தை கைவிட வேண்டும். ஆயுதப் போராட்டத்தை கைவிட வேண்டும். ஆயுதங்களை கைவிட வேண்டும். அதுவரை பேச்சுவார்த்தை பற்றி கூட சிந்திக்கக் கூடாது..."

இனி வேடிக்கையைப் பார்ப்போம். புலிகளை துடைத்தெறிவதே செய்யவேண்டியது என்று ஜே.வி.பி கூறுகிறது. அப்படியெனில் ஈழக்கோரிக்கை, ஆயுதப்போராட்டம் என்பனவற்றை கைவிடுதல், என்பது செல்லுபடியற்றதாகிறது. அதன் இன்னொருபக்கம் என்னவெனில் ஈழத்தையும், போராட்டத்தையும் கைவிட்டு, ஆயுதங்களையும் ஒப்படைத்து விட்டால் புலிகளின் பின்னால் போக வேண்டிய தேவைதான் என்ன? அதன் பின்னர் ஜே.வி.பி.யின் போர் திட்டத்தின்படி புலிகளை தோற்கடிப்பது தான் பாக்கி.

ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி. தடை செய்யப்பட்டிருந்த போது ஜே.வி.பி.யின் செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்க அப்போது வெளியிட்ட அறிக்கையில் "ஜே.வி. பி.யின் தடையை நீக்க வேண்டும். அடக்குமுறைச் சட்டங்களை நீக்க வேண்டும். அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். வஞ்சகமாக ஆட்சிக் காலத்தை நீடித்த அரசாங்கம் பதவி நீங்கி தேர்தலை நடாத்த வேண்டும்." தமது ஆயுதங்களைக் கைவிடுவது பற்றி ஜே.வி.பி. அப்போது குறிப்பிடவில்லை. அரச அதிகாரத்தை கோருவதை கைவிடுவது பற்றி பேசவில்லை. அந்நோக்கத்தைக் கொண்ட ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருவது பற்றி கோரவில்லை. ஆனால் அதனை நிபந்தனையாக வைத்தவர் ஜே.ஆர். இன்று இந்த நிபந்தனைகளை இடுவது ஜே.வி.பி. விதிக்கப்பட்டிருப்பது புலிகள்.

இன்று ஜே.வி.பி. ஒரு அதிகாரக் குழுமத்தின் நிலையை அடைந்திருப்பதும், ஒரு அடக்குமுறை இயந்திரத்தின் குரலாக ஆகியிருப்பதையுமே இங்கு நமக்கு புலப்படுத்தியிருக்கிறது. இன்றைய ஜே.வி.பி. இது தான்.

பொ.ஐமு அரசாங்கத்தின் பிரபலமான பிரச்சார உத்தியாக பிரயோகித்த புலி, ஜே.வி.பி., யு.என்.பி கூட்டுச் சதி எனும் சூத்திரம் பொ.ஐ.மு-ஜே.வி.பி. பந்தத்தின் பின் இன்று புலி, யு.என்.பி கூட்டு என மாற்றப்பட்டுவிட்டது. பொ.ஐ.மு மற்றும் யு.என்.பி. யால் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்ட ஜே.வி.பி. இன்று அந்த ஆளுங்குழுங்களுடன் சேர்ந்து புலிகளை பயங்கரவாத முத்திரை குத்துவதை ஒரு வேடிக்கையாக உணர்வதைவிட வஞ்சகமாகவே விளங்கிக் கொள்ளலாம்.

வடக்கு கிழக்கில் கடந்த காலங்களில் மக்கள் மீது நடத்தப்பட்ட அரச பயங்கரவாதத்தை எதிர்த்து சாதாரண சிங்கள அமைப்புக்கள் கூட அறிக்கையாவது விட்டபோதும் ஜே.வி.பி. மௌனமாக அதனை பார்த்துக்கொண்டிருந்தது. அதற்கு அப்போது கூறிய காரணம் அங்கு நடப்பதாக கூறும் செய்திகள் குறித்து தம்மால் ஊர்ஜிதப்படுத்தமுடியவில்லை. என்பதே. ஆனால் அதே ஜே.வி.பி. முல்லைத்தீவில் என்ன நடக்கிறது. புலிகள் என்ன செய்கிறார்கள் என்பது தமக்குத் தெரியும் என்று இனவாதம் தோய்த்தெடுக்கப்பட்ட பல பொய்களை கடந்த தேர்தல் கூட்டங்களில் அள்ளித் தெளித்தது. அங்கு மக்களுக்கு என்ன நடக்கிறது என்பதை விட புலிகள் என்ன செய்கிறார்கள் என்பது ஜே.வி.பிக்கு தெரிந்திருப்பது ஶ்ரீ லங்கா புலனாய்வுப் பிரிவினரை பிச்சை கேட்கச் செய்கின்ற ஒரு விடயம்.

தேர்தல் காலத்தில் கொல்லப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினருக்காக ஒட்டப்பட்ட சுவரொட்டியில் உன்னை கொன்றவர்களை நாங்கள் தோற்கடிப்போம். என்று எழுதப்பட்டிருந்தது. அது முக்கியம் தான் என்றாலும் இன்னொரு விடயத்தை நாங்கள் கூறலாம், "தோற்கடிக்க முடியாவிட்டால் துடைத்தெறிவது" என்பது உனது கொள்கையாக இருந்திருக்க முடியாது.

பாராளுமன்றவாத வங்குரோத்து அரசியல் சந்தையில் ஜே.வி.பி.யின் இருப்பானது இனவாதத்திலேயே தங்கியிருக்கிறது. யுத்தத்துக்கு காரணம் யுத்தமே என்கிற வாதத்தை அப்படியே தலைகீழாக யுத்தத்துக்கு காரணம் இனவாதமே என்றும் இப்போது பிரச்சினை தமிழ் இனவாதமென்றும், தமிழ் இனவாதம் ஆயுதம் தாங்கிய பயங்கரவாதம் என்றும் அதனை முற்றுமுழுதாக துடைத்தெறிவதே தமது கடமையென்றும் முழு சிங்கள மக்களுக்கும் போதித்தும் புனைந்தும் பரப்பியும் வருகிறது ஜே.வி.பி. இலங்கையில் மட்டுமல்ல உலக அளவில் சர்வதேச கம்யூனிச இயக்கங்கள் மத்தியிலும் இடதுசாரி இயக்கமென்கிற அந்தஸ்திலிருந்து ஜே.வி.பி. நிராகரிக்கபட்டுவிட்டமை சமீப கால செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

www.tamilarangam.net



நிகரி 2
NIHARI

உரையாடியோர் :
தான்யா, சந்தியா

# துயரமான இசையிலிருந்து இனிமையான இசையை நோக்கி ...!

## சல்மா என்ற கவிஞையுடனான உரையாடல்

**'எனது பழைய /புன்னகைகளை / அழும் குழந்தைகளுக்கும் / துயருறும் மனைவியருக்கும் / வெறுப்பு மிகுந்த / கணவர்களுக்கும் தருவேன்' என்கிறார் சல்மா என்ற கவிஞை.**

**இவர் தமிழ்நாட்டின் துவரங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்தவர். இயற்பெயர் ராஜாத்தி பேகம். 'ஒரு மாலையும் இன்னொரு மாலையும்' என்ற தலைப்பில் இவரது கவிதைத் தொகுதி ஒன்று வெளியாகி இருக்கிறது. நவீன தமிழ்ககவிதை உலகுக்கு ஒரு நல்வரவு அது. கடந்த வருடக் கடைசியில் நடைபெற்ற பேருராட்சித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். அவருடனான உரையாடலிலிருந்து சில பகுதிகள்:**



ஐம்பதுக்கும் உட்பட்ட குடும்பங்களைக் கொண்ட ஒரு சிறிய கிராமம் என்னுடைய துவரங்குறிச்சி கிராமம். நிரம்பவும் மூடுண்ட சமூகம் அது. அங்கு பெண்ணுக்கென்று தனிப்பட்ட அடையாளம் இருப்பதை யாருமே விரும்ப மாட்டார்கள். இஸ்லாமிய சமூகம் என்பதால் இந்த மூடுண்ட நிலைமை மற்றைய சமூகத்தவரை விட சற்று அதிகம். நான் ஒன்பதாம் ஆண்டு படிக்கும் போது, என்னுடைய 13 வயதில், நான் பெரிய பெண் ஆகிவிட்டேன் என்று கூறி எனது படிப்பை நிறுத்தி விட்டார்கள். எனக்கோ படிக்க வேணுமென்று அளவில்லா ஆர்வம் இருந்தது. அப்பாவிடம் கெஞ்சிப் பார்த்தேன் அருகிலுள்ள ஹொஸ்டல் எதிலாவது சேர்த்து விடுங்கள் நான் எப்படியாவது படிக்கிறேன் என்றெல்லாம் கேட்டுப் பார்த்தேன். யாரும் ஒன்றுக்கும் மசியவில்லை. என்னுடைய படிப்பை நிறுத்தி விட்டார்கள். இது என்னுடைய முதலாவது இழப்பு அது தனிமையுள் என்னைத் தள்ளியது. பள்ளிக்குப் போகும் பிள்ளைகளை எல்லாம் அது ஏக்கத்துடன் பார்க்க வைத்தது.

இரண்டாவது திருமணம் நான் திருமணமே வேண்டாம் என்று பிடிவாதமாக இருந்தேன். அப்படித் திருமணம் முடித்துக் கொடுப்பதாக இருந்தாலும் ஒரு வெளியூர்க்காரருக்கு கொஞ்சம் படித்தவருக்கு திருமணம் முடித்துக் கொடுத்து விடும்படி கேட்டேன். அப்படியாவது வீட்டை விட்டு வெளியே போகலாமென்று. படித்தவர் பெண்ணைப் பண்பாக நடாத்துவார் புரிந்துணர்வுள்ளவராக இருப்பார் என்று அப்போது நினைத்தேன். படிப்புக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்பது பின்னர் தெரிந்தது.என்சொல்லை யார் கேட்டார்கள். ஒரு நாள் அம்மாவிற்குத் திடீரென ஹார்ட் அற்றாக். அம்மா கையைப் பிடித்துக் கொண்டு கேட்கிறார் திருமணம் செய்து கொள் என்று. எனக்கு அம்மாவின் மேல் பிரியம் அதிகம். அதுவும் அந்த நிலையில் என்னால் மறுக்க முடியவில்லை. பின்னர் தான் தெரிந்தது அது அவர்கள் நடாத்திய நாடகமென்று. அதற்குள் திருமணம் எல்லாம் முடிந்து விட்டது. அதற்குப் பிறகு ஒன்றுமே செய்ய முடியவில்லை. குழந்தைகள் வந்ததற்குப் பின்னர் யாரும் என்னைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றெல்லாம் நடந்து கொள்வதில்லை. நானே தன்னால் உள்ளடங்க ஆரம்பித்து விட்டேன்.

எனக்குள் இருந்தது சுதந்திரம் சார்ந்த ஒரேயொரு கனவு தான். என்னுடைய ஆசை எதிர்பார்ப்பு எல்லாமே அது தான். எனக்கு சுதந்திரம் முக்கியம். ஆனால் என்னைச் சுற்றி இருக்கிற நிலைமைகளை மீறக்கூடிய துணிவு என்னிடமில்லை. ஏனென்றால் நான் அவ்வளவாகப் படிக்கவில்லை. அதனால் பொருளாதார ரீதியாக சுயமாக நிற்பது நிரம்பவும் கடினமானது. ஆகவே இதற்குள் இருந்து கொண்டே ஒரு வெளியை உருவாக்குவோம் என்று எண்ணினேன்.

இந்த இடத்தில் என்னுடைய பெரியப்பா மகன் ஹமீது (கவிஞர் மனுஷ்யபுத்திரன் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும். அவர் தான் எனக்கு கவிதையை சொல்லிக் கொடுத்தார். தன்னுடைய கவிதை அனுபவங்களை என்னுடன் உரையாடினார். தனக்குள் நடக்கும் ஒவ்வொரு மாற்றங்களையும் அவர் என்னுடன் பகிர்ந்து கொண்டார். அவையெல்லாம் என்னையும் பாதிக்க ஆரம்பித்தன.

இன்னொருவர் கீதா. என்னிலேயே எனக்கு நம்பிக்கை இல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக இப்படியே அழிந்து போய் விடுவேன், இப்படியே மக்கிப் போய்விடுவேன் என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு கீதாவுடனான நட்பு ஒரு புத்துணர்ச்சி தந்தது. என்னுடைய கல்யாணம் முடிந்து ஆறு மாதமிருக்கும். நான் மிகுந்த கோபத்துடனிருந்த ஆனால் அதை வெளிப்படுத்த முடியாது குமைந்து போயிருந்த காலம். அப்போது "விலகிப் போகும் வாழ்க்கை" என்ற தலைப்பிட்டு ஒரு கவிதை எழுதி பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன். அந்தக் கவிதையைப் பார்த்து விட்டு கீதா எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். இவ்வளவு அருமையான கவிதையை யாரும் எழுத முடியாது என்று எழுதியிருந்தார். அந்தக் கடிதம் எனக்கு ஒரு திருப்புமுனையாகிற்று. என்னுடைய தன்னம்பிக்கை அதிகரித்தது. ஏற்கெனவே எனக்குள் நான் உருவாக்கிய வெளிக்கு ஒரு அர்த்தம் இருப்பதாகப்பட்டது.

அவநம்பிக்கைகளின் வெளிப்பாடாக, பலவீனப்பட்ட ஒரு சீவனின் வெளிப்பாடாக ஒண்டிக்கொள்ள இடம் கேட்கும் ஒரு அந்தராத்மாவாக என்னுடைய கவிதைகள் வெளிப்பட்டமைக்கு என்னுடைய தனிமை தான் காரணம். என்னுடைய கவிதைத் தொகுப்பின் முன்னுரையிலும் அது பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். தனிமை தாங்க முடியாத துக்கத்தை ஏற்படுத்திற்று. ரிவியில் எந்த விளையாட்டானாலும் பெண்கள் விளையாடும் போது மனம் ஏங்கியது. பெண்களின் சாதனைகள் பற்றி தகவல்கள் வெளியாகும் போது என்னுடைய நிலை குறித்து எனக்குள்ளேயே ஆயிரம் கேள்விகள் எழும். பழைய சினிமாக்களில் கூட பெண்கள் எந்த மாதிரியான உடைகளெல்லாம் அணிந்து நடித்திருக்கிறார்கள். அந்தளவுக்கு அவர்களுடைய சுதந்திரம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு படிக்கிறதுக்கான ஒரு அடிப்படைச் சுதந்திரம் கூட எனக்கில்லையே



அவநம்பிக்கைகளின் வெளிப்பாடாக, பலவீனப்பட்ட ஒரு சீவனின் வெளிப்பாடாக ஒண்டிக்கொள்ள இடம் கேட்கும் ஒரு அந்தராத்மாவாக என்னுடைய கவிதைகள் வெளிப்பட்டமைக்கு என்னுடைய தனிமை தான் காரணம்.

என்கிற போது மனமுடைந்து சோர்ந்து போய் விடுவேன்.

கீதாவினுடைய நட்பு என்னைத் துளிர்க்க வைத்தது. சற்று அதிகமாகப் படிக்கவும் எழுதவும் ஆரம்பித்தேன். நான் புத்தகங்கள் வாசிப்பதென்றாலோ அல்லது கவிதை எழுதுவதென்றாலோ என்னுடைய அறையைப் பூட்டி விட்டுத் தான் ஆரம்பிப்பேன். யாரும் வரமாட்டார்களில்லையா? அதேபோல் புத்தகங்களையெல்லாம் கண்டபடி வைக்க மாட்டேன். வீட்டில் யாரும் கண்டால் ஏதாவது சொல்வார்கள்.

கிண்டலடிப்பார்கள். அவமானப்படுத்துவார்கள். ஆரம்பத்தில் நான் கவிதை எழுதுவது என் கணவருக்கே தெரியாது. தெரிய வந்தவுடன் அந்தரங்கம், தாம்பத்யம், காயத்தின் முட்கள் என்று, அவையெல்லாவற்றாலும் தனக்கு அவமானமாக இருப்பதாகவும் இனி நீ எழுத வேண்டாம் என்றும் பலவந்தப்படுத்தினார். ஒரு பெண் ஆணுடைய அதிகாரத்துக்கு அடங்கியாக வேண்டும் அப்புறம் குடும்ப அமைப்பு சார்ந்த அதிகாரம். அது பெண் மேலே அவர் கொதிக்க ஆரம்பித்தார். எழுத வேண்டாம் என்று விட்டார். அவருடைய கௌரவம் பாதிக்கப்படுகிறதாம் அவருடைய குடும்ப கௌரவம் பாதிக்கப்படுகிறதாம் சில கவிதைகள் எங்கள் இருவருடைய உறவு பற்றியும் எழுதியிருந்தேன்.

நிகழ்த்துகிற வன்முறை முக்கியமானது. ஆண் மட்டுமே வன்முறை சார்ந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதில்லை. முழுக்குடும்பமுமே அது என்னுடைய குடும்பமாகட்டும் என் கணவருடைய குடும்பமாகட்டும் அல்லது என்னைச் சுற்றியிருக்கிற குடும்பங்களாகட்டும் எல்லா இடத்திலும் அந்த அதிகாரம் இருக்கும். இவற்றிலிருந்து என்னை நான் மீட்க வேண்டியதாயிற்று.

ஆனால் இவை எல்லாவற்றையும் மீறி நான் எழுதினேன். அது ஒன்று தான் எனக்கு ஆறுதலாகவிருந்தது. என்னுடைய தனிமையைப் போக்கியது. என்னை வெளிப்படுத்தியது. என்னை அடையாளப்படுத்தியது.

என்னுடைய தொகுப்பு வெளியானது கூட ஆரம்பத்தில் அம்மாவைத் தவிர யாருக்குமே தெரியாது.

இந்த நாட்களில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. இப்போது பெண் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். எனக்கு அது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. பத்துப் பதினைந்து வருடங்களுக்குப் பிறகு நான் பிறந்திருக்கக் கூடாதா என்று ஏக்கமாகக் கூட இருக்கிறது.

கடந்த பேராட்சித் தேர்தலில் இந்துக்களும் முஸ்லிம்களும் பேசி தேர்தல் வேண்டாம். பதவியைப்பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று என்னைத் தலைவராக்க முன்வந்தார்கள். ஆனால் குடும்ப கௌரவம் போய்விடுமென்று அன்று என்னை அனுமதிக்கவில்லை. ஆனால் இப்போது அனுமதித்தார்கள். எந்தக்கட்சி ஆதரவுமின்றி சுயேச்சையாகப் போட்டியிட்டேன். ஆறு பேர் போட்டியிட்டதில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்று பேராட்சித் தலைவராகவும் ஆனேன்.

அண்மையில் ஒரு பத்திரிகையாளர் வந்து என் படிப்பு பற்றிக் கேட்டார். நான் எட்டாம் வகுப்பு என்றேன். அவர் வேறொரு பெண் வேட்பாளரின் பெயரைக் குறிப்பிட்டு அவர் பட்டப்படிப்பு வரை படித்திருக்கிறாரே எனக் கேட்க நான் அமைதியானேன். அப்போது என் பக்கத்தில் என் கணவரும் இருந்தார். அவர் சொன்னார். என்மனைவி நல்ல கவிஞர். உலகம் முழுக்க உள்ள எழுத்தாளர்களுக்கு அவள் அறிமுகமானவள் என்று. எனக்கு சந்தேஷமாக இருந்தது. இனி எல்லைகளைக் கடந்து சற்று சுவாசிக்கலாமே என்ற சந்தோஷம் வந்திருக்கிறது. என்னுடைய கவிதைகள் இனி துயரமானதாக இருக்காது. அது இனிமையான இசையாக மாறும் போலும்.

கவிதை, அரசியல் இவற்றில் எனக்கு கவிதை தான் நிரந்தரம்பதவி நிரந்தரமில்லை. ஆனால் எனது காலத்துக்குள் மக்களுடைய கல்விக்காகவும் அவர்களுடைய சாலை வசதிக்காகவும், இந்து முஸ்லிம்சமூக ஒற்றுமைக்காகவும் உழைப்பேன்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூல் மதிப்பீடு

## பதுங்குகுழி நாட்களும் குருதி கசியும் சொற்களும்!



- சுருதி

தொண்ணூறுகளில் கவிதை எழுதத் தொடங்கிய கவிஞர் அகிலனின் முதலாவது கவிதைத் தொகுதி கடந்த வருடம் இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தன்னால் எழுதப்பட்ட கவிதைகளுள் 27 கவிதைகளைத் தெரிவு செய்து இத்தொகுப்பில் உள்ளடக்கியுள்ளார்.

எண்பதுகளில் பேரளவில் அதிகரித்துவிட்ட தமிழர்கள் மீதான இன வன்முறையும், அதன் எதிர்வினையாக எழுந்த தமிழர் உரிமைப் போராட்டத்தின் நேரிடையான எதிரிடையான சம்பவங்களும் தன்னை எழுதத் துாண்டியதாகக் கூறும் அகிலன்:

'யுத்தம் அனைத்து நிச்சயங்களையும் கேள்விக்குள்ளாக்கியது. காயமும், பீதியும், இழத்தல்களும், கைதுகளும்,(?) காணாமற் போதல்களும் என்ற வாழ்க்கையில் அதிகபட்ச நிச்சயம் மரணம் என்றாகியது. மரணத்துக்கு நடுவில் கொடுங்கனவுகளோடு சனங்கள் வாழத் தொடங்கினார்கள். கௌரவமான வாழ்க்கையின் உயர்வான பெறுபேறுகளுக்காக மரணத்தைத் துச்சமாக ஏந்தி எறிந்து விட்டுப் போகிற புரிந்து கொள்ளக் கடினமான, நூதனமான வாழ்வைப் போராளிகள் ஏற்றுக் கொண்டார்கள். போக்கிடங்களெல்லாம் சந்தேகிக்கப்படுகிற நியாயங்களற்று அவமதிக்கப்படுகிற ஒருவகைப் பிராணிகளாக ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளப்பட்டார்கள். குருதி கசியும் எனது சொற்களின் மூலங்கள் இவையாவுந்தான். வலிதரும் அனுபவங்களின் மௌனமே எனது வரிகளுக்கு இடையில் இடைவிடாது ஊடாடிச் செல்கிறது.'

- என யுத்த காலங்களெல்லாம் அது தரும் வலிகளோடு ஒட்டி வாழ்ந்த ஒரு கவிஞனின் மன உணர்வுகள் எப்படி கவிதைகளுடாக உருவம் கொடுக்கப்பட்டது என்பது பற்றி தனது பின்னுரையில் எழுதியுள்ளார்.

இவரது தொகுப்பிற்கான முன் குறிப்பில் வெங்கட்சாமிநாதன் இவரது கவிதை பற்றிக் கூறுகையில்:

'அகிலனது கவிதைகளில் அனுபவங்களின் கொடூரம் புதிய பாஷையை, புதிய சொல்முறையை சிருஷ்டித்துள்ளதைக் காணலாம். பழகிய அனுபவங்கள் புதிய அர்த்தங்களைக் கொள்கின்றன' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அகிலனது கவிதைகளின் மொழியானது சுதந்திரமான சொற்களின் கூட்டுருவாக்கத்தில் உருவாக்கப்படுகின்ற மொத்த உணர்வுகளை கவிதையின் கருவாகக் கொள்ளத் தக்கது. இவரது இக்கவிதை மொழி இதற்கு முதல் ஈழத்து இலக்கியப் பரப்பில் யாராலும் கையாளப்பட்டதோ, அல்லது எதனது சாயலைக் கொண்டதோ அல்ல.

தனிப்பட்ட வாழ்வும், யுத்தமும் தரும் வெறுமை, கோபம், இயலாமை, போன்ற பல காரணிகளை உள்ளடக்கியும் வெளித்தெரிகின்ற சொற்கள் அப்படியே கொட்டப்படுகின்ற செய்கையை அவரது கவிதைகளில் காணலாம்.

அத்துடன் வெங்கட் சாமிநாதன் குறிப்பிட்டதைப் போன்று அவரது மொழி வெளிப்பாடானானது, பழகிய அனுபவங்கள் புதிய அர்த்தங்களைக் கொள்கின்ற தன்மையை பரவலாகவே காணப்படுகிறது. அத்துடன் அச்சொற்கள் எமக்குள் தரும் உணர்வு ரீதியான அதிர்வுகளும் வித்தியாசமானவை.

உதாரணமாக அவரது பதுங்குகுழி நாட்கள் - 1 என்ற கவிதையில்

..........

குண்டெறி விமானம் ஓய்ந்த
துளிப்பொழுது
வெளிப்போந்த திண்மம் - மீள
குழிக்குள் பதுங்கிக் கூறுசேதியில்
கைகளில் உயிர்
இன்னும் நடுங்குண்டு போகும்
'கோ' என்ற முலையுடைத் திண்மத்தின் அலறலில்
திடுக்கிட்டுத் திரும்பவும்
யோனிவாய் பிளவுண்டு, குருதி சீற
இன்னொரு சிறுதிண்மம்.

இக்கவிதை கூறும் குண்டு வீச்சும், பதுங்குகுழி வாழ்வும் ஈழத்தில் வாழ்ந்த யாருக்கும் அந்நியமானதல்ல. ஆயினும் அவரது மொழியில் - வெளிப்-போந்த திண்மம், முலையுடைத் திண்மம் - அவ்வனுபவம் அவரது மொழியில் வெளிவரும் போது எமது உணர்வு தளம் இன்னொன்றாக பிரமிக்க வைப்பதாக உள்ளது.

அதே போன்று பதுங்குகுழி நாட்கள் - 11 இல்

வேர் முடிச்சுக்களிலிருந்தும்,
பாறைப் படிவங்களின் கீழிருந்தும்
தலையின்றி மீண்டன அவைகள்
வெட்டை வெளிகளில் மண்டியிட்டன
கண்ணெட்டாத் தொலைவுகளிற்கு
ஓடியும் தொலைந்தன
அங்கங்கள் சிதற
மரித்தும் ஆயின... ... - எனத்
தொடர்கின்றது.

பதுங்குகுழி நாட்கள் கவிதைகளைப் போன்றே அவரது கைவிடப்பட்ட கிராமம் பற்றிய பாடல், நமது தொலைக்க விரும்பா நினைவுகளை மீட்டுக் கொடுப்பது போன்றது ஆகும். ஒவ்வொருவருக்கும் தாம் வாழ்ந்த ஊரினதும், அதனது ஒற்றைத் தெருக்களின் மீதும் விழுகின்ற இனம் புரியாத ஒரு நேச உணர்வு பெறுமதியானதே. அப்படிப் பெறுமதி வாய்ந்த இன்னொரு இடத்தைப் பற்றி யாரோ சொல்லினும் அதை ஒப்பிட்டு நம் நினைவுகளை மீட்டிப் பார்ப்பதும் கூட ஒரு சுகம் தான். அதுவும் வலோத்காரமாக நம்மிடம் இருந்து பிடுங்கி எறியப்பட்டவை பற்றிய இழப்பு உணர்வு என்பது வித்தியாசமானதே.

அவரது கவிதை வரி இப்படி ஆரம்பிக்கின்றது.

இங்கே தான்
கசப்பானதும், உல்லாசமானதுமான
என் பால்யகாலத்து நினைவுகள்
கலந்துள்ளன.
- என்றும்,

.........

துார்ந்து போய் ஐதீகங்கள் மண்டிக்
கிடக்கும்
உன்னுடைய கேணிகளில்
நினைவின் ஆழ அடுக்குகளுள்
இழுத்துச் செல்கிற
பூர்வீகத் தெருக்களில்
பித்தாய் மனம் பற்றி அலைகிறது
- என்றும்,

..........

நொந்த நிலா முகில்களுள் முகம்
புதைத்து விம்முகிறது
விழி திறந்து
இரவுக் கடலில் எரிகிற சூள்
விளக்குகளை
விழா நாட் தெருக்களில்
ஓயாது முழங்குகின்ற பறைகளில்
ஒலிகளை
காற்றைப் பிடித்துலுப்பி எழுகிற
மூதாதையரின் பாடல்களை
வாள் முனையில் உயிர்துடிக்க
இழந்துதான் போனோமா?

இவை அவரது கவிதைகளில் இருக்கும் சிறந்த வரிகள். ஒவ்வொரு ஈழத்து மக்களினதும் உள்ளுணர்வின் எழுதப்பட முடியாத கவிதைகளாய் மறைவுண்டு கிடக்கும் உள்ளுணர்ந்த நிலை இப்படியாகத் தான் இருந்தது.

அகிலனது யுத்த காலத்தைப் பிரதி பலிக்கும் கவிதைகளைப் போன்றே

சிலுவை - 1 கவிதையிலும்,

................

சொல்
ஊளையிடும் காற்று வெளியில்
நேசமான மெழுகுதிரிச் சுடரை
எவ்விதம் காப்பாற்றுவேன்...?

என்ற வரிகள் அவ்வாழ்வின் இயலாமை மீதான தர்க்கத்தைச் சொல்கின்றது. இப்படிப் பல நல்ல கவிதைகளை அவரது தொகுப்பில் காணலாம்.

அதேநேரம் அகிலனின் கவிதைகளில் சில கவிதைகள் பலவீனமானவை. உதாரணமாக அநாதிப் புகையிரதம் போன்ற கவிதைகள். அதே போல சில கவிதைகளில் உள்ளார்ந்து தெறிக்கும் கனமான ஒன்றோ அல்லது சிலதோ வரிகள் தான் கவிதையை துாக்கி நிறுத்துகின்ற அவலமும் இவரது கவிதைகளில் காணப்படுகின்றது. சிலவேளைகளில் யுத்தகால மனிதனின் ஒழுங்கமைக்கப்படாத கோபமும், வெறுப்பும் இயலாமையும் கலந்தது தான் அகிலனின் கவிதைகளா என்ற கேள்வியும் எனக்குள் எழுகின்றது.

ஈழத்து கவிஞர்கள் பலரது கவிதைகள் தொகுப்பாக வெளியிடப்படும் போது அது தரும் ஒத்த உணர்வு தரும் கவிதைகளைப் போன்றல்லாமல் அகிலனது கவிதைகள் பரந்த பரப்பினைச் சுட்டுவதாக உள்ளன.

அகிலனது அநாதிப் புகையிரம் போன்ற கவிதைகள் மனதைத் தொடுபவை அல்ல.

சனாதனனின் அட்டைப் பட ஓவியங்களுடன் வெளிவந்த இத் தொகுப்பானது மிகவும் அழகாக ஒழுங்கமைக்கப்பட்டு பதிப்பு செய்யப்பட்டுள்ளது.

மொத்தத்தில் ஈழத்தில் வெளிவருகின்ற தொகுப்புக்களில் அகிலனின் தொகுப்பு கட்டாயம் வாசிக்கப்பட வேண்டிய தொகுப்பு என்பதில் சந்தேகமில்லை. தொடர்ந்தும் அகிலன் ஈழத்து கவிதை உலகிற்கு எதையாவது செய்ய வேண்டும் என்பதை விட அம்மக்களின் வாழ்வியல் அனுபவங்களின் வெளிப்பாடாக அவரது படைப்புக்கள் இருக்க வேண்டும் என்ற எமது எதிர்பார்ப்பில் தவறேதும் இல்லையே.

## மூன்றாவது மனிதன் : தனித்துவமான சஞ்சிகை

- பவித்ரா

மூன்றாவது மனிதன்" சஞ்சிகையின் 13வது இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழிலும் பல நல்ல படைப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

"ஈழத்து இலக்கியத்தின் ஒரு பகுதியே மலையக இலக்கியம் என்றாலும், அதற்கொரு தனித்துவம் இருக்கிறதென்பதை சுலபமாக யாரும் புறக்கணித்துவிட முடியாது."

- இவ்வாறு மூன்றாவது மனிதன் இதழிற்கான தனது பேட்டியில் தெளிவத்தை ஜோசப் தெரிவித்துள்ளார்.

மலையக இலக்கியத்-துறையில் தனக்கென தனி இடத்தினை வகிக்கின்ற தெளிவத்தை ஜோசப் மலையக இலக்கியத்திற்கு காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளார். இவருடனான பேட்டி இவ்விதழின் முக்கிய பகுதியாக அமைந்திருக்கின்றது.

40 வருடங்களுக்கு மேலாக தன்னை இலக்கியத்துறையில் ஈடுபடுத்திக் கொண்டுவரும் தெளிவத்தை ஜோசப் உடனான பேட்டி இலக்கியத்துறையினருக்கு பலதரப்பட்ட தகவல்களை பகிர்ந்து கொள்வதாக அமைந்திருக்கின்றது.

ஆரம்பத்தில் இருந்தே அடிமை வாழ்வு வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களை யாழ்ப்பாண உயர் குழாத்தினரும் சேர்ந்து அவர்களை அடிமையாக்கினர். அவர்களது உரிமைகளைப் பறித்தனர்.

அந்நியர்களின் ஆதிக்கத்தில் இருந்து இந்த நாடு விடுதலை பெற்றாலும் இங்குள்ள ஆதிக்க சக்திகளின் ஒட்டுமொத்தமான ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்கள் மலையகத் தமிழர்கள்.

அவர்களின் அடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டதில் ஏதோ ஒரு வகையில் பலரும் பங்களிப்புச் செய்துள்ளனர். அதனது தளங்களும் வேறுபட்டதாக இருந்தன. ஆயினும் அவர்களை சுரண்டுபவர்களான யாழ்ப்பாண மேலாதிக்க சக்திகளுடன் பலரும் முரண்பட விரும்பாத, தயாராக இல்லாத நிலையில் தனது எழுத்தின் மூலமாக யாழ்ப்பாண துரைமார்களை விமர்சித்தவர் தெளிவத்தை ஜோசப்.

இவ்விதழின் இன்னொரு சிறப்பு அம்சமாக சிங்களத் திடைப்படத் துறையைச் சேர்ந்த பிரசன்ன விதானகே உடனான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. சிங்கள திரைப்படத் துறையில் தனக்கென தனி முத்திரை பதித்தவரும், சர்வதேச ரீதியாகவும் தனது திரைப்படங்கள் மூலம் பிரபல்யமானவருமான பிரசன்னவுடனான கலந்துரையாடல் சிங்களத் திரைப்படத்துறை சார்ந்த தமிழ் சமூகம் அறிந்து கொள்ள உதவும்.

உண்மை இலக்கியமே புரட்சி இலக்கியம் என்று கூறிய ரொட்ஸ்கி மீது தனக்கு அதிக ஈடுபாடு உள்ளதாகக் குறிப்பிடும் பிரசன்ன அதனையே தனது திரைப்படங்கள் ஊடாவும் காட்சிப்படுத்த முயன்றிருக்கிறார். சிங்கள சமூகத்தின் இன்றைய நிலை தொடர்பான ஒரு ஆய்வாளனாகக் கொள்ளக் கூடியவர் பிரசன்ன. அந்த வகையில் அவருடனான கலந்துரையாடல் ஒரு காத்திரமான அம்சமாகவே இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. சர்வதேச ரீதியாக அறியப்பட்டவராயினும், பிரசன்ன விதானகே தொடர்பாக அவரது திரைப்படத்தறை சார்ந்த ஆளுமை தொடர்பாக அவரது மக்கள் புரிந்து கொள்ள இன்னும் காலம் வேண்டும் போலும்.



அடுத்ததாக, இலங்கையின் கல்வி முறையில் பயிற்று மொழியாக ஆங்கிலம் (விவாதத்திற்கான தொடக்கம்) எனும் தலைப்பில் சோ. சந்திரசேகரன் இவ்வதழில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். இலங்கையின் கல்வியலில் ஆங்கில மொழியின் திணிப்பு என்பது இன்று முக்கிய பிரச்சினையாக உள்ளது. இது தொடர்பான திறந்த விவாதத்திற்கூடாக ஆங்கில மொழி மூலமான திணிப்பிற்கு எதிராக போராடுதல் அவசியம்.

உலக மயமாதலுடன் இணைந்த ஆங்கில மொழி மூல கல்வி என்பது தவிர்க்கப்பட முடியாததாக திணிக்கப்படுகின்ற சூழ்நிலையில் இவ்விடயம் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் அவசியம் என்றே கருதப்படுகின்றது. அந்த வகையில் இதற்கான விவாதத்தினை தொடர்வது நல்லது.

இவற்றினை விட அ.முத்துலிங்கத்தின் ' 23 சதம் ' எனும் சிறுகதை ஒன்று வெளிவந்துள்ளது. அச்சிறுகதையில் நவீன தொழில் நுட்பத்தினை கிண்டலடிக்கும் பாங்கு நிறையவே காணப்படுகின்றது. அவர் சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்பதை இக்கதையினூடாக மீண்டும் நிரூபித்துள்ளார். சண்முகம் சிவலிங்கத்தின் 'திசை மாற்றம்' எனும் சிறுகதையும் வெளிவந்துள்ளது. அத்துடன் நல்ல பல கவிதைகளும் வெளிவந்துள்ளன.

ஈழத்து இலக்கிய எழுத்தாளர், ஆர்வலர்களின் செல்நெறி அறிக்கை ஒன்று கூடல் தொடர்பாக பலரது கருத்துக்களும் அடங்கிய தொகுப்பு ஒன்றும் இடம் பெற்றுள்ளது. மூன்றாவது மனிதன் சஞ்சிகை தாரர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு கொழும்பில் நடாத்தப்பட்ட இவ் ஒன்றுகூடல் ஈழத்து இலக்கிய கர்த்தாக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். எல்லாவற்றிக்கும் அவதுாறு சொல்பவர்கள் இருந்தாலும் கூட அவ் ஒன்று கூடல் வெற்றிகரமாகவே முடிவுற்றது. இது தொடர்பான சிலரது கருத்துக்களையும் அவர்களால் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் சில பகுதிகளையும் இதில் பிரசுரித்துள்ளார்கள்.

'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையானது இனிவரும் காலங்களில் இரு மாதங்களுக்கு ஒரு சஞ்சிகை வெளிவரவுள்ளது. இது வருவேற்கப்பட வேண்டிய விடயம் என்பதுடன் இலக்கிய ஆர்வலர்களுக்கு இவ்விடயம் மகிழ்ச்சியையும் அளிக்கும். அதற்காக எல்லோரையும் சந்தாதாரர்களாக இணைந்து கொள்ளும்படி கேட்டிருக்கிறார்கள். ஈழத்தில் மட்டுமல்ல புலம்பெயர் இடங்களிலும் வெளிவந்த நல்ல சஞ்சிகைகள் நின்று போனதற்கு காரணம் அதற்கான ஒத்துழைப்பு போதாமை தான். இதை நாம் எல்லோரும் புரிந்து கொள்வது நல்லது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "அரவிந்த"வின் சுயசரிதை

தலித்தியம்' என்னும் போக்கு இந்தியாவிலும், இலங்கையிலும் வளர்த்தெடுக்கப்படுவதற்கு முன்னர், சாதிரீதியாக ஒடுக்கப்படும் மக்களுடைய பிரச்சினைகளும், போராட்டங்களும், இலக்கியங்களும் இருக்கவில்லையா? இருந்தன.

ஆனால், அவை கம்யூனிசம், வர்க்கப் போராட்டம், சோஷலிசம் என்பவற்றுக்குள் அடங்கிய ஒரு விடயமாகவே கருதப்பட்டு வந்தன.

உலக அரங்கில் சோஷலிச நாடுகள் பலவற்றுள்ளும் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கும், தளம்பல்களுக்கும், சீரழிவுகளுக்கும் பின்னர், கம்யூனிசம் நோக்கிய நகர்வுகள் தீவிர மறுபரிசீலனைக்குள்ளாக்கப்-பட்டன. எனவே சாதி, இன, மத, பால், நிற ரீதியாக ஒடுக்கப்படும் வகுப்பினர் தனித்தனியே தம் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி, போராட்டங்களை முன்னெடுத்து, கலை இலக்கிய ரீதியாகவும் அவற்றை வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கையில் தமிழ்த் தேசிய வாதமும், இந்தியாவில் தலித்தியமும், உலகெங்கணும் பெண்ணியமும் இவ்வாறே அண்மைக்காலங்களில் முதன்மை பெற்று வருகின்றன. இலங்கையில் தமிழ்த் தேசியவாதப் போராட்டத்தின் கூர்மை வலிமை பெறப்பெற, சாதிய ஒடுக்குமுறை பற்றிய விழிப்புணர்வு அதனுள் கொஞ்சம் கொஞ்சமாக அமிழ்ந்துபோய், நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கின்றது. அதைப் பற்றிப் பேசுவது கூட தமிழ்த் தேசியவாதப் போராட்டத்தை மலினப்படுத்தும், அதற்குப் பின்னடைவை ஏற்படுத்தும் என்று எடுத்துக் கூறப்படுமளவுக்கு இன்று நிலைமை மாறிவிட்டது.

தலித்தியத்தின் தற்போதைய இலக்கு, தற்போது பேணப்பட்டு வரும் சமூக அமைப்புக்குள்ளேயே தலித்துக்கள் மேல்நிலையாக்கம் பெறுதலையே முக்கியமாகக் குறிவைத்துள்ளது. தற்போது பேணப்பட்டு வரும் சமூக அமைப்பை மாற்றுவது என்பது தலித்தியத்தைப் பொறுத்தவரை இரண்டாம் பட்சமான விடயமே.

இந்த அடிப்படையிலேயே தலித்திய எழுத்துக்கள் நோக்கப்பட வேண்டும் என்பது எனது கருத்து.

ஆந்திர, கர்நாடக மாநிலங்கள் ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ் நாட்டை விடவும் தலித்தியப் போராட்டங்கள் கூர்மைபெற்ற மாநிலங்களாகும். பெரியாரியத்தை, அவரது வாரிசுகளாகத் தம்மைக் கூறிக்கொள்ளும் அண்ணாதுரை, மு.கருணாநிதி, எம்.ஜி.ஆர் போன்றவர்கள் கேலிக்கூத்தாக்கியதின் உப விளைவுகளில் இதுவும் ஒன்று.

கன்னடரான, அரவிந்த மாளகந்தி இளவயதிலேயே தம்முடைய சுயசரிதையை எழுதி வெளியிட்டுள்ளார். "கவர்மென்ட் பிராமணன்" என்னும் தலைப்பில் அது பாவண்ணனால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. இருபத்தியிரண்டு சிறு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டிருக்கும் இந்நூலின் முதல் பதினொரு அத்தியாயங்-களும் மாளகந்தியின் இளவயது அனுபவங்களையும், சேரி வாழ்க்கையையும் பற்றிச் சில விடயங்களைக் கூறுகின்றது. அவ்வனுபவங்கள் ஊசியெனக் குத்துவன அல்ல! இதயம் என்று ஒரு பொருள் மனிதர்களுக்கு இருக்கின்றதா எனக் கேட்டுக் கேட்டு குத்திக் காட்டுவன அவை!!

அடுத்த பதினொரு அத்தியாயங்களும் பெரும்பாலும் அரவிந்த மாளகத்தி சமூக மேல்நிலையாக்கம் பெற்ற பின்னர் அவர் பெற்ற அனுபவங்களுள் சிலவற்றைக் கூறுகின்றன. பழிவாங்கும் குணமற்ற, ஆனால் மிகுந்த சுயமரியாதை உணர்வு நிரம்பிய, கூருணர்வுள்ள, சமூகம் பற்றிய அதீத எச்சரிக்கை உணர்வு கொண்ட ஒரு மனிதரை அவற்றில் நாம் காணலாம்.

பாவண்ணன் கூறுவது போல, தமிழ்ச் சூழலிலும் இவ்வனுபவங்-களைப் பெற்ற ஏராளமானோர் உள்ளனர். அவர்களும் தமது அனுபவங்களை எவ்வித வடிகட்டல்களும், புனைவுகளுமின்றி பச்சையாக எழுத வேண்டும். தமிழ் இலக்கியத்தின் செழுமை மிகுந்த ஒரு பிரிவாக அது என்றும் திகழும்.

ஏற்கெனவே டொமினிக் ஜீவா தனது சுயசரிதையை எழுதி வெளியிட்டுள்ளார்.

அவரது சுயசரிதைக்கும், மாளகந்தியின் சுயசரிதைக்கும் இடையே நிறைய ஒற்றுமைகளும், குறிப்பிடத்தகுந்த வேறுபாடுகளும் உள்ளன. ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்தலும், தொடர்ந்து அதை எதிர்ப்பதும், சுயமரியாதை உணர்வும், போர்க்குணமும் ஒற்றுமைகளாகத் தெரிகின்றன.

வாழ்க்கை வசதிகள், சுகாதாரம், கல்வி என்பவற்றைப் பொறுத்த வரையில் இந்திய தலித்துக்களிலும் பார்க்க, இலங்கைத் தமிழ்த் தலித்துக்களின் நிலைமை "ஓரளவு பரவாயில்லை" என்று கூறும் நிலையில் உள்ளது எனத் தோன்றுகிறது. ஜீவாவின் சுயசரிதை அந்த உணர்வைத்தான் தருகிறது.

இலங்கையில் சிங்களவர்களுள்ளும் தலித்துக்கள் உள்ளனர். அவர்களது பிரச்சினைகள் என்ன? போராட்டங்கள் எவை? சிங்கள இலக்கியத்தினுள்ளும் "தலித்தியம்" போன்ற ஏதாவது ஒன்று உள்ளதா?

எனக்கு அதைப் பற்றிய அறிவு ஏதும் இல்லை.

உங்களுக்கு?

உங்களது பதில் பெரும்பாலும் "இல்லை" என அமையலாம்.

அது ஏன்?

ஆழ்வார்க்குட்டி

---

ரவி

நோர்வே 'தமிழர் ஒன்றியத்தின்' ஆதரவுடன், என்.சரவணன் அவர்களை பிரதம ஆசிரியராகவும், வி.கவிதாவை உதவி ஆசியரியராகவும, க.சுந்தரலிங்கம், க.சிவானந்தன், கு.தவேந்திரன், வ.தவநாதன் ஆகியோரை ஆசிரியர் குழுவாகவும் கொண்டு 'பறை' சஞ்சிகை வெளிவந்துள்ளது. இச் சஞ்சிகைக்கான அறிமுகக் கூட்டம் ஒன்று கொழும்பு தமிழ்சங்க மண்ட-பத்தில் கடந்த ஜன. 13ம் திகதி ஞாயிறு மாலை நடைபெற்றது.




பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்-கூட்டத்தில் கவிஞர் மு.பொன்னம்-பலம் , எஸ்.கே.விக்னேஸ்வரன், கலாநிதி செல்வி திருச்சந்திரன் ஆகியோர் சஞ்சிகை பற்றி கருத்துத் தெரிவித்தார்கள். வழமையான இலக்கிய ஆர்வலர்கள் குழுமியிருந்த இக்கூட்டத்தில் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் என். சரவணன் தனது பதிலுரையையும் நன்றியுரையையும் நிகழ்த்தினார். சபையோர் கலந்துரை-யாடலுக்கு நேரம் ஒதுக்கப்பட்ட போதும் ஒருவரைத் தவிர வேறு யாரும் முன்வந்து கருத்துத் தெரிவிக்-காமை ஒரு குறை-பாடாக இருந்த போதும், கூட்டம் சிறப்பான முறையில் நடைபெற்றது.




சஞ்சிகையில் வெளியாகியிருந்த கவிதைகளில் ஒளவை, மஞ்சுள வெடிவர்த்தன, கவிதா ஆகியோரின் கவிதைகளை வாசித்-துக் காட்டி கவிதைகள் தொடர்பாக உரை-யாற்றிய கவிஞர் மு.பொ.அவர்கள் கவிதை மொழியில் விரசம் இருப்பது தொடர்பாக சரிநிகரில் கோணேஸ்வரி கவிதை வெளியான போது எழுந்த சர்ச்சை பற்றி குறிப்-பிட்டுப் பேசினார்.

கவிதையில் விரசம் ஏற்பட வேண்டும் என்பதற்காக மொழி கையாளப்படுதலையும், வேறு கருத்துக்களை வெளிப்-படுத்துவதற்காக சில சொற்கள் பயன்படுத்தப்படுவதையும் வித்தியாசப்படுத்தி நோக்குவதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசிய அவர் கம்பராமாயணத்தில் எதுகை மோனை அழகுக்காக விரசஉணர்வு ஏற்படும் விதத்தில் மொழி கையாளப்-பட்டிருப்பதை விளக்கினார். மஞ்சுள வெடிவர்த்தனவினதும் ஒளவை-யினதும் கவிதைகளில் வெளிவந்த மொழியின் வீச்சு அரசியல் சார்ந்து, சூழலின் யதார்த்தம் கூர்மையாக வெளிப்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவரை அடுத்து உரையாற்றிய செல்வி திருச்சந்திரன் அவர்கள், சஞ்சிகை முயற்சியைப் பாராட்டி-யதுடன், காலப் பொருத்தமற்ற விடயங்கள் சேர்க்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினார். அதே வேளை ஆங்கிலச் சொற்களை தமிழில் மொழி பெயர்த்துப் பாவிக்கும் போது அதற்குரிய சரியான அர்த்தத்தைத் தரும் சொற்கள் பாவிக்கப்படாவிடில் அவை பிழையான புரிதலை ஏற்படுத்-தும் அபாயம் உண்டு என்று சுட்டிக் காட்டினார். குறிப்பாக 'பொதுப் புத்தி' என்ற சொல்லாக்கம் கிராம்சி அவர்களால் 'சாதாரண அறிவு மட்டத்தில்' என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்ட சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தப்படுவது தவறு என்று சுட்டிக் காட்டினார். புத்தி என்பதும் அறிவு என்பதும் ஒன்றல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். மேலும் சிறிலங்கா துரோகத்தின் வரலாறு என்ற கட்டுரை தொடர்பாக அவர் குறிப்பிடுகையில் வரலாறு ஒருபக்கச் சார்பானதாக, ஒரு பக்க விடயங்களை மட்டும் தொகுப்பதாக அமைந்து விடக் கூடாது என்றும் தெரிவித்தார். வரலாறு என்பது ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்த அனைத்துப் போக்குகளையும் ஆவணப்படுத்தி தெரிவிப்பதாக அமைவது அவசியம் என்றும் தெரிவித்தார். இவரையடுத்துப் பேசிய எஸ்.கே.விக்னேஸ்வரன் நூலில் வெளியான கட்டுரைகள் தொடர்பாக தனது கருத்துக்களை முன்வைத்தார். சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கம் தெளிவாக அதன் குறிக்கோள்களை முன் வைத்திருப்பதாகத் தெரிவித்த அவர், ஆறாம்திணை, ஏழாம் திணை தொடர்பாக ஏற்பட்டிருக்கும் மயக்கத்தையும் 'புலம் பெயர்', 'புகலிட' இலக்கியம் என்ற இரு வெவ்வேறு அர்த்தமுள்ள சொற்-தொடர்களும் ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தப்படுவது தவறு என்றும் சுட்டிக்காட்டினார். ஆறாம் திணையை புலப்பெயர்வுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகவும் ஏழாம் திணையை இணைய தள (siber space) உலகாகவும் சேரன் தனது காலச்சுவடு கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதால், இங்கு மாறிப் பயன்படுத்தப்படுவது மயக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்று தெரிவித்தார்.

'பறை' என்ற நல்ல தமிழ்ச் சொல், வெளிப்படையாகவும் தெளிவாகவும், சந்தேகத்திற்கிடமின்றியும் தெரிவித்தல், பேசுதல், மற்றும் ஒரு தோல் இசைக்-கருவி, ஒரு முகத்தல் அளவிடை ஒரு குறிப்பிட்ட - அந்த வாத்தி-யத்தை இசைக்கும் - மக்கட்பிரிவை குறிப்பிடும் சொல் என்று பல அர்த்தங்களை தரும் ஒரு நல்ல சொல்லாகும். ஆயினும் இதன் அர்த்தம் வெறுமனே வாத்தியம் என்ற ஒற்றை அர்த்தத்துள் அடங்கும் விதத்தில் அதன் சின்னம் வரையப்-பட்டிருப்பது, அதுவும் மற்றார் கால முரசறைவோரின் உடையலங்-காரத்-துடன் அது வரையப்-பட்டிருப்பது முடிந்தால் மாற்றிக் கொள்ளப்பட வேண்டியது ஒன்று என்று தெரிவித்தார்.

'பறை' என்ற நல்ல தமிழ்ச் சொல், வெளிப்படையாகவும் தெளிவாகவும், சந்தேகத்திற்கிடமின்றியும் தெரிவித்தல், பேசுதல், மற்றும் ஒரு தோல் இசைக்கருவி, ஒரு முகத்தல் அளவிடை ஒரு குறிப்பிட்ட - அந்த வாத்தியத்தை இசைக்கும் - மக்கட்பிரிவை குறிப்பிடும் சொல் என்று பல அர்த்தங்களை தரும் ஒரு நல்ல சொல்லாகும்.

இதில் வெளியான கட்டுரைகள் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் அமெரிக்க கோபுரங்-கள் மீதான தாக்குதல் தொடர்பான கட்டுரை வன்முறையை அரசியல் ரீதியான ஆய்வுக்குட்பட்டு நின்று பார்க்காமல், பாதிக்கப்பட்டவரின் மன நிலையில் நின்று நோக்குவதாக அமைந்திருப்பதை சுட்டிக் காட்டினார். கட்டுரை அழகான மொழியில் எழுதப்-பட்டிருப்பினும், அந்தக் கட்டுரையின் சாரமான கருத்துப் போக்கு 'புரிந்து கொள்ளப்படக் கூடியது' என்ற போதும் 'ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா? என்ற கேள்வியை விவாதிப்பது நல்லது என்றும் தெரிவித்தார்.

விவாதத்துக்குரிய பல கருத்துக்களை முன்வைத்துள்ள இச் சஞ்சிகையின் பல கருத்துக்களும் பறையின் இனிவரவுள்ள இதழ்களில் விவாதிக்கப்பட்டு சரியான கருத்தை நோக்கி செல்வது அவசியம். அதை பறை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அழகான அச்சு, சிறந்த வடிவமைப்புடன் வெளிவந்துள்ள இச் சஞ்சிகை காத்திரமான பல விடயங்களை எடுத்துப் பேச முன் வந்துள்ளது வரவேற்புக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

மு.பொ.விரசம் சம்பந்தமாக எழுப்பிய கருத்தை ஒட்டி அபிப்-பிராயம் தெரிவித்த அவர் விரசம் கவிஞரின் பார்வையுடன் சம்பந்தப்-பட்டதே அன்றி கவிஞரின் மொழி-யுடன் சம்பந்தப்பட்டதல்ல என்று குறிப்பிட்டு இதையும் விவாதிக்கலாம் என்று குறிப்பிட்டார்.

இறுதியாக உரையாற்றிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் சரவணன் அவர்களது முயற்சியைப் பாராட்டி-யதோடு பெண்ணியம், அரசியல், விடுதலை, தலித்தியம் என்று பல பரிமாணங்களுடனும் வெளிவந்துள்ள இச் சஞ்சிகை மிகவும் அவசியமான ஒரு வருகை என்றும் தெரிவித்தார்.

கூட்டம் இரவு 7 மணியளவில் நிறைவுற்றது.

பிரதி ஒன்றின் விலை 100 ரூபா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விஜி என்கிற மனைவிக்கு

நான் நெடுங்காலமாக
முயன்று கொண்டிருந்த
அந்தக் கதவை
இன்று நீ திறந்திருக்கிறாய்

மிகக் கடினமானதும்
மிக இலகுவானதும்
மிக இறுதியானதுமான அதனை
திறக்கும் வலிமை
உன் கைகளுக்கில்லையெனினும்
திறந்து வெளியேறத் தேவையுனக்கு
அதிகமென்பதை அறிவேன்

உண்மையில்
நேற்றிரவு நிகழ்ந்த
ஒரு சம்பவம் மட்டுமே
அதற்கு உன்னைத் துரத்தியிருக்காது
சமீப காலங்களில்
நீண்ட கழியின் கூர்முனை துரத்தி
உனதுடலின் தசைகளை கிழித்திருக்க
வறண்ட மழையில் விழுந்த
ஒரு மழைத்துளியென
மரணம் உன்னை உறிஞ்சிக் கொண்டது

பிரபஞ்சத்தின் கால நீட்சியில்
கரையாத துயரத்தின் நீள் வட்டம்
சூழ்ந்தேயிருக்க
நீ காலூன்ற முனைவதென்பதோ
உன் தாம்பத்தியத்தில்தான்

நீ முற்றிலுமாக நீங்கி
உன் ஞாபகங்கள்
ஆளரவமற்ற மைதானமாக
என்னுள் விரிந்திருக்கையிலும் கூட
எனக்குள் எஞ்சியிருக்கிறது
தாம்பத்தியத்தின்
முற்றுப் பெறாத புனைவு

தொடரலாமென்கிற
எளிய நம்பிக்கையோடு

## இருளோடிருப்பதென்பது

எளிதில் நெருங்கிவிட இயலாத
வாழ்வின் கரைகளில்
அமர்ந்திருக்கிறேன்
கனவொன்று வேண்டி

கனவின்
விசித்திரங்கள் மயக்கும்
இந்த நாளை
எதிர்கொள்ளத் தயாராகிறேன்

பிரவேசிக்க முடியாத
காலத்தின் ரகசிய வெளியூடே வருங்காலம் நோக்கி
நகர்ந்து கொண்டிருக்கிறேன்

மேலும்

சலனமற்ற
இந்தப் பிரார்த்தனைக் கூடத்தின்
கடக்கவியலாத எல்லை நீங்கி
வசிக்கவே இயலாதென
அறியப்பட்ட இடத்தை

அனுமதிக்கப்பட்ட உணவிலிருந்து
விலக்கப்பட்ட உணவை

அணுகமுடிகிற விதிகளிலிருந்து
அணுக முடியாததை


குடத்து நீரிலிருந்து
மூழ்கிப்போகவென ஒரு நதியை

பழகிய மௌனத்திலிருந்து
துருவேறிய, கேட்கச்சகிக்காத மொழியை

இம்மறைவிடத்திலிருந்தே
மேடையை
சுவீகரிப்பவளாய் இருக்கிறேன்

இருளில்
இருப்பதென்பது
வெறுமனே
இருளோடிருப்பது மட்டுமில்லை
இருள் தவிர்ப்பதென்பதும்தான்

— சல்மா





சிங்கல மூலம் : கருணா பெரேரா
ஆங்கிலத்தில் : காமினி சல்காது
தமிழில் : எஸ்.கே.விக்னேஸ்வரன்

அடுப்பை மூட்டி கொஞ்சம் ஈரப்பிலாக்காயை அவியவிட்டு விட்டு வெளியே வந்து முற்றத்தில் நின்றபடி வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இங்கிருந்தபடி பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரம் நீண்டிருக்கும் வீதியில் போவோர் வருவோரை தெளிவாகப் பார்க்க முடியும். வீதியில் அம்மா வருகிற சிலமன் எதுவும் இல்லை. விறாந்தையில் பாட்டி பாக்கு வெற்றிலையை உரலில் போட்டு இடித்துக் கொண்டிருந்தாள். இரும்பு உலக்கையால் மர உரலில் அவள் இடிக்கும் சத்தம் 'டொக் டொக்' என்று ஒலித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொருமுறை அவள் இடிக்கும் போதும் குந்தியிருந்த அவளின் பிட்டப் பகுதி நிலத்தில் முட்டி முட்டி எழுந்தததது.

"வாபிள்ளை வீட்டுக்குள்ளை. 'கொம்மா வர நேரமெடுக்கும் எண்டு நான் நினக்கேல்லை'. இப்ப வந்திடுவா"

"ஆனால் அம்மா இப்பிடி ஒருநாளும் பிந்தி வாறதில்லையே".

நான் திரும்பி வந்து பாட்டிக்கு பக்கத்தில் அமர்ந்தபடி முற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் இன்னமும் உரலை நோக்கிக் குனிந்தவளாய் அதே 'டொக் டொக்' என்ற சத்தத்துடன் பாக்கு இடித்துக் கொண்டிருந்தாள். மெல்ல மெல்லமாக கவியத் தொடங்கிய இருள் எங்கள் காலடி வரையும் வந்து நிறைந்தது. தனிமை உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்த இந்தக் கணத்தில் அவள் பாக்கு இடிக்கிற சத்தம் மனதிலே விபரிக்க முடியாத ஒரு சோகத்தை அழுத்தமாக எழுப்புவதாக.

நான் கொஞ்சம் ஈரப்பிலாக்காயை அவிய விட்டிருக்கிறன் பாட்டி. வேறை என்னத்தை இதோடை தாறதெண்டு எனக்குத் தெரியேல்லை. நீங்கள் மிளகாயும் சாப்பிட மாட்டியள். உறைப்பும் உங்களுக்கு ஒத்து வராது.

"கொஞ்சம் பொறு பிள்ளை. கொம்மா ஏதாவது கொண்டுவருவா"

"அம்மாவிட்டை காசு ஒண்டும் இருக்கேல்லை. காலையில நான் தான் அவவுக்கு பஸ்சுக்கும் போறதுக்கு ஐஞ்சு சதம்" குடுத்தனான்.

"அது சரி" ஆனா அவ ஆரிட்டையாவது ஏதாவது வாங்கி வருவா எண்டு நினைக்கிறன்.

'ஓ' நானும் அப்பிடித்தான் நினைக்கிறன் சொல்லியபடி நான் தொடர்ந்தும் வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மா இந்தக் கிழமையும் கடன் வாங்கினால் அவவின்ரை சம்பளம் முழுவதும் கடனை அடைக்கப் போயிடும். பிறகு கையிலை ஒரு சதமும் இருக்காது. என்ரை இந்தச் சட்டையையும் இனி வீசத்தான் வேணும் போலை இருக்கு. குனியிற நிமிரிற நேரமெல்லாம் 'புர் புர்' எண்டு சத்தம் போட்டபடி கிழிந்து கொண்டிருக்குது. தையல்களும் எண்ணைப் பிசாணுமாய் அசிங்கமாய்க் கிடக்குது வீசத்தான் வேணும் ஆனால். அம்மா சொன்னவதான் என்ரை வெளியிலை எங்கையாவது போடுற சட்டையை வீட்டிலை எடுத்துப் போடச் சொல்லி. ஆனால் அதைப் போட்டால் எனக்கு வெளியிலை போற நேரத்துக்கு போட ஒரு உடுப்பை எப்படி அவ வாங்கித் தரப்போறா? அவவுக்கு ஏலாது எண்டு எனக்கு வடிவாத் தெரியும்.

பக்கத்து வீட்டுக்காறற்றை கோயில் தானம் குடுக்கிற நாள் வாற நேரம் அவை அங்கை இருக்கிற கழுவித் துடைக்கிற வேலையளுக்காக என்னையும் கூட்டிப் போவினம். அங்கை போனாலோ, போன நேரத்திலை இருந்து பாத்திரங்களை கழுவுறதிலையே என்ரை முழுநேரமும் போயிடும். முதுகு முறியிற அளவுக்கு வேலை இருக்கும். ஆனாலும் எனக்கு கோயிலுக்கு அவையோடை போக விருப்பம்தான். ஏனெண்டால் இதை விட்டால் வேறை எங்கை தான் நான் வெளியிலை போறது. அதுக்கு ஒரு வாய்ப்பும் எனக்கு இல்லை. என்ரை இந்த வெயிலை போற நேரத்திலை போடுற? உடுப்பை வீட்டுக்குப் போட்டால் பிறகு அவையோடை கோயிலுக்குப் போகேக்கை என்னத்தை உடுக்கிறது? அம்மாவுக்கு அவ்வளவு கெதியா எனக்கு உடுப்பு தைச்சுத்தர ஒரு நாளும் ஏலாது.

திடீரென அடுப்பிலே அவிய வைத்த ஈரப்பிலாக்காயின் ஞாபகம் வந்தது. பானையை பார்ப்பதற்காக விறாந்தையிலிருந்து அடுப்படிப்பக்கமாக எழுந்து நடந்தேன்.


"கோயிலுக்குப் போறாய் போலை ஹாமினி"

'ஓமோம். கோயிலுக்குப் போகத்தான்.... கொஞ்சம் அதைத் தாறியோ' எங்கை பெட்டையைக் காணேல்லை...

பாட்டி பக்கத்து வீட்டுக்காரியுடன் பேசுவது கேட்டு நான் திரும்பவும் விறாந்தைப் பக்கமாக ஓடிவந்தேன்.

"அந்தப் பூ ரண்டையும் பிடுங்கித் தா பிள்ளை. கோயிலுக்குக் கொண்டு போக".

அந்தப் பூக்ககள் இரண்டையும் பிடுங்கி அவளது கூடையில் போட்டது எனக்கு சந்தோசத்தை அளிக்கவில்லை. அவை இரண்டும் எனது ரோஜாச் செடியில் முதல் முதலாகப் பூத்த சின்னஞ்சிறிய பூக்கள். எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் அவள் எனது ஹெந்திரிக்கா செடியிலிருந்த பூக்களையும் ஏற்கெனவே பறித்து விட்டிருந்தாள். இந்தக் கிழவி காலையில் என்ன வேலை எல்லாம் செய்திருக்குது என்பதை நான் பாட்டிக்குக் கட்டாயம் சொல்லத் தான் வேணும்.



அம்மாவுக்கு சம்பளம் கிடைத்தவுடனை தன்ரை கடனைத் தந்திடுவா எண்டு அவனுக்குத் தெரியும். இவனாலை தான் இப்போதெல்லாம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பாணை தேத்தண்ணியில தோய்த்துத் தோய்த்துச் சாப்பிட முடிகிறது.

"எவ்வளவு அநியாயம். என்ரை அழகான பூக்கள் எல்லாத்தையும் இந்த அசிங்கம் பிடித்த நாத்தல் கிழவிக்கு குடுக்கிறது எவ்வளவு அநியாயம். காலைலை அம்மா ஒரு ஐம்பது சதம் கடன் கேட்டது. கேக்க முதலே முகத்திலை அடிச்சது போலை இல்லையெண்டு சொன்னதெல்லே இந்தக் கிழவி? ஆனால் அவளிட்டை பிக்குமாருக்கு தானம் குடுக்கிறதுக்கு சாமான்கள் வாங்க மட்டும் நிறையக் காசு இருக்கு. இதெல்லாம் உங்கடை பிழை பாட்டி. அவள் என்ரை பூக்களைப் பிடுங்கிறத்துக்கு நீங்கள் விட்டிருக்கக் கூடாது."

" சத்தம் போடாதை பிள்ளை. தேவையில்லாமல் பாவத்தை உழைக்காதை"

"ஏன்? நாங்கள் கோயிலுக்கு காசு குடுக்கிறேல்லையே? சம்பளம் எடுத்த உடனை அம்மா கோயிலுக்கு இல்லாமல் வேறை எங்கை போறவ? ஆனால் இவை செய்யிற தானம் என்ன".. அதுவும் ஒரு கடன் குடுக்கிற மாதிரித் தானே.? வட்டியும் முதலுமாக அடுத்த பிறப்பிலை வாங்கிறதுக்கு தானே! இந்தச் சீமாட்டி மோட்சத்துக்கு போறதுக்கு முதல் நாங்கள் போயிடுவம் பாட்டி.

"கொஞ்சம் நான் சொல்லிறதைக் கேள். நிச்சயமாக நீ வளர்ந்துதான் விட்டாய் என்பது சரிதான். ஆனாலும் நாங்கள் எங்கடை பாடுகளையும் பாத்துக் கொண்டு இருப்பம். மற்றவையின்ரை விசயங்களுக்கை போய் தலைபோடத் தேவையில்லை".

நான் மீண்டும் வீதியைப் பார்த்தபடி விறாந்தையில் உட்கார்ந்தேன். அவள் இடித்துக் கொண்டிருந்த வெற்றிலை பாக்கு இப்போது அவளது வாய்க்குள் இருந்தது. பக்கத்து வீட்டுக்காரர்களைப் பற்றி யோசித்துப் பார்க்கையில் தான் அந்தப் பாண்காரனின் ஞாபகம் வருகிறது. அவனெல்லாம் எவ்வளவு அருமையான மனுசன். எங்கையோ எவ்வளவோ தூரத்துக்கு அங்காலை இருந்து வீடுவீடாப் பாண் குடுத்துக் கொண்டு வாறவன். ஆனால் எங்களுக்கு கடன் தாறதுக்கு அவன் ஒரு நாளும் தயங்கினதில்லை. அம்மாவுக்கு சம்பளம் கிடைத்தவுடனை தன்ரை கடனைத் தந்திடுவா எண்டு அவனுக்குத் தெரியும். இவனாலை தான் இப்போதெல்லாம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பாணை தேத்தண்ணியில தோய்த்துத் தோய்த்துச் சாப்பிட முடிகிறது.

இந்தப் பக்கத்து வீட்டுக் கிழவி ஒரு நாள் அம்மாவுக்கு செய்த வேலை. 'அதை நினைச்சாலே எனக்கு நெஞ்சு கொதிக்கும். ஆனாலும் என்னவோ அவள் கோயிலுக்குப் போக வா எண்டு கேட்டால் மாட்டன் எண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சொல்லிற அளவுக்கு எனக்கு இன்னும் உறுதியாக இருக்க முடியிறேல்லை'.

அண்டைக்கு சம்பளம் எடுத்துக் கொண்டு வந்தவுடனை அம்மா வாங்கின கடனைக் குடுக்கிறதுக்காக கிழவியின்ரை வீட்டுக்குப் போனா. இப்பிடித்தான் அம்மா எப்பவும் செய்யிறவ எண்டதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் அண்டைக்கு



முந்தி ஒரு நாளும் இல்லாத புதினமா ஒரு வேலையை அந்தக் கிழவி செய்தாள். அவள் அம்மாவை ஒரு கதிரையைக் காட்டி அதிலை இருக்கச் சொல்லி ஒரு பால் தேத்தண்ணியும் குடுத்தாள். எப்பிடியோ அவள் அம்மாவைக் கொண்டு அண்டு பின்னேரம் தன்ரை மிளகாய் எல்லாத்தையும் அரைப்பித்துக் கொண்டாள். அண்டையில் இருந்து இந்தக் கிழட்டுச் சனியனில் எனக்கு எப்பவுமே எரிச்சல் தான். பாவம் அம்மாவின்ரை சீமெந்தும் மண்ணும் பட்டுப் புண்பட்டுப் போன கைகள். மிளகாய் அரைச்சதில எரியத் தொடங்கிட்டுது. அவவின்ரை கண்கள் கண்ணீரால் நிரம்பி வழிந்தன. இப்பிடிப்பட்டவள் தான் இந்தக் கிழடி. அவளின்ரை வேலைக்காறி அண்டைக்கு வரயில்லையாம். இப்பிடித்தான் எப்பெல்லாம் வீட்டிலை வேலைக்காறி இல்லையெண்டால் அந்தத் தந்திரக்காறி ஆரையாவது தன்ரை வேலையளைச் செய்யிறத்துக்குக் கண்டு பிடிச்சிடுவாள்.

அண்டைக்கு அம்மாவின்ரை கையளுக்கு தேங்காயெண்ணை பூசுற நேரம் எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. நான் வாய்விட்டு அழுதே விட்டேன். அவ வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும் போதெல்லாம் நன்றாகக் களைத்துப் போய் தான் வருவா. இதனால் நான் அவவ வீட்டில் எந்த வேலையும் செய்ய விடுறதில்லை. அவ வந்தவுடன் சாப்பிடுவதற்கு ஏதாவது சூடாக தயார் செய்து வைத்திருப்பேன்.

அடுப்பில் இருந்த ஈரப்பிலாக்காய் திரும்பவும் ஞாபகத்திற்கு வந்தது. அதை இனி இறக்கி மூடி வைக்க வேண்டும். அம்மா ஏன் இன்னமும்' வரவில்லை? பாட்டி இன்னமும் தன் வெற்றிலையை மென்றபடி விறாந்தையிலேயே இருக்கிறாள். இருள் வீட்டிற்குள் முற்றாக வியாபித்துவிட்டது. இனி விளக்கைக் கொழுத்தித்தான் ஆக வேண்டும்.

"பாட்டி ஏன் இன்னும் அம்மாவைக் காணவில்லை"

"நீ விளக்கைக் கொழுத்து பிள்ளை"

நான் போத்தல் விளக்கை கொழுத்தி மேசையில் வைத்து விட்டு அம்மம்மாவிற்குப் பின்னால் போய் நின்றேன். எனது தலைக்குள் ஏதேதோ கற்பனைகள் எழுந்தன. போத்தல் விளக்கின் வெளிச்சம் விறாந்தைக்குப் போதாததாக இருந்தது. இதனால் எனது விசித்திரக் கற்பனைகள் இன்னும் வேகமாக எந்தத் தங்கு தடையுமின்றி நர்த்தனமாடத் தொடங்கின.

"கட்டிட வேலைக்காக கட்டப்பட்டிருந்த சாரமரம் ஒன்று சரிகிறது. அதிலிருந்து விழுந்த ஒருவர் சாகிறார். இன்னொருவர் சரிந்த மண்ணுள் புதையுண்டு போகிறார். அவரை மீட்டெடுத்து வைத்தியசாலைகு கொண்டு போகிறார்கள்" ஒரு பெண் தலையில் தட்டு நிறைந்த மண்ணை சுமந்து செல்கையில் வழுக்கி விழுந்து தனது கையை உடைத்துக் கொள்கிறாள். நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக மாறி மாறி வந்து என் மனதைப் போட்டுப் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தன.

மீண்டும் ஒருமுறை எழுந்து வீதியைப் பார்க்க நினைத்தேன். ஆனால் எனது கால்களுக்கு திடீரென சக்தியற்றுப் போனமாதிரி இருந்தது. எனக்கு எழுந்திருக்க முடியவில்லை. ஏதோ சொல்ல நினைத்துப் பாட்டியின் முகத்தைப் பார்த்தேன். ஆனால் என்னால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. எனது வாய்க்குழியும் இதழ்களும் வரண்டு போய் விட்டிருந்தன. இருள் மிகவும் வலிதாகி விட்டிருந்தது. அம்மம்மாவின் முகத்தை சரியாகப் பார்க்கக் கூட முடியவில்லை. எவ்வளவு நேரம் இப்படிக் களைத்துப் போய் வெளித்துப் போயிருந்த முற்றத்தை அந்த இருளினூடே பார்த்த படி இருந்திருப்பேன் என்று தெரியவில்லை. ஒரு கலங்கலான ஆனால் அச்சுறுத்துகிற ஒரு உருவம் இருளிலே வருவது போலத் தோன்றியது. திடீரென அது அந்தப் போத்தல் விளக்கின் மங்கல் வெளிச்சத்தில் மெல்லியதாக வெளிப்பட்டது ஆ. அது. அது என் அம்மா.

நான் திடீரென்று எழுந்து அவளது கையில் இருந்த பையை வாங்கிக் கொண்டேன். பாட்டி இன்னமும் விறாந்தையிலேயே இருந்தாள். அம்மாவும் அந்த இருட்டுக்குள் அவளருகே உட்கார்ந்து கொண்டு ஒரு கிளாஸ் தண்ணீர் தரும் படி கேட்டா. ஏன் இவ்வளவு நேரம் பிந்தியது வருவதற்கு என்று கேட்க எனக்கு மனம் வரவில்லை. கையைத் தூக்கியபடி நான் உள்ளே போகத் தொடங்கினேன். போத்தல் விளக்கிலிருந்து அழகான ஒலி எல்லா இடமும் பரவியிருந்தது. வெளியே முழு இருட்டும் விறாந்தையைச் சூழ்ந்து கொண்டிருப்பதால் முழுப் பிரகாசமும் வீட்டிற்குள் வந்து விட்டதோ என்று எனக்குத் தோன்றிற்று. அம்மாவுக்காக ஒரு கோப்பை தண்ணீருடன் வெளியே வந்த போது எனது கண்கள் அந்த விளக்கு வெளிச்சத்தில் கூசின. நீண்ட நேரம் இருளில் இருந்ததால் அப்படி இருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

"என்னிடம் பத்து ரூபா இருக்கிறது. அடுத்த கிழமை திரும்பவும் என்னை முதலாளி வரச் சொன்னதாக கரோலிஸ் சொன்னான்."

"அது நல்லது. ஆனால் நீ கூலியைக் கொஞ்சம் கூட்டிக் கேட்க வேணும்"

"அப்பிடி ஒரேயடியாகக் கேக்கேலாது. கொஞ்சம் பொறுத்து நான் கரோலிஸ்ஸிடம் கேட்கிறேன்"

"கரோலிஸ்ஸை கொண்டு கேட்பிப்பதை விட நீயே உனக்காகப் பேசுறது தான் நல்லது"

"இல்லை 'முதலாளி சரியான நல்ல மனுசன். அவர் என்னைக் கைவிட மாட்டார்'. எனக்கு அது வடிவாத் தெரியும்"

கையில் தண்ணீர்க் கோப்பையுடன் வந்த எனக்கு அம்மாவும் பாட்டியும் பேசியது கேட்டது. ஆயினும் இந்தக் கதை எனக்கு முழுமையாகப் பிடிபடவில்லை.

"என்னத்தைப் பற்றிக் கதைக்கிறியள்"

- அம்மாவுக்கு அருகாக வந்தபடி நான் கேட்டேன். எதையும் பேசாமல் அம்மா தண்ணீரை வாங்கினாள். அவளது விரல்கள் எனது விரல்களைத் தடவிச் சென்றன. அவை மிகவும் சில்லிட்டுப் போயிருந்தன. அவளைச் சூழ முகப்பவுடரையொத்த ஒரு வாசனை வீசுவதாகத் தோன்றியது. இந்த மணத்தினால் அள்ளுப்பட்ட எனது மனம் மீண்டும் ஏதோ நினைவுகளில் சஞ்சரிக்கத் தொடங்கியது.

- "இப்ப நீங்கள் இரவிலும் கனநேரம் வேலை செய்ய வேண்டி இருக்குமோ அம்மா?. அந்தக் கட்டிடத்தை கெதியா முடிச்சுக் குடுக்க வேணுமெண்டு சொல்லினமோ?"

- "அதைப்பற்றிக் கவலைப்படாதை. நீ அந்த மீனை கழுவி வெட்டு"

- நான் அமைதியாக வீட்டிற்குள் நுளைந்தேன். கையிலிருந்த மீனின் மணத்தால் சூழப்பட்டதால் தடைப்பட்ட எனது எண்ணங்கள் தமது பயணத்தை தொடராமல் திகைத்துப் போய் நின்றன. அந்தப் பயணத்தை மேலும் தொடர வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை. பாதையைப் பற்றியோ அமைதியாக இருப்பது பற்றியோ எந்த முடிவும் இல்லாதிருக்கும் போது எப்படிப் பேசாமல் இருப்பது.? ஆனால் 'அம்மா. காலையில் பஸ்சுக்கும் போக ஒரு ஐஞ்சு சதம் கூட இல்லாமல் போனவள் வரும் போது ஒரு பாறை மீனுடன் வருகிறாள்'. பாரை மீன் மிகவும் ருசியான மீன். ஆனாலும் அது நாறத்தான் செய்கிறது.

- அம்மாவும் பாட்டியும் குசுகுசுத்த விடயத்தை என்னால் மறக்க முடியவில்லை. நான் மீனைப் பையில் இருந்து வெளியே எடுத்துக் கழுவி வெட்டி அடுப்பில் வைத்தேன். சிறிய பாண் துண்டுகளை மீன்குழம்பில் தோய்த்துச் சாப்பிடுவது. நான் உடைத்த சிரட்டைத் துண்டுகளை அடுப்பில் வீசினேன். அடுப்பு பற்றிச் சத்தத்துடன் சீறி எரிகிறது. வீடு முழுவதும் வெளிச்சத்தால் பிரகாசமாக இருந்தது. போத்தல் விளக்கின் வெளிச்சம் மேலும் பிரகாசமாக ஒளி தந்து கொண்டிருந்தது. ஆனால் அம்மாவும் பாட்டியும் அந்த இருளிலிருந்து இன்னமும் எழுந்து வரவில்லை.

## முடிவற்ற நீதி



எந்த வானிலும் முழுநிலா ஆளுகை
அஞ்சி ஒழிந்திடப் பரதேசம் இல்லை!

புத்தாயிரம் ஆண்டும் புது நூற்றாண்டும்
வந்து களித்து ஆறி எழுமுன்னம்
நொஸ்ரடாமசின் தீர்க்கதரிசனம்
மெய்படத் திமிறும் ஆதிக்க எடுப்புகள்

மக்களுக்காக மக்களின் பெயரால்
அரசுகள் அமைப்புகள் என்ற பெயர்களில்
புடைத்த நரம்பும் விறைத்த தசையும்
பூண்ட மனிதரின் ஆதிக்க எடுப்புகள்

மக்களின் வயிற்றில் புளியைக் கரைத்து
மீளுட்டம் பெறுமொரு தீர்க்கதரிசனம்
பொய்த்துப் போகச் செய்ய இயலா
ஆற்றலும் அறிவும் எப்பெயர் கொள்ளும்?!

ஆண்டு பலநூறு ஈட்டிய அறிவு
அழியுமோ தீர்க்கதரிசனம் முன்?!
அழிந்து போமெனில் மனிதம் அறியா
ஆதி மனிதரோ இன்னமும் நாம் ?!

புடைத்த நரம்புகள் புடைப்பு நீங்குக
விறைத்த தசைகள் விறைப்பு நீங்குக
திமிறும் வெறியின் திமிர் அடங்குக

உள்ளத்தில் அன்பு இளந்தளிர் விடுக
மூளையில் அறிவு நற்சுடர் விடுக
உலகத்து உயிருடன் மனிதரும் வாழ்க

சி. ஜெயசங்கர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறிப்பேடு

## "Black Hawk Down" – ஹொலிவூட்டுடன் இணைந்து போருக்கான புதிய முஸ்தீபுகள்

ஆப்கானிலிருந்து தற்போது பிலிப்பைன் வரை நகர்ந்திருக்கிறது அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம்: இந்த மாய முலாம் பூசப்பட்ட யுத்தத்திற்கு எதிராகக் கிளர்ந்திருக்கிறார்கள் உலகெங்கிலும் மிகச் சிறுபான்மையினராய்ப் பரந்திருக்கிற புத்திஜீவிகள், மனித உரிமையாளர்கள், மனிதாபிமானமுள்ளவர்கள். அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இந்த யுத்தத்தை பரவலாக நடத்துவதற்கும், நகர்த்துவதற்குமான முஸ்தீபுகளை சகல வழிகளிலும் மேற்கொண்டு வருகின்றன. இந்த வகையில் அது ஹொலிவூட் திரையுலகத்தையும் தன் கைக்குள் கொண்டுவந்திருக்கிறது. அண்மையில் வெளியாகியுள்ள "Black Hawk Down" என்ற திரைப்படம் மனித உரிமையாளர்களதும், யுத்தத்தை எதிர்ப்பவர்களதும் கவனத்தைப் பெற்றிருக்கிறது. இப்படம் திரையிடப்படும் திரையரங்குகளின் முன்னாள் இவர்களின் பல ஆர்ப்பாட்டங்கள் நடந்தேறியிருக்கின்றன. நியுயோர்க்கில் A.N.S.W.E.R (Act Now to Stop War & End Racisim) என்ற அமைப்பு இத்திரைப்படத்தை பகிஷ்கரிப்பதற்கான அழைப்புக்களை விடுத்திருப்பதோடு அதற்கான காரணங்களையும் விளக்கியுள்ளது. இது இணைய ஊடகங்கள் மூலமாக சர்வதேச சமூகத்தினரைச் சென்றிருக்கிறது. அவர்களின் இது தொடர்பான அறிக்கையை பன்முக வாசிப்புக் கருதியும், சமகாலத் தேவை கருதியும் தமிழில் தருகிறேன்.

ஏன் நாம் பகிஷ்கரிக்கிறோம்?

சோமாலியாவுக்கெதிரான புதிய யுத்தமொன்றைத் தொடர்வதற்கான மக்கள் ஆதரவினைப் பெறும் பொருட்டுத் தயாரிக்கப்பட்ட இனவாதம் கக்குகிற ஒரு படமாகும் இது. பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தில் புஷ் நிர்வாகத்தின் கீழான பென்டகனின் அடுத்த முதன்மை இலக்காக உள்ள நாடு சோமாலியாவாகும்.

நியுயோர்க் டைம்சின் திரைப்பட விமர்சகர் Elwis Mitchell இது பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்-: சோமாலிகளை மிக மோசமான முறையிலும், கருந்தோள் கொண்ட, கத்திக் கொண்டிருக்கிற அற்ப விலங்குகளாகவும் வர்ணித்திருக்கிற, இனவாத வாடை அடிக்கிற படம் இது:.

1992-93 களில் உண்மையிலேயே சோமாலியாவில் என்ன நடந்தது?

UNOSOM (United Nations Operations in Somalia) என்ற போர்வையில் அமெரிக்கா 28 ஆயிரம் படைவீரர்களை சோமாலியாவுக்கு அனுப்பியது. பட்டினியால் வாடுகிற மக்களுக்கு உணவுப் பொருட்கள் எடுத்தச் செல்கிற மனிதாபிமானப் பணி என்றும் இதனைச் சொல்லியது. என்றாலும் அதற்கு மாறாகவே எல்லாம் நிகழ்ந்தன. பல வருடங்களாக ஆயிரக்கணக்கில் பட்டினியால் மடிந்து வாழ்க்கை இழந்து போயிருக்கிற ஒரு காலத்தில் இந்த மனிதாபிமானப் போர்வையிலான ஆக்கிரமிப்பு சோமாலியாவில் நடந்தது. அன்றைய மாலைச் செய்திகள் பட்டினியால் வாடுகிற சோமாலியர்களைக் காட்டிக் கொண்டிருந்தது. ஆனால் அமெரிக்கத் துருப்பினர் உணவுப் பொருட்களை வழங்காமலிருந்ததும், மக்கள் குடியிருப்புக்களில் தினமும் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டதும், குண்டுகள் பொழிந்ததும் மக்கள் பார்வைக்குக் காட்டப்படவில்லை. அமெரிக்காவின் இந்த ஆக்கிரமிப்பக்கு எதிர்ப்புக் காட்டிய பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் பத்து மாத இடைவெளியில் கொல்லப்பட்டார்கள்.

சோமாலியப் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என பலரும் இந்த அமெரிக்கப் படையினரின் ஆக்கிரமிப்புக்கெதிராக பரவலாக சோமாலியா எங்குமே கிளர்ந்தெழுந்து கொண்டிருந்தார்கள். சோமாலியர்களிடம் இவ்வாறான ஆக்கிரமிப்புக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த பெருமைமிக்க பல வரலாறுகள் உண்டு. இத்தாலிய, பிரித்தானிய மற்றும் பிரான்சிய காலனித்துவவாதிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து சுதந்திரம் பெற்றுக் கொள்ளப் போராடியவர்கள் சோமாலியர்கள். அந்த வகையில் அமெரிக்காவின் இந்த நவ-காலனித்துவ நடவடிக்கைகளுக்கெதிராகவும் தங்கள் போராட்டத்தை மேற்கொண்டார்கள்.

1992ன் (பனிப்போர் முடிவடைந்த ஒரு வருடத்தின் பின்னர்) இந்த இராணுவ ஆக்கிரமிப்பின் ஆரம்ப நாட்களிலேயே கொலின் பவல்- அப்போது அவர் கூட்டுப்படைத்தளபதிகளின் தலைவராகயிருந்தார்- யுத்தச் செலவீனங்களைக் கட்டுப்படுத்துமாறு கோரி பரவலாக எழுந்த அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக, மேற்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் விளம்பரம் என்று பகிரங்கமாகவே இதனை அழைத்தார். யுத்தத்தில் விரயமாக்கப்படும் பணத்தினை கல்வி, தொழில், சுகாதார மற்றும் வீடமைப்புத் திட்டங்களில் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனைகளை, அழைப்புக்களையெல்லாம் கொலின் பவல் நிராகரித்ததோடு , 300 பில்லியனுக்குமதிகமான இராணுவச் செலவீனத்திற்கான பாதீட்டை எந்தக் குறைப்புகளுமின்றி பெற்றுக் கொண்டிருந்தார்.

சோமாலியாவில் இடம்பெற்ற இந்த அமெரிக்க-ஐ.நா கூட்டுச் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையை வெளியிட்ட மனித உரிமை அமைப்பான Africa Rights, துருப்பினர் மேற்கொண்ட பல விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தது. அப்பாவிப் பொதுமக்கள் மீது படுகொலை, சித்திரவதை, கொள்ளை போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன என்றும், நிராயுதபாணியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டதென்றும், நிர்வாகத்துறைப் பிரதேசங்களில் ஏவுகணைத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதென்றும், இளைஞர்களுட்படவான ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனரென்றும் குறிப்பிட்டிருந்தது. அத்துடன் UNOSOM ஒரு ஆக்கிரமிப்பு இராணுவமாகவே நடந்து கொண்டதென்றும் அது தெரிவித்திருந்தது

முன் -போர்ப் பிரச்சாரங்கள்

செப்டம்பர் 11 க்குப் பின்னான நாட்களில், புஷ் நிர்வாகத்து அதிகாரிகள் ஹொலிவூட் பிரதிநிதிகளுடன் திரைப்பட உள்ளடக்கங்கள் பற்றிய பல கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். 2001 ஒக்டோபர் 17ல் நடைபெற்ற கூட்டமொன்றில் அமெரிக்கா மேற்கொண்டிருக்கும் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்திற்கு ஆதரவளிக்கும் வகையிலான நடவடிக்கைகளில் தங்களையும் ஈடுபடுத்துவதாகத் தெரிவித்திருந்தனர் ஹொலிவூட் பிரதிநிதிகள்.

Black Hawk Down-இந்த ஆதரவு நடவடிக்கைகளின் ஒரு வெளிப்பாடாகவே பென்டகனின் நேரடித் துணையோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. Motion திரைப்பட நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்ட இத்திரைப்படம் திரையிடப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் வெள்ளை மாளிகை உயரதிகாரிகளுக்காக விஷேடமாகத் திரையிடப்பட்டதோடு திருத்தங்கள் செய்வதற்கான அனுமதியும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. பாதுகாப்புச் செயலாளர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் மற்றும் ஒலிவர் நோர்த் போன்றோர் இந்த முன்காட்சியைக் கண்டுகளித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஹொலிவூட், இது மாதிரியான இனவாதம் மிகுந்த யுத்தப் பிரச்சாரப் படங்களைத் தயாரிப்பதற்கு பல மில்லியன் டொலர்களைச் செலவிடுகிறது. நியூயோர்க் நகரவாசிகள் தங்கள் ஓய்வூதியத்தில் வெட்டுக்களையும், மருத்துவ வசதிக் குறைப்புக்களையும், தொழிலின்மை, வேலைநீக்கம் போன்ற பிரச்சினைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கிற இந் நேரத்தில் இத்திரைப்படத்திற்காக 90 மில்லியன் ரூபாய்களைச் செலவிட்டிருப்பது கவனத்திற்குரியதாகும்.

சோமாலியாவில் புதிய யுத்தம்: என்ற இதன் தொடர்ச்சியான சிறு பகுதியினை அடுத்த வாரம் தருகிறேனே..

— எம்.கே.எம். ஷகீப்

## முதலாவது தமிழ் விவரண குறுந்திரைப்பட விழா

இன்றைய தமிழ் சினிமா என்பது பிரமாண்டங்களையும், தொழில்நுட்ப வளர்ச்சியினையும், கலர் கனவுகளையும் இணைத்ததாக யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டு சென்று கொண்டிருக்கும் நிலையில் ஒரு சில திரைப்படங்களிலோ நல்ல கதைகளைத் தெரிவு செய்தாலும் அதை வியாபார உலகத்திற்கு ஏற்றமாதிரி மசாலாத்தனங்களுடன் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் செயற்படுவதை காணலாம். இதனால் நல்லதொரு சினிமாவை நாங்கள் பார்க்க முடியாமலேயே போய்விடுகிறது.




குறிப்பாக சிட்டிசன், நந்தா போன்ற படங்களைக் குறிப்பிடலாம். இவை தளங்களில் வேறுபட்டிருந்தாலும் கூட கவனஞ்செலுத்தப்பட வேண்டிய கருவைக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இடைக்கிடையே நல்ல திரைபடங்களுக்கான முயற்சி இருந்தாலும் கூட யதார்த்தத்தினை வெளிப்படுத்துவது குறுந்திரைப்-படங்களும், விவரணப் படங்களும் ஆகவே காணப்படுகின்றது.

தமது கருத்துக்களையும், உலக யதார்த்தத்தினையும் வெளிப்படுத்துவதற்கு மிகவும் பலம் வாய்ந்த ஊடகமான சினிமாத்துறை பெருமளவிற்கு பணத்தினை செலவிடும் துறையாக மாறியிருப்பதும், சாதாரண இலட்சியவாதிகளுக்கு எட்டாத தூரமாகிப் போய் விடுகின்றது. இதனால் துவண்டு போன இலட்சியவாதிகளுக்கும், திரைப்படத்துறை சார்ந்த மாணவர்களுக்கும் தமது கருத்தினை வெளிப்படுத்துவதற்கான சிறந்த ஊடகமாக குறுந்திரைப்படங்களும், விவரணப் படங்களும் காணப்படுகின்றது. இக்குறுந் திரைப்படங்களும், விவரணப் படங்களும் தமது உள்ளார்ந்த வெளிப்பாட்டு சக்தி மூலம் தவிர்க்க முடியாமல் தன்னைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

பத்து வருடத்திற்கு முன்பு ஆனந்த பட்வர்த்தன் என்ற இந்தியர் விவரணப்படத்தின் மூலம் இந்திய பாபர் மசூதி இடிப்பினையும், அதன் உள்ளடங்கியிருந்த யதார்த்தத்தினையும், அச்சம்பவம் தொடர்பான மக்களின் உள்ளக் கிளறல்களையும் உலகிற்கு வெளிக்கொண்டு வந்திருந்தார். அது 1999ம் ஆண்டளவில் அவர் இலங்கைக்கு வந்திருந்த போது இங்கும் காண்பிக்கப்பட்டது.



அதே நேரம் தமிழ் சூழலிலும் பரவலாக சமூக அக்கறையுடையவர்களால் பல குறுந்திரைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் அதற்கான விளம்பரமின்மையால் அது பரவலாக மக்களைச் சென்றடையவில்லை. ஆயினும் இப்போது நிலைமை மாற்றமடைகின்றது.

இன்றைய உலகில் குறும்படங்களும், விவரணப் படங்களும் முக்கியமான திரைப்படக்கலை வெளிப்பாட்டு வகையினங்களாக அங்கீகரிக்கப்பட்டு உலகெங்கிலும், குறுந்திரைப்-படங்களுக்கென்றும், விவரணப் படங்களுக்கென்றும் சர்வதேச திரைப்பட விழாக்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன.

இதன் வெற்றியாக சென்ற ஆண்டு (2001 ஒக்டோபர் 26 முதல் நவம்பர் 01 வரை) லண்டன் சினிசங்கம், எழுத்தாளர் ஜமுனா ராஜேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் ஒருங்கிணைப்போடு முதல் உலக தமிழ் விவரணப்பட மற்றும், குறும்பட திரைபட விழா சிறப்பாக நடைபெற்றது.

குறும்படங்கள், விவரணப் படங்கள் தொடர்பான பகிர்தலுக்கான அவசியத்தையம் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான பரிமாற்ற நோக்கு மற்றும் ஒத்துழைப்பின் தேவையையும் உணர்ந்து லண்டனில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் விவரணப்பட மற்றும் குறும்பட விழாவில் உலகெங்கும் வாழும் தமிழர்களால் தயாரிக்கப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட படங்கள் திரையிடப்பட்டன.

தமிழகம், லண்டன், பிரான்ஸ், கனடா தமிழர்களின் படைப்புகளும் இடம்பெற்றன.

உலகெங்கும் வாழும் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளான அகதிகளின் துயரம், புலம் பெயரும் பெண்களின் வேதனைகள், தமிழக தலித் மக்களின் துயர் சார்ந்த வாழ்வு, உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் இலக்கியம், கலாசாரம் பற்றிய பிரச்சினைகள் குறித்ததாக படங்கள் இருந்தன.

இவ்விழாவில் அம்ஷன்குமார் இயக்கிய "சுப்பிரமணியபாரதி" படம் சிறந்த விவரணப் படத்துக்கான விருதையும், சிவக்குமார் இயக்கிய "ஆயிஷா" சிறந்த குறும்படத்திற்கான விருதையும் ஆர்.ஆர்.சீனிவாசனின் "தி அன்டச்சபிள் கண்ட்ரி" படம் சிறந்த எடிட்டிங்கிற்கான பரிசையும் பெற்றன.

உண்மையில் இலங்கையிலும் இவ்வகையான குறுந்திரைப்பட விழா ஒன்றினை ஒழுங்கு செய்வது நல்லது. இப்படியான முயற்சிகளின் மூலம் இவற்றிற்கான ஆதரவினை வழங்குவதோடு, ஊக்குவிக்கவும் செய்யலாம். அதே நேரம் இலங்கையிலும் இப்படியான பல நல்ல விவரண, குறுந்திரைப்படங்கள் எடுக்கப்படுவதற்கான ஊன்று சக்தியாகவும் இது அமையலாம்.

தகவல்: நன்றி நிழல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாரதியாரைப் புரிந்துகொள்வது எப்படி?

- கல்யாணி



மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே தெளிவும் வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்! என்றும்,

இனி ஒரு விதி செய்வோம்,
அதை எந்த நாளும் காப்போம் - என்றும்

பாடிய பாரதியார் வாழ்ந்து இறந்து போய்விட்டாலும் அவர் தொடர்பான சர்ச்சைகள் இன்னும் முற்றுப் பெறுவதாய் இல்லை. பாரதியாரை புரட்சிக் கவிஞராகக் கொண்டாடும் பலர் அவரை விமர்சனம் செய்வதை விரும்புவதுமில்லை.

ஆயினும் என்ன தான் ஒரு கவிஞன் அற்புதமாகப் பாடினாலும் அவனது கவிதைகளுக்கு அப்பால் அவனும் பொதுச் சொத்தாக ஆகிவிடுவதால் தவிர்க்க முடியாமல் அவனது தனிப்பட்ட வாழ்வும் சேர்ந்தே விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது.

பல கவிஞர்கள் அவர்களது கவிதைகளுக்கு கவிஞன் என்ற வகையில் உண்மையாக இருக்கத் தேவையில்லை என்று சொல்கிறார்கள். ஆயினும் வீம்புக்காகப் புரட்சிக்கவிதை எழுதி விட்டுப் பொறுப்பற்றுப் போவதை எப்படி அனுமதிக்க முடியும்.

பாரதி திரைப்படம் 2000ம் ஆண்டு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் பாரதி விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார். திரைப்படம் சார்ந்தும், பாரதி சார்ந்தும் பல விமர்சனங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் சில காத்திரமான விமர்சனங்கள் என்பது உண்மையே.

பாரதியின் வரலாற்றினைத் திரைப்படமாக எடுக்க வேண்டும் என்றும், பாரதியாராக நடிக்க வேண்டும் என்றும் பலர் முயற்சி செய்து கொண்டிருந்த வேளையில் ஞானசேகரன் பாரதி படத்தினை வெளியிட்டு விட்டார்.

பாரதியாக ஒரு தமிழ்நாட்டுக்காரரை நடிக்க வைத்திருக்கக் கூடாதா என்ற கேள்வி மராத்திய நடிகர் சாயாஜி ஷிண்டே இன் நடிப்பாற்றல் மூலம் புறமொதுக்கப்படுகின்றது. திரைக்கதை தொடர்பாகவும் விமர்சனம் எழுந்தது. பாரதியாரை கஞ்சா புகை பிடிப்பவராகவும், குடும்பத்தில் பற்று அற்றவராகவும், மகளுக்காக பூணூல் அணிபவராகவும் காண்பித்ததானது புரட்சிக் கவிஞரான பாரதி பற்றிய பிரம்மையை உடைப்பதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் திரைக்கதை யதார்த்தமாக இருக்க வேண்டும் என்ற அளவிலும் அவரை சாதாரண மனித இயல்புகளுடன் சித்திரிக்க வேண்டும் என்ற அளவிலும் அவை யதார்த்தத்திற்காக காட்சிப்படுத்தப்பட்டது எனப் பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இவற்றுக்கு அப்பால் திரைப்படத்தில் பாரதியாரின் வரலாற்றில் முக்கியமாக இணைந்தவர்களான பாவேந்தர் பாரதி தாசன், வ.உ.சிதம்பரனார், மூவேந்தர் வழிவந்த எட்டையபரம் மன்னர் போன்ற திராவிடத் தமிழர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்ட காட்சிகள் அமைக்கப்படவில்லை என்ற குற்றச் சாட்டும் எழுந்தது. அதாவது அவர்கள் திராவிடர்கள் என்பதற்காக புறக்கணிக்கப்பட்டதாக விமர்சிக்கப்பட்டது. அதே நேரம் இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் இருக்கும் பார்ப்பன சமூக மேலாட்சி சக்திகள் பாரதி திரைப்படத்தில் பாரதியின் சாதிய எதிர்ப்பினை அதிகம் காட்டியிருக்கத் தேவை இல்லை என்று விமர்சனம் செய்தன.

இவ்வாறான பல விமர்சனங்களுக்கு அப்பால் முக்கியமானது. பாரதியின் சுய முரண்பாடு பற்றிய விமர்சனமாக அமைந்திருந்தது. சுய முரண்பாடு தொடர்பாக நீண்ட காலமாகவே பல காத்திரமான விமர்சனங்கள் அவ்வப் போது வெளிவந்திருந்தன. தான் கொண்ட கொள்கைக்காக உயிரைக் கூட கொடுத்துப் போனவர்கள் பலர் உள்ளனர். இதன் முன் பாரதி தான் பாடிய புரட்சி முழங்கங்களுக்கு ஏற்ப தன்னாலேயே வாழ முடியாமல் போய்விட்ட முரண்பாடு என்பது விமர்சிக்கப்பட வேண்டியதே. பூணூலை அறுத்து எறிந்த பாரதியார் அதே பூணூலை தனது மகளின் திருமணத்திற்காக அணிவதும், வெள்ளையரை எதிர்த்த பாரதியார் இறுதியில் மன்னிப்பு கேட்டு கடிதம் எழுதுவதும் என பாரதியார் சமூக ரீதியாக மட்டுமல்ல அரசியல் ரீதியாகவும் தான் கொண்ட கொள்கைக்கு முரண்பாடு கொண்டவராக காணப்படுகின்றார்.

ஆயின் பாரதியார் இன்னும் சில காலம் வாழ்ந்திருப்பின் இதற்கு மேலும் பல சமரசங்களுக்கு தான் பிரச்சாரப்படுத்திக் கொண்ட கொள்கைக்கு முரணாகச் சென்றிருப்பாரோ என்று சந்தேகிப்பவர்களும் உள்ளனர். பாரதி வாழ்ந்த காலமும், அந்தச் சூழ்நிலையும், சமுதாயமும் பாரதியை வாழ விடவில்லை என்ற கோபமும் சமூகத்தின் மீது பலருக்கு உண்டு. அத்துடன் இலட்சியம், இயலாமை, அன்பு, மனிதாபிமானம், இப்படிப் பல போக்குகளையும் கொண்டோர் தானே மனிதர் என்று வாதிடுவோரும் உண்டு.

ஆயினும், பாரதி சிறந்த கவிஞர் என்பதற்காக அவரை விமர்சிக்காது விடுவோமா, அல்லது இனிமேலும் பலரது வரலாற்றுத் தவறுகளை இதன் மூலம் நியாயப்படுத்துவோமா, - என்ற கேள்விக்கு பதில் - நாம் யாரையும் கடவுளர்களாக்கத் தேவையில்லை. ஒவ்வொருவரும் தாம் கொண்ட கொள்கைக்கு எதிரானவர்கள் ஆகும் போது விமர்சிக்கப்பட வேண்டியவர்களே. இயலாமையை வைத்து வரலாற்றுத் தவறுகளை நியாயப்படுத்தி விட முடியாது என்பதாகும்.

பாரதியின் திரைப்படம் தொடர்பான விமர்சனங்களை தொகுத்து சலன சித்திரம் க.தேவதாசன் புத்தகமாக சென்ற ஜூனில் வெளியிட்டுள்ளார். இத்திரட்டில் இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த பல சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்த விமர்சனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பலவாறான கருத்துக்களை உள்ளடக்கிய 31 விமர்சனங்களும் பாரதி திரைப்படம் தொடர்பான சரியான புரிதலுக்கு செல்ல உதவும் என நம்புகிறோம்.

இவ்வாறாக திரைப்பட விமர்சனத்தினை மட்டுமே தொகுத்து வெளியிடப்படுவது இதுவே முதற்தடவை என்று நினைக்கிறேன். அதுவும் பாரதி திரைப்பட விமர்சனத்தினை வெளியிட்டது ஆக்கபூர்வமான முயற்சியே. இப்படியான முயற்சிகள் தொடர்வது நல்லது.

வெளியீடு
சலன சித்திரம்
த.பெ.எண்: 37
தெகிவளை
விலை 100.00

# தமிழ் மக்களின் தனித்துவத்தை வெளிப்படுத்த ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது எப்படி?

## இலங்கைத் தமிழரின் ஆங்கில மொழியிலான வெளிப்பாடுகள் குறித்த அக்கறைகளும் அபிப்பிராயங்களும்

- து.கௌரீஸ்வரன்

இன்றைய இலங்கையின் சூழலில் தமிழ் உத்தியோகபூர்வ மொழியாக உள்ள நிலையிலும், தமிழ்மொழி மூலமான உயர்கல்விக்கு வாய்ப்பளிக்-கப்பட்டுள்ள நிலையிலும், தமிழ்மொழி-யினைப் பேசுவோரிடையே ஆங்கில மொழி மீதான அக்கறை பெருகி வருவதனைக் காண முடிகின்றது. பெரும்பாலான தமிழர்கள் ஆங்கில மொழியினைப் பேசுவதனை ஓர் உயர்ந்த அந்தஸ்தாகவும், தம்மை ஏனை-யோரிடத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்குப் பயன்படுத்தும் ஓர் உயர்வான சாதனமாகவும் கையாண்டு வருகின்றனர். இன்னுஞ் சில தமிழர்கள் தமது சொந்த தாய்மொழியினைக் கீழ்த்தரமானதாகக் கருதி 'ஆங்கிலமே வாழ்க்கை' ஆங்கிலம் இல்லா-விட்டால் இந்த உலகத்தில் வாழவே முடியாது என்று கூறியபடி ஆங்கில மொழிக்கு முதன்மை கொடுத்து வாழ்ந்து வருவதனையும் காண நேரிடுகிறது.

இலங்கைத் தமிழரிடையே பயன்படுத்-தப்படும் ஆங்கிலமொழியின் நோக்கு நிலையினையும் அதன் பண்புகளையும் கொண்டு பார்க்கும் போது "இலங்கையின் தமிழ்பேசும் சமூகத்தவரிடையே ஆங்கில மொழியானது உயர்கல்வி, உயர் அந்தஸ்து, பொருளாதார தொழில்நுட்ப வளர்ச்சி என்கின்ற மாயை களுடாக 'உலகமயமாதல்' திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகார மொழியாகத் திணிக்கப்பட்டு வருகின்றது" என்றே கூறத் தோன்றுகிறது.

மேற்கூறிய நிலையில் நாம் இன்று ஆங்கில மொழியினை ஓர் அதிகாரத்துவம் மிக்க மொழியாக ஏற்றுக் கொண்ட அதற்கு அடிபணிந்து அந்த மொழியைக் கற்றுக் கொள்வதுடன் அந்த மொழியினூடாகத் திணிக்கப்படும் மேலைத்தேய நடை, உடைபாவனைகளையும் உள்வாங்கிக் கொண்டு ஓர் நுகர்வுச் சமூகமாக நம்மை மாற்றிக் கொள்வதுடன், பிரித்தானிய 'றோயல்' பரம்பரையினரின் நகல்களாக நம்மை உருமாற்றவும் முனைந்து கொண்டிருக்-கின்றோம். இவ்விதமாக மேலைத்தேய நடை, உடை, பாவனைகளை, பழக்க வழக்கங்களை எம்மிடையே திணித்து எம்மைச் சுய அடையாளமற்றவர்களாக உருமாற்றி வெறும் நுகர்வுச் சமுதாயமாக உருவாக்குவதிலேயே இன்றைய உலகமயமாதல் எனும் நவ-காலணித்துவம் எத்தனித்துக் கொண்டிருக்-கின்றது. அந்த எத்தனிப்பின் ஓரம்சமாகவே எம்மீதான அதிகார நிலையிலான ஆங்கில மொழித்திணிப்பும் அமைந்துள்ளது.

இந்த அபாயகரமான நிலையில் தமிழர் சமூகமாகிய நாம் எமது தமிழர் என்ற அடையாளத்தை, சுய கௌரவத்தை விட்டுக்கொடுக்காத நிலையிலும், அதே-வேளை தவிர்க்கவியலாதபடி ஆங்கில-மொழியின் அவசியத்தை உணர்ந்துள்ள நிலையிலும் எவ்வாறு செயற்பட முடியும்? என்கின்ற வினா எம்முன் எழுந்துள்ளது. இந்தக் கடினமான வினாவிற்கு தெளிவான, நடைமுறைச் சாத்தியமான விடையினைத் தருகின்ற நிகழ்வு ஒன்று அண்மையில் மட்டக்களப்பில் நடந்துள்ளது.

"இலங்கைத் தமிழரின் ஆங்கில மொழியிலான வெளிப்பாடுகள்" எனும் தலைப்பில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 30ம் திகதி மட்டக்களப்பு தாண்டவன்வெளி 'பேர்டிணண்ட்' மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்த விழாவே அந்த நிகழ்வாகும். இவ்விழாவின் பிரதம ஏற்பாட்டாளர்களாக 'மூன்றாவது கண்' ஆங்கில மன்றத்தாரும், இணை ஏற்பாட்டாளர்களாக மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏயினரும், அல்பியோன் ஆற்றுகைக் கலைகளுக்கான மன்றத்தாரும் இருந்தனர்.

சி.வி.வேலுப்பிள்ளை அரங்கு, எஸ்.ஜே.கே.கிரவுதர் அரங்கு, அழகு சுப்பிரமணியம் அரங்கு என மூன்று அமர்வுகளாக விழா நடைபெற்றது. விழாவின் தொனிப்பொருள் இவ்விழா பெறுகின்ற முக்கியத்துவத்தினைப் பறைசாற்றி நின்றது எனலாம். அதாவது "இதுவரை நாம் ஆங்கில மொழியை எமது அந்தஸ்தினையும், உயர்நிலையினையும், வாழ்க்கை வசதி-களையும் பெருக்கி கொள்ள உதவும் மொழியாகவும், நமது பண்பாட்டிலிருந்து எம்மை அந்நியப்படுத்தும் மொழியாகவும், அதை ஓர் அதிகாரம் பெற்ற மொழியாகவும் கருதி அதற்கு அடிபணிந்து கற்று வருகின்றோமே தவிர அந்த ஆங்கில மொழியினை நமது பிரச்சினைகளை, நமது தனித்துவங்களை வெளி உலகிற்குக் கொண்டு செல்வதற்கான ஓர் மொழியாகவோ, நாம் சுதந்திரமாக விரும்பியபடி பயன்படுத்தக் கூடிய மொழியாகவோ கருதவும் இல்லை. பயன்படுத்தவும் இல்லை" என்று விழா ஏற்பாட்டாளர்கள் சார்பில் சி.ஜெய்சங்கர் கூறினார். இக்கூற்று ஆங்கில மொழியினை தமிழர்கள் புதிய பார்வையில் இனிமேல் கையாள வேண்டும் என்பதற்கான அறை-கூவலாக அமைந்திருந்தது.

இந்த அறைகூவலை நடைமுறைச் சாத்தியமாக நடாத்திச் செல்ல முடியும் என்பதை தெளிவுபடுத்துவதாக இவ்-விழாவில் பல கருத்துக்களும், அரங்க அளிக்கைகளும் நிகழ்த்தப்பட்டன. ஆங்கிலத்தில் ஆக்க இலக்கியங்கள் படைத்த இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய கருத்துரைகள் இடம்பெற்றன. இத்துடன் இலங்கைத் தமிழ் கவிஞர்களில் சிலர் எழுதிய ஆங்கில மொழியிலான கவிதைகள் சில, பாடசாலை மாணவிகளால் வாசிக்கப்பட்டன, இவற்றோடு இலங்கைத் தமிழ் கவிஞர்களின் சில தமிழ்கவிதைகள் ஆங்கில மொழிமாற்றம் செய்யப்பட்டு தமிழர் இசைமரபிற்கேற்ப இசை வகுக்கப்பட்டு இனிய பாடல்களாக பாடப்பட்டமை நெஞ்சு மறக்காத இனிய நிகழ்வுகளாக அமைந்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆங்கில மொழியை எப்படி தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை, தனித்துவங்களை வெளிக்காட்டும் மொழியாகப் பயன்படுத்தலாம் என்பதற்கான உதாரணமாக, சி.ஜெய்சங்கரினால் நெறியாள்கை செய்யப்பட்ட 'பறக்க முடியாத வண்ணாத்துப் பூச்சி' (The Flighthess Butterfly) எனும் ஆங்கில நாடகம் அளிக்கை செய்யப்பட்டது. இந்த நாடகம் தமிழ் சூழலில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு, தமிழ் அரங்கப் பண்பாடுகளை உட்கொண்டு குறிப்பாக வடமோடி ஆட்ட முறைகளை கையாண்டு வெளிக்காட்டப்பட்டமை பலரதும் கவனத்தை ஈர்ந்ததோடு மட்டுமல்லாமல் அனைவரதும் பாராட்டையும் பெற்றது. இலங்கைத் தமிழரின் தனித்துவமான ஆங்கில அரங்க வரலாற்றில் ஓர் திருப்பு முனையாகவும், முன் முயற்சியாகவும் இந்த நாடகம் அமைவது மறுக்க முடியாத உண்மையாகும். இந்த நாடகத்தின் வழியில் இன்னும் பல புதிது புதிதான ஆங்கில நாடகங்கள் உருவாக வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பு என்பதுடன் காலத்தின் தேவையும் எனலாம்.

மொத்தத்தில் இவ்விழாவானது தேசிய இனங்களின் தனித்துவங்கள் அழிக்கப்-பட்டுவரும் இன்றைய பூகோளமயமாதல் சூழ்நிலையிலும், இலங்கைத் தமிழரின் சுயநிர்ணய இருப்பு சர்வதேச சமுகத்தவரால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்தப்படும் சூழலிலும் மிகுந்த காத்திரமானதாகவும், கருத்தாழமிக்கதாகவும் நடைபெற்றதுடன், பலருக்கு விழிப்புணர்வை உண்டு பண்ணிய நிகழ்வாகவும் அமைந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நந்தா: ஈழத் தமிழர் சார்பான ஒரு கரிசனைக் குரல்!

- றேவ்

இன்றைய சமாதானப் முன்னெடுப்புக்களின் போது இந்தியாவின் ஈழத் தமிழர் நலன் தொடர்பான அக்கறை மீண்டும் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்திய மக்களின் குறிப்பாக தமிழ்நாட்டுத் தமிழர்களின் மனநிலை எவ்வாறு உள்ளது என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகவே உள்ளது. குறிப்பாக அரசியல்வாதிகள் தங்கள் நலன்களிலிருந்து அறிக்கைகளை வீசுவதோடு அல்லாமல் அதை தங்கள் (தமிழ்நாட்டு) அரசியல் லாபத்திற்காக பயன்படுத்த முனையும் முயற்சியையும் நாம் காணலாம். இதில் இலங்கைத் தமிழர்களுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பதாகச் சொல்லிக் கொண்டவர்களெல்லாம் குறைந்த பட்சம் அவர்களின் சமாதானத் தீர்விற்கான முயற்சியில் ஒத்துழைக்கக் கூடாத தயாராக இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில் இந்தியாவில் வெளிவந்து பலதரப்பட்டவர்களின் வரவேற்பினை பெற்றிருப்பதாகச் சொல்லப்படும் திரைப்படம் நந்தா. இந்தியாவில் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள ஈழத் தமிழர்களையும் அக்கறைக்குரியதாகக் கொள்ளப்பட்டு எடுக்கப்பட்டிருக்கிறது.

நல்ல சினிமாவிற்கான அக்கறை உடைய அமெரிக்காவில் வாழும் தமிழர்களான சிலரின் முயற்சியில் அபராஜித் பிலிம்ஸ் என்ற பெயரில் உருவாக்கப்பட்டிருக்கும் நிறுவனத்தின் அனுசரணையில் வெளியிடப்பட்டிருக்கும் இத்திரைப்படம் இந்தியாவில் மட்டுமன்றி பல வெளிநாடுகளிலும் வரவேற்பிற்குரியதாக கூறப்படும் படம்.

2000ம் ஆண்டு தமிழ் இனி மாநாட்டின் போது ஒரு மாலையில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களது கலந்துரையாடல் ஒன்று திறந்த வெளியில் இடம்பெற்றது. அப்போது அங்கு தனது கருத்தினை வெளியிட்ட நண்பர் ஒருவர் புலம்பெயர்ந்தவர்களென்று வெளிநாடுகளில் இருக்கும் இடம்பெயர்ந்த மக்களை (குறிப்பாக ஐரோப்பா வாழ் தமிழர்களை) குறிக்கும் நீங்கள் ஏன் இந்தியாவில் அகதிகளாக இருக்கும் ஈழத் தமிழ் மக்களை இட்டு கவலை கொள்வதோ அக்கறைப்படுவதோ இல்லை என்று மிகவும் ஆக்ரோசமாகவே குரல் எழுப்பினார். அதன் போது அங்கிருந்த பலர் இது இம்மாநாட்டினை குழப்ப நினைப்பவர்களின் வேலை என்று கூடச் சொல்லிக் கொண்டார்கள். உண்மையில் அவரது உணர்வினை புரிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே.

அந்த நேரத்தில் பலமாக உறைத்த ஒரு விடயம் அது. புலம் பெயர்ந்தவர்கள் என்று பொதுவாக அழைக்கப்படுவர்களில் ஏன் அவர்கள் இல்லாமல் போனார்கள். அவர்களின் மன உணர்வுகளும், அவர்களின் அவலங்களும் ஏன் வெளிக்கொணரப்படவில்லை. இப்படிப் பல கேள்விகள்.

அதற்குக் கூட அங்கிருந்த நபர் ஒருவர் சொன்னார், அங்கிருக்கும் மக்கள் தாங்களாகவே அம்முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என்று. இது கூட மிகவும் மோசமாக அம்மக்களின் உண்மை நிலை தெரியாத ஒரு எரிச்சலூட்டும் பதிலாகவே அமைந்திருந்தது.

எந்த விடயத்தினை யார் சொல்கிறார்கள் என்பதற்கப்பால் அவ்விடயத்தின் பால் இருக்கும் நியாயத்தினை கண்டு கொள்ளாமல் போவதென்பது தமிழ் சூழலிற்கு உரிய இயல்போ என்று எண்ணத் தோன்றியது.

ஆயினும் அந்நிகழ்வானது பலரிடையே அம்மக்களின் நிலை தொடர்பாக அறியவும் கவனம் செலுத்தவும் ஆன ஆவலைத் தூண்டியது உண்மையே.

அக்காலப் பகுதியில் இந்தியாவில் அகதிகளாக வாழும் ஈழத் தமிழ் மக்களின் நிலை தொடர்பாக பல கட்டுரைகள் வெளிவந்தன. ஆயினும் பழையபடி அம்மக்களை எல்லோரும் மறந்தே போனார்கள்.

உண்மையில் இந்தியாவில் அகதிகளாக வாழும் எமது மக்களின் நிலை என்ன? அவர்களது வறுமை, வேலையின்மை, அடிப்படை வசதிகள் கூடச் செய்து கொடுக்கப்படாமை, அதிகார வர்க்கத்தினரால் அவர்கள் ஒடுக்கப்பட்டிருக்கும் நிலை, எப்போதும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கப்படும் நிலை, வெளியில் செல்வதாயின் அனுமதி பெற்றே செல்ல வேண்டிய நிலை இப்படி அவர்களின் மோசமான நிலைமைகள் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்நிலையில் இந்தியாவில் வெளிவந்திருக்கும் நந்தா படம் அகதிகளான ஈழத்தமிழர்கள் தொடர்பாக எடுக்கப்பட்டிருப்பது பலரை திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

சேது படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் தனக்கென தனி முத்திரையைப் பதித்த பாலாவின் இரண்டாவது படம் இதுவாகும். பாலுமகேந்திராவிடம் உதவியாளராக இருந்தவர் பாலா. அவரால் வளர்த்தெடுக்கப்பட்டவர் என்பதாலோ என்னவோ தமிழ் திரைப்படத்துறையில் நல்ல சினிமாவினை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்.

எங்கெல்லாம் அதர்மம் தலை தூக்குகின்றதோ அங்கெல்லாம் பகவான் (கிருஸ்ணன்) அவதரிப்பார் - என்பது பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது தான் இப்படத்தின் தாரக மந்திரம். அந்த அதர்மம் எப்படிப் பட்டதாக இருந்தாலும் அதை எதிர்க்கும் மனிதன் கூட அவதாரமான கிருஸ்ணனே.




நந்தாவில் சூர்யா, ராஜ்கிரண் என்று இரண்டு கதாநாயகர்கள் நடித்துள்ளார்கள். சூர்யாவின் பாத்திரத்தினை விட ராஜ்கிரண் பாத்திரமே சிறப்பாக கையாளப்பட்டுள்ளது. அவர் தனது நடிப்பின் மூலம் அப்பாத்திரத்தினை மிகவும் நன்றாகவே மெருகேற்றியிருக்கிறார்.

நந்தாவின் கதை இதுதான்:

அதேவேளை ராமேஸ்வரத்தில் மன்னர் பரம்பரையின் எச்சமாய் விளங்கும் ராஜ்கிரண் அதிகார வர்க்கத்தினரிடம் கூட செல்வாக்குப் பெற்றவராகவும் காணப்படுகின்றார்.

தன்னை சூழ நடக்கும் அதர்மத்தினை தட்டிக் கேட்பவராகவும் காணப்படுகிறார்.


ஈழ அகதிகளை கடலில் இறக்கி விட்டுப் போய்விடுகிறார்கள் படகுக்காரர்கள். ஆயினும் இந்திய அதிகார வர்க்கம் அந்த அகதி மக்கள் தொடர்பாக அசண்டையீனமாகவும் சிலவேளைகளில் மிக மோசமாகவும் நடந்து கொள்கின்றது. இந்நிலையில் தத்தளிக்கும் அகதிகளை அழைத்துச் சென்று முகாம்களில் விடுவதோடு அவர்களுக்கான உதவிகளையும் செய்கின்றார் ராஜ்கிரண்.

இதில் ஈழத்தமிழர்களின் அவலத்தினை வைத்து பிழைப்பு நடத்த நினைப்பவர்களையும் அம்பலப்படுத்துகிறது இப்படம். இறுதியில் ராஜ்கிரண் அவரது மருகனாலேயே கொல்லப்படுகின்றார். அதை அறிந்த நந்தா மருகனைக் கொல்கிறார். ஆனால் இது பற்றி அறியாத தாய் நந்தாவை ஒரு கொலைவெறிகாரனாகவே நினைத்து கொலை செய்யப்பட்டவனின் மனைவி மண் அள்ளித் திட்டுவதைப் போல் கற்பனை பண்ணுகிறாள். கடைசியில் தன் மகனை தானே சாப்பாட்டுடன் விசத்தினை கலந்து ஊட்டிக் கொல்கிறாள்.

> *இன்று இந்திய அரசு தொடங்கி, தமிழ் நாட்டு அரசியல் வரை தமது நலனிற்காக ஈழத்தமிழ் அகதிகளை இட்டு கரிசனைப்படாமலேயே இருக்கின்ற சூழ்நிலையில் அதுவும் அதையே குற்றமாகவும் பார்க்கும் நேரத்தில் ஈழத்தமிழ் அகதிகள் தொடர்பாக அனுதாபத்தினையாவது உருவாக்க வேண்டும் என நினைத்து பாலா செயற்பட்டிருப்பதானது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.*

சிறுவனான நந்தாவின் தகப்பன் வேறு ஒரு பெண்ணுடன் உறவு வைத்திருப்பதுடன், இதற்காக நந்தாவின் தாயை தகப்பன் தாக்குவது தான் படத்தின் ஆரம்பம். அவன் தனது தாய் தாக்கப்படுவதை தடுக்க முயற்சிக்கிறான். தகப்பனால் அவனும் தாக்கப்படுகின்றான். என்ன செய்வது என்று அறியாத சிறுவன் கையில் கிடைக்கும் ஒரு மரக்கட்டையால் தகப்பனின் பிடரியில் அடிக்கிறான். எதிர்பாராமலேயே தகப்பன் இறந்து போகிறார். அதிர்ச்சியடைந்த தாய் அவனைத் திரும்பிப் பார்க்கும் போது அவன் வெறித்தனமான புன்னகை பூப்பான். அந்தப் புன்னகை அவனை ஒரு கொலைவெறிகாரனைப் போல் அவனது தாய்க்கு பீதியை உண்டு பண்ணுகிறது.





சிறுவனான நந்தா தண்டனை கிடைக்கப்பெற்று, சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்படுவதும், அவனது தாய் அவனைப் பார்க்க வரும் போது அவன் அங்கிருக்கும் சிறுவன் ஒருவனை அடித்துக் கொண்டிருப்பதும், அவனது தாய் அவனை மிகவும் வெறுக்கக் காரணமாகின்றது.

இதனால் வாலிபனாக வெளியே வரும் நந்தாவினை தாய் ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள். அவனது தாய் பாசத்திற்கான ஏக்கத்தினை, அவளது கையால் ஒரு வாய் சோறு வாங்கிச் சாப்பிட விரும்பும் அவனது ஆசையினை, அவளது மடியில் தூங்க நினைக்கும் அவனது ஆன்மாவிற்கான ஏக்கத்தினை அவள் புரிந்து கொள்ளாமலே போகின்றாள்.

இதில் சூர்யா நன்றாகவே நடித்துள்ளார். ஆயினும் அவரது முரட்டுத்தனத்தினை காண்பிப்பதற்கான பல காட்சி இணைப்புக்கள் அவரது பாத்திரத்தினை சிதைத்துவிடுகின்ற அவலத்தினையும் இதில் நீங்கள் காணலாம்.

இதற்குள் நந்தாவும், இலங்கைப் பெண்ணான கல்யாணியும் (லைலா) காதலிப்பது, பாடல் காட்சிகள் என சாதாரண சினிமாவில் வரும் வியாபார நோக்கத்திற்கான ஒன்றிணைப்புக்களும் இருக்கின்றது.

பாலாவின் இயக்கத்தில் இப்படம் பார்ப்பதற்கு நன்றாகவே உள்ளது. முக்கியமாக இலங்கை அகதிகள் பெட்டி ரேடியோவில் இலங்கை யுத்தம் தொடர்பான செய்திகளைக் கேட்பதும் அவர்கள் முகத்தில் அந்நேரத்தில் தெரியும் பீதியும் மிகவும் அழகாகவே படமாக்கப்பட்டுள்ளது.

அதேபோல் சிறுவனான நந்தாவின் வெறித்தனமாக புன்னகையைப் பதிவாக்கிய விதம் என்பன நன்றாகவே செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், இலங்கை அகதிகள் தொடர்பாக பாலா மிகவும் அவதானமாகவே கையாண்டிருக்கிறார். அதிகாரத்தினது அசண்டையீனம் பற்றியும், இதை வைத்துப் பிழைப்பு நடத்துபவர்கள் பற்றியும் கோபப்படும் பாலா அம்மக்களின் கஸ்டத்தினை வெளிப்படுத்தவில்லை என்றே சொல்ல வேண்டும். சாதாரணமாக சுதந்திரமாக மக்கள் வாழ்வதைப் போல் காட்சிப்படுத்தி இருப்பதானது இன்றைய யதார்த்ததிற்கு அப்பாற்பட்டதாகவே காணப்படுகின்றது.

ஆயினும், இன்று இந்திய அரசு தொடங்கி, தமிழ் நாட்டு அரசியல் வரை தமது நலனிற்காக ஈழத்தமிழ் அகதிகளை இட்டு கரிசனைப்படாமலேயே இருக்கின்ற சூழ்நிலையில் அதுவும் அதையே குற்றமாகவும் பார்க்கும் நேரத்தில் ஈழத்தமிழ் அகதிகள் தொடர்பாக அனுதாபத்தினையாவது உருவாக்க வேண்டும் என நினைத்து பாலா செயற்பட்டிருப்பதானது வரவேற்கப்படவேண்டிய விடயம். ஒரு இந்திய தமிழ்நாட்டு தமிழரால் அம்மக்கள் தொடர்பாக சாதாரணமாக கரிசனைப்படவாவது முடிந்ததே என்பதையிட்டு ஆறுதல் கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒரு பிரஜையின் குரல்

# அம்பலத்துக்கு வரும் மிலேனியம் சிற்றி

- சுனந்த தேசப் பிரிய -

ஜனவரி 2ம் திகதி பொலீஸ் அத்தியட்சகர் குலசிரி உடுகம்பொல மிலேனியம் சிற்றியில் உள்ள ஒரு வீட்டைச் சுற்றி வளைத்து சில இராணுவ வீரர்களையும் ஆயுதங்கள் பலவற்றையும் கைது செய்த சம்பவம் தற்போது ஒரு பாரதூரமான பிரச்சினையாக மாறியுள்ளது. தேவையில்லாத காரியத்தில் கைபோட்டு இராணுவ இரகசியங்களை அம்பலப்படுத்தியதாக இராணுவ முக்கியஸ்தர்கள் பொலிசார் மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.

எல்.ரீ.ரீ.ஈ. யினரை சந்தோஷப்படுத்துவதற்காக வேண்டி தேசப்பற்று கொண்ட ஒரு இராணுவக் குழுவினரைக் காட்டிக் கொடுத்ததாக மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தை குறை கூறுகின்றது. பொலிஸார்கள் இன்னும் கூறுவது தாம் மேற்கூறப்பட்ட மிலேனியம் வீட்டை சுற்றி வளைத்தது உடதலவின்ன கூட்டுப் படுகொலைச் சம்பவப் பரிசோதனையின் ஒரு பகுதியாகவெனவும், அதற்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்றுமேயாகும். பின்னர் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கைது செய்த சிப்பாய்களை விடுதலை செய்துள்ளார். அவர்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருக்க சந்தர்ப்பம் தருமாறு பொலீஸார் வேண்டியுள்ளனர். பாதுகாப்பு அமைச்சர் அதற்கு இடம் வழங்கவில்லை கண்டி நீதியரசர் மூலமாக பொலிஸார் உடதலவின்ன விசாரணைக்கு ஒத்துழைப்பைப் பெற்றுத் தருமாறு உத்தரவொன்றைப் பெற்றுக் கொண்டனர். தூர விரிவான உளவுப் பிரிவென இராணுவத்தால் அழைக்கப்படும் இந்தப் பிரிவு, இரகசிய "மகசோன்"" பிரிவென சிஹல உருமய கூறுகின்றது. எல்.ரீ.ரீ.ஈ. தலைவர்களைப் படுகொலை செய்யும் பொறுப்பைப் பெற்றுள்ள இந்த அணி நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்களுடன் கூடியதொன்றென அந்தக் கட்சி கூறுகின்றது.



இலங்கை அரசு இதுபோன்ற இரகசிய தாக்குதல் நடவடிக்கையொன்றை செயற்படுத்தி வருவதாக முதலில் பகிரங்கப் படுத்தியது. எல்.ரீ.ரீ.ஈ. யினரே முல்லைதீவுப் பகுதியில் கிளைமோ குண்டுத் தாக்குதலினால் எல்.ரீ.ரீ.ஈ. த்தலைவர்கள் பலர் கொலை செய்யப்பட்டது இலங்கை இராணுவத்தின் இந்த "தூர விரிவான"" இரகசிய இராணுவத்தினாலேயே யெனவும் அவர்கள் கூறினார். அந்தக் கூற்றை நிராகரித்த இராணுவத்தினர் இந்தக் கொலைகள் எல்.ரீ.ரீ.ஈ. யினரின் உல்மோதல் விவகாரமொன்றென்றே கூறினார் மிலேனியம் சிற்றி ஆயுதக் களஞ்சியம் விவகாரம் பகிரங்கமானதன் பின்னர் இராணுவப் பகுதிச் செய்திகளை மேற்கோள் காட்டும் 'சண்டே ரைம்ஸ்" பாதுகாப்புப் பகுதிச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் மட்டக்களப்பு புலிகளின் தலைவர் நிசாமைக் கொலை செய்ததும் இந்தத் தூர விரிவு கொண்ட இராணுவப் பிரிவேயெனக் கூறியுள்ளார். இந்தப் பிரிவு பற்றி முதலில் தகவல்கள் வெளியானதும் இந்தச் செய்தியின் பின்னரேயாகும். பின்னர் கைது செய்யப்பட்ட இராணுவ வீரர்களின் பெயர்கள் பத்திரிகைகளில் வெளியாயின.

தற்போது இந்த இரகசியங்கள், இந்த இராணுவப் பிரிவு பற்றிய தகவல்கள் பகிரங்கமானவைகளாகும். பத்திரிகைகளில் அடிக்கடி இதுபற்றிய செய்திகள் வெளிவந்ததோடு மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்றத்திலும் தொலைக்காட்சியிலும் அது பற்றிப் பேசியுமுள்ளனர். ஆதலால் மேலும் இது சம்பந்தமான விபரங்கள் இரகசியமானவைகளல்ல. இந்த நடவடிக்கை உண்மையாகவே இரகசியமான முறையில் நடைபெற்றிருப்பின் பொலிஸ் அத்தியட்சகர் உடுகம்பொலவிற்கு இதுபற்றி அறியச் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. காரணம் இது பற்றிய தகவல்களை அவருக்குப் பெற்றுக் கொடுத்த இன்னொரு இராணுவ வீரரே எவ்வாறாயினும் எல்.ரீ.ரீ.ஈ. தலைவர்களைப் படுகொலை செய்யும் யுத்த உபாய முறைகள் இலங்கை அரசுக்கு இருந்ததென்பது மேலும் இரகசியமான ஒன்றல்ல.

இந்தப் பிரச்சினையிலிருந்து மேலும் பல முக்கியமான கேள்விகள் எழுகின்றன. எல்.ரீ.ரீ.ஈ. தலைவர்களைக் கொலை செய்வதற்காக இலங்கை அரசுக்கு யுத்த ரீதியான உபாயமார்க்கங்களைக் கையாள உரிமை உண்டெனில் இலங்கை அரசின் தலைவர்களைக் கொலை செய்வதற்கு எல்.ரீ.ரீ.ஈ. யினருக்கும் யுத்த ரீதியிலான பின்னணியில் உரிமைகள் இல்லையா என்பதாகும்.

நாங்கள் மனதில் நினைத்துக் கொள்ள வேண்டியது. இவை பகிரங்கமாகும் வரை அரசாங்கத்திற்கு எல்.ரீ.ரீ.ஈ.த் தலைவர்களைப் படுகொலை செய்தல் தமக்குப் பொறுப்பான காரியமொன்றென ஏற்றுக் கொள்ளாததேயாகும். இது மட்டுமல்ல, நோர்வேஜியப் பிரதிநிதி எரிக் சொல்ஹைமைச் சந்திக்க வந்து கொண்டிருந்த எல்.ரீ.ரீ.ஈ. அரசியல் பீடத் தலைவர் தமிழ் செல்வனை கொலை செய்யவும் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எரிக் சொல்ஹைம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், எல்.ரீ.ரீ.ஈயினருடன் பேசுவதற்காக வன்னிக்குச் சென்றதும் இலங்கை அரசாங்கத்தின் இணக்கத்துடனேயாகும். இந்தச் சந்தர்பத்தைப் பயன்படுத்தி எல்.ரீ.ரீ.ஈ. யின் அரசியல் குழுத் தலைவரைக் கொலை செய்திருப்பின் அது எவ்வாறான பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கும்? சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக வந்து கொண்டிருந்த எல்.ரீ.ரீ.ஈ. பாதுகாப்புப் பிரிவின் சிலர் அந்தத் தாக்குதலின் போது கொலை செய்யப்பட்டனர். எல்.ரீ.ரீ.ஈயினர் அதற்காக இலங்கை இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தினர். அதன் பின்னர் ஒக்டோபர் மாதம் திலீபன் நினைவு தினத்திற்குச் சென்று கொண்டிருந்த இன்னொரு தலைவரும் கொலை செய்யப்பட்டார். தலைவர் பிரபாகரனின் நெருங்கிய நண்பர் சங்கரே அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்.

"மகசோன் அணி"" என்ற பெயரில் இதுபோன்ற ஒரு இரகசியப் பிரிவை ஏற்படுத்தியிருப்பின், அதற்காக வேண்டி தமிழ் சிவில் பிரஜைகளின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டிருப்பின், அந்தப் பிரிவைப் பரிபாலிப்பதற்கான இராணுவப் பொறுப்பாளர் குழுவொன்றும் இருத்தல் வேண்டும். அந்தப் பிரிவுக்கு ஒரே நேரம் எல்.ரீ.ரீ.ஈ. கட்சியின் அரசியல் பிரிவின் ஆதரவும் கிடைத்திருத்தல் வேண்டும். அது அவ்வாறாயின் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலையையும் அவர்கள் நியாயப்படுத்தவார்களா? நிமலராஜன் படுகொலையை நியாயப்படுத்த ஈ.பி.டி.பி. தலைவர் டகளஸ் தேவானந்தா கூறியது அவர் எல்.ரீ.ரீ.ஈ. இரகசிய அங்கத்தவராக இருந்தார் என்பதாகும். எல்.ரீ.ரீ.ஈ. யின் இரகசிய அங்கத்தவர்களைத் தேடிக்கண்டு பிடித்துக் .கொலை செய்வதை எந்தவெர்ரு முழுமையாக, பாதியான இராணுவப் பிரிவிடம் ஒப்படைப்பதை அனுமதிக்க முடியுமா? எல்லாரும் ஒரு நடவடிக்கைஸ்ய செயற்படுத்தும் போது அதன் வரையரைகளைத் தீர்மானிப்பவர்கள் யார்? இரகசிய நடவடிக்கைகளானதால் தீர்மானங்கள் எடுப்பதும் இரகசியமாகவா?

யுத்தத்தின் பெயரால் இரகசியமாக பல செயல்கள் நடைபெறுவது இரகசியமான தொன்றல்ல. சட்ட ஆதிக்கத்திற்கு உட்படாத எந்தவொரு நடவடிக்கையும் இச்சந்தர்பத்தில் தமக்குச் சாதகமான அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லையென எவராலும் கூற முடியாது. நீண்ட கால யுத்தத்தின் இன்னொரு பெறுபேறும் இதுபோன்ற உத்தியோகப் பற்றற்ற இராணுவ நடவடிக்கைகள் மேலெழுவதே. இவற்றை நியாயப்படுத்துபவர்களே இவற்றிற்கு இறுதியில் இரையாவது வரலாறு எமக்கு உணர்த்தும் பாடங்களாகும்.

---

- சிராஜ் மஷ்ஹூர் -

## சமாதான ஆரவாரத்துள் அமுங்கிப் போகும் முஸ்லிம் குரல்



சமீப நாட்களாகச் சந்திக்கும் பலரும் திரும்பத் திரும்ப ஒன்றையே வலியுறுத்துகிறார்கள்! றுந யசந ழெவ ைவாந ளஉநநெ. சமாதானத்திற்கான முன் முயற்சிகள் மீளவும் எடுக்கப்பட்டுவரும் ஒரு தருணத்தில் நாம் களத்தில் இல்லை என்பது எவ்வளவு சோகமான விஷயம். முஸ்லிம்களை வெறுமனே மௌனப் பங்காளிகளாகப் (ளுடைநவெ ியசவநெசள) பின்தள்ளி விடும் அபாயம் தொடர்ந்தும் வலுவடைந்து கொண்டே வருகிறது. சிலவேளைகளில் இன்னும் ஒரு படி மேலே போய் மௌன நோக்குநர்களாக (ளுடைநவெ ழடிளநசஎநசள) அவர்கள் குறுக்கப்படுமளவுக்கு அதிகார மையங்கள் மிகக் கவனமாகச் செயற்படுகின்றன.

தேசிய இனப் பிரச்சினையை ஒற்றைப் பரிமாணத்திலேயே பார்த்துப் பழகிவிட்டவர்கள் மீண்டும் மீண்டும் ஒரே தவறையே இழைக்கின்றனர். ஒரு தேசத்தையே மௌனமாக்க முனைவதும், ஒரு மக்கள் திரளை மிக எளிதாகப் புறந்தள்ளி விடுவதும் ஆதிக்க சக்திகளின் எதிர்பார்ப்பிற்கு நேரெதிரான விளைவுகளையே கொண்டு வரும். ஒன்றை மட்டும் துணிந்து சொல்லலாம். முஸ்லிம் தேசம் உறைநிலையை (குசநநணைபெ ிழைவெ) அடைந்து விட்டதாகக் கணிக்க முனைபவர்கள் தோற்றுக் கொண்டே இருப்பார்கள். தேசிய இனப்பிரச்சினையின் பல் பரிமாணத்தைத் தங்களது வசதிகளுக்காக - மிகத் தாமதித்தேனும் - ஏற்க மறுப்பவர்களுக்கு வரலாறு மிகச் சரியான பாடத்தைப் புகட்டும். கழிந்து போன காலங்கள் நமக்கு நிறையப் பாடங்களை விட்டுச் சென்றுள்ளன. வரலாற்றிலிருந்து நாம் எதையேனும் கற்கப் போகிறோமா என்பதிலிருந்து தான் நமது தலைவிதி தீர்மானிக்கப்படப் போகிறது.

இப்போது துப்பாக்கிகள் அமைதியாக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. மோதல் தவிர்ப்பு, பொருளாதாரத் தடைநீக்கம், பேச்சுவார்த்தைக்கான முன்முயற்சிகள், அனுசரணையாளர்களது பணிகள், இந்தியாவின் பங்கு என்று ஏகப்பட்ட தடல்புடல்கள் நிகழ்கின்றன. சமாதானக் காலநிலையொன்று (நயஉந உடைஅயவந) கை கூடி வருவது போன்ற பிரமை ஏற்பட்டுள்ளது.

ஆனால் இத்தனை ஆரவாரங்களுக்கு மத்தியிலும் கிழக்கில் ஆட்கடத்தல்களும், கப்பம் கோரல்களும் அதிகரித்து வருகின்றன. முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் இந்த அபாயகரமான சூழ்நிலை, புலிகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான உறவை நிச்சயம் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளன. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை குறித்த நியாயமான அக்கறையும் ஈடுபாடும் முஸ்லிம் தேசத்திற்கு இருக்கிறது. நீதியானதும் சமத்துவமானதும் சுய கௌரவத்துடனுமான எந்தவொரு தீர்வு முயற்சியையும் நாம் திறந்த மனதோடு ஆதரிக்கத் தயாராகவே இருக்கிறோம். நாம் சமாதானத்தை ஆதரிக்கிறோம். ஆனால் அந்த சமாதானம் மற்றைய இனக்குழுமத்தை ஏமாற்றுகிற சமாதானமாக ஆபத்தான சமாதானமாக இருக்கக் கூடாது என்பதையே வலியுறுத்த விரும்புகிறோம்.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைத் தீர்வையே தனது நிகழ்ச்சி நிரலின் முழு முதல் அம்சமாகக் கொண்டுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தீர்வு முயற்சிகளைக் காரிய சாத்தியமாக்கும் பல நிபந்தனைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர். எனினும் இதன் மிக முக்கிய அம்சங்களுள் ஒன்றான முஸ்லிம்கள் தொடர்பாக தமது நிலைப்பாட்டை அவர்கள் பகிரங்கப்படுத்தாது மௌனம் சாதிப்பது இரு இனங்களிடையேயுமுள்ள இடைவெளிகளை அதிகரிக்கவே வழிவகுக்கும். கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளிடையே 'முஸ்லிம்கள்" தொடர்பாக முரண்பட்ட அபிப்பிராயங்கள் இருப்பது மிகத் தெளிவானதாகும். இவ்வாறான ஒரு நிலையில் அவர்கள் ஒருமித்த ஒரு கருத்தை முன்வைப்பது சாத்தியமா என்ற கேள்வி கூட எழுகிறது. எவ்வாறாயினும் தமக்கு நெருடலான விவகாரங்களில் மௌனம் சாதிக்க முனைவது தீர்வு குறித்த அவர்களது நேர்மையை சந்தேகத்திற்குள்ளாக்கிவிடும் என்பதையேனும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களின் ஏக அரசியல் நிறுவனமான முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் உறங்கு நிலையிலேயே உள்ளது. களத்தில் இன்று ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புமளவுக்கு அது இல்லை. அவர்கள் வெறுங்கையோடு இருப்பது போலவே தெரிகிறது. ஒரு மக்கள் திரளின் தலைவிதியைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் இப்படி தத்துவ வறுமைக்கு ஆட்பட்டிருப்பது எவ்வளவு பெரிய ஏமாற்றம். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பல்வேறு அழுத்தங்களின் விளைவாக தைப்பொங்கல் தினத்தன்று புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார். முஸ்லிம் காங்கிரஸின் இந்த நெடுந்தூக்கம் இப்படியாவது கலைந்ததே என்று நாம் ஆறுதல் பட்டு விட முடியாது. அறிக்கை அரசியலுக்கு வெளியே இந்தப் பிரச்சினையைத் தளவிரிவாக்கம் செய்யும் நுணுக்கமும் அரசியல் ஞானமும் முஸ்லிம் காங்கிரசிற்கு உள்ளது என்று இப்போதைக்கு நம்ப முடியாத நிலைமையே உள்ளது. புலிகள்தான் தங்கள் தரப்பிலிருந்து சாதகமான சமிக்ஞைகளை வெளியிட்டாக வேண்டும். முஸ்லிம்கள் தொடர்பாக புலிகள் எடுக்கப் போகும் நிலைப்பாடு சமாதான முயற்சிகளின் மிக முக்கியமான தீர்மான சக்தியாக அமையப் போகிறது என்பதை அவர்கள் உணர்ந்து செயற்படுவார்கள் என்று நம்புகிறோம்.


எனவே, சமாதான ஆரவாரங்களிலேயே எமது குரல்கள் அமுங்கிப் போய்விடாது மிகக் கவனமாக நாம் செயற்பட வேண்டியுள்ளது. நமது குரல்களை உலகத்தின் செவிகளுக்குக் கேட்கச் செய்வோம். அதற்கான ஆரம்ப முயற்சிகளை நாம் இப்போதிருந்தே செய்தாக வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாணிக்கவாசகம் சுரேஸ் வழக்கு :
# ஜனநாயகமும் பீதியூட்டுவானும்



-சேரன்

'இது ஒரு அற்புதமான கருவி' என்று மிகுந்த பெருமையுடன் அந்தக் கருவியைப் பார்த்தவாறே கூறினார் படைத்துறை அலுவலர். அது அவருக்கு மிகவும் பழக்கமான கருவியும் கூடத்தான். படைத்துறை அலுவலரின் அழைப்பை மறுக்க முடியாமல் ஒரு நாகரிகம் கருதியே மற்றவர் இந்த அற்புதமான கருவி மூலம் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதைப் பார்க்க வந்திருந்தார். அச்சத்தில் வாலைப் பின்கால்களுக்குள் இடுக்கிக் கொண்டு ஒடுங்கிப் போயிருந்த ஒரு நாயைப் போல தண்டனை விதிக்கப்பட்டவர் ஒடுங்கி இருந்தார். அவர் செய்த குற்றம்: கீழ்ப்படியாமை, மேலதிகாரியை அவமதித்தமை.

"இந்தக் கருவிக்கு மூன்று முக்கியமான பகுதிகள் இருக்கின்றன." தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார் படைத்துறை அலுவலர். "கீழே உள்ளதைச் செல்லமாகக் கட்டில் என்று அழைக்கிறோம், அதன் மேற்பகுதிக்குப் பொய் வடிவமைப்பாளர். இரண்டுக்கும் இடையில் மேலும் கீழுமாக அசையும் வகையில் இருப்பது பீதியூட்டுவான்."

"என்னது? பீதியூட்டுவானா?" கலவரத்துடன் கேட்டார் மற்றவர்.

"ஆம். பீதியூட்டுவான். ஒரு நல்ல பெயர் அது. பீதியூட்டுவானில் இரண்டு வகையான ஊசிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. கட்டிலில் தண்டனை விதிக்கப்பட்டவர் குப்புற நிர்வாணமாகக் கிடத்தப்படுவார். அவருடைய உடல் இறுகப் பிணைக்கப்படும். கட்டிலின் கீழ்ப்புறத்தில் இரத்தத்தை உறிஞ்சுவதற்குப் பஞ்சு நிரப்பப்பட்டிருக்கும். இது விசேடமாகத் தருவிக்கப்பட்ட பஞ்சு. சாதாரணமான பஞ்சு அல்ல. இந்த அற்புதமான கருவி மின்சாரத்தில் இயங்குவது. கருவி இயங்க ஆரம்பித்ததும் கட்டிலும் பீதியூட்டுவானும் மேலும் கீழுமாக அதிர ஆரம்பிக்கும். பீதியூட்டுவானில் இருக்கும் ஏராளமான ஊசிகள் உடலில் இறங்க ஆரம்பிக்கும். ஒவ்வொரு ஊசிக்கும் அருகே இரத்தத்தைக் கழுவுவதற்குத் தண்ணீர் தரும் தாரைகளும் பொருத்தப்பட்டிருக்கின்றன. தண்டனை பெறுபவரின் உடலில் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையின் பெயரை இந்த ஊசிகள் அழுத்தமாக எழுதும். ஒரு ஆறு மணி நேரம் தான். எல்லாம் முடிந்து விடும். அதிக நேரமில்லை. முடிந்த பிற்பாடு உடல் வெளியே இருக்கிற ஒரு குழிக்குள் தடாலடியாக வந்து விழும். அவ்வளவு தான்" இதைச் சொல்லி முடித்த போது படைத்துறை அலுவலரின் முகத்தில் ஒரு கம்பீரம் படர்ந்தது.

இது Fanz Kafka எனும் புகழ்பெற்ற எழுத்தாளரின் The Penal Colony எனும் சிறுகதையில் இருந்து ஒரு பகுதி. கோவிந்தன் எனும் புனைபெயரில் எழுதிய நண்பர் நோபேட்டின் 'புதியதோர் உலகம்' நாவலை வாசித்தவர்களுக்கு 'உழன்றி' என்று செல்லமாக அழைக்கப்பட்ட இத்தகைய கருவி ஞாபகம் வரலாம்.

மாணிக்கவாசகம் சுரேஷ் வழக்கில் சமீபத்தில் (11.01.2001) கனடிய உயர் நீதிமன்றம் வழங்கிய முக்கியமான தீர்ப்பு ஒன்று அடிப்படையில் சித்திரவதை தொடர்பானது தான்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிக்கும் என்ற குற்றச்சாட்டில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நீண்ட காலம் சிறையில் இருந்த சுரேஷ் அவர்களை இலங்கைக்கு நாடு கடத்த வேண்டும் என்று கனடிய அரசு விடாப்பிடியாக நின்றது. மேல் நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் அதனை ஆமோதித்திருந்தன. மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், சிவில் உரிமைகள் ஆகியவற்றுக்காக வாதிடும் முக்கியமான கனடிய வழக்கறிஞர்கள் சிலரின் உதவியுடன் சுரேஷ் இலங்கைக்கு நாடு கடத்தப்படக் கூடாது, ஏனெனில் இலங்கை அரசு சித்திரவதை புரிவதில் மிகவும் தாராளமானது என்றும், எந்தக் கட்டத்திலும், எவரையும், சித்திரவதைக்கு அனுப்புவது, கனடிய அரசு, ஐக்கிய நாடுகள் அவைக்கு அளித்திருக்கும் உறுதிமொழியையும், கனடிய அடிப்படை உரிமைகள் பட்டயத்தையும் மீறவதாகும் என்றும் உயர் நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது. கனடிய அரசியல், நீதியியல் வரலாற்றிலேயே இந்த வழக்கு ஒரு முக்கியமான திருப்புமுனையாகும்.

சுரேஷ் அவர்களுக்கு எதிராகக் கனடாவிலும், இலங்கையிலும் கூட எத்தகைய "பயங்கரவாதக்" குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாத போதும் 'கனடியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்ற ஒரு பெரிய வலைக்குள் சுரேஷும் அவரைப் போன்ற வேறு பலரும் - குறிப்பாக குர்தீஷ், பாலஸ்தீனிய மக்களில் பலர் - சிக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு ஜனநாயக அமைப்பின் கீழ் தனக்கு விரும்பிய அரசியல் கருத்தை அல்லது கட்சியை ஆதரித்தல், அதற்காக இயங்குதல் என்பன குற்றங்கள் அல்ல, அது அடிப்படை உரிமை என்றும் தேசிய பாதுகாப்புச் சட்டம் நீதியற்ற முறையில் சிறுபான்மை மக்களின் போராட்டங்களைப் பயங்கரவாதமாகக் குறுக்கி விடுகிறது என்றும் வாதிடப்பட்டது. தேசிய விடுதலைப் போராட்டம் என்பது வேறு, பயங்கரவாதம் என்பது வேறு. இந்த இரண்டையும் ஒன்றாகக் குழப்பத் தேவையில்லை என்று சர்வதேச அறிஞர்களான Richard Falk (Princeton), Jorden Poust, Graig Scott போன்றோர் ஏற்கனவே வேறொரு விசாரணையில் சாட்சியம் அளித்திருந்தனர். உயர்நீதிமன்றத்தில், சுரேஷை நாடு கடத்தக் கூடாது என்று கூறி, சர்வதேச மன்னிப்புச் சபை, கனடிய சட்டத்தரணிகள் சங்கம், கனடிய அரபு மக்களின் சம்மேளனம், ஐக்கிய நாடுகளின் அவையின் அகதிகளுக்கான தூதரகம் (UNHCR), அகதிகளுக்கான கனடியக் கழகம் (Canadian Council For Refugees), அரசியல் யாப்பு உரிமைகளுக்கான கனடிய நிலையம், கனடிய தேவாலயங்கள் சபை (Canadian Council of Churches) போன்ற முக்கியமான கனடிய, உலக நிறுவனங்கள் சாட்சியம் அளித்திருந்தன. இந்த அனைத்து நிறுவனங்களும் முன் வைத்திருந்த பிரதனமான காரணம் - இலங்கையில் சித்திரவதை சாதாரணமாகவும், பரவலாகவும், பயங்கரமாகவும், தொடர்ச்சியாகவும் இடம் பெற்று வருகிறது என்பதும், கைது செய்யப்படும் தமிழர்களில் பலருக்கு இது வழமையான அனுபவம் என்பதும் தான்.

இந்த வாதங்களை ஏற்றுக் கொண்டு, சுரேஷை, இலங்கைக்கு நாடு கடத்தக் கூடாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. தன்னுடைய தீர்ப்பில், 'சித்திரவதை செய்ய மாட்டோம்' என்று இலங்கை அரசு வழங்கி இருக்கிற உறுதிமொழிகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சூசகமாகத் தெரிவித்திருக்கிறது நீதிமன்றம். கனடியத் தமிழர்களுக்கும், சுரேஷுக்கும் மகிழ்வையும் நிம்மதியையும் இப்போதைக்குத் தரக்கூடிய தீர்ப்புத்தான் இது. எனினும் புலம் பெயர்ந்தோர், குடியுரிமை பெறாதவர்கள், அகதி நிலை கோரி மனுச் செய்திருப்போர் அனைவரையும் இந்த நீதிமன்றத் தீர்ப்பு முற்றிலும் திருப்திப்படுத்தப் போவதில்லை.

மனித உரிமைகள், அரசியல் உரிமைகள், அடிப்படை உரிமைகள் பற்றித் தீவிர அக்கறையுடன் இருக்கும் பல நிறுவனங்களுக்கும், செயல்வாதிகளுக்கும் இந்தத் தீர்ப்பின் வேறு பல அம்சங்கள் ஏமாற்றமளிக்கின்றன. குறிப்பாக, 'ஒரு அசாதாரணமான சூழலில்' ஒருவரை அவரது சித்திரவதைக்கும், மரணத்துக்கும் திருப்பி அனுப்பலாம் என்று இந்தத் தீர்ப்பு கூறுகிறது. சுரேஷைப் பொறுத்தவரையில், இத்தகைய 'அசாதாரணமான சூழ்நிலை' - அதாவது கனடியப் பாதுகாப்புக்கு அவர் மூலம் 'அசாதாரணமான அச்சுறுத்தல்' - இல்லை என்பதாலேயே அவர் திருப்பி அனுப்பப்படவில்லை.

எந்தச் சூழலிலும், எவரையும், அவரது மரணத்தை நோக்கியோ அல்லது சித்திரவதை நோக்கியோ அனுப்ப முடியாது என்பது தான் இதுவரை காலத்துக் கனடியப் பாரம்பரியமாக இருந்தது. இப்போது அது இல்லாமல் போகிறது என்று போர்க்கொடி தூக்குகின்றன இங்குள்ள மனிதஉரிமை அமைப்புகள்.

செப்டம்பர் 11க்குப் பிறகு நிலைமை மாறி விட்டது என்பதைக் கனடிய உயர் நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டு விட்டது என்பதைத்தான் இது காட்டுகிறது.

எனினும் தன்னுடைய தீர்ப்பில் வேறு பல அம்சங்களை வாதத்துக்கு விட்டிருப்பதன் மூலம் எதிர்காலத்தில் சட்ட ரீதியான பல போராட்டங்களை கனடிய நீதிமன்றம் சந்திக்க இருக்கிறது. சுய நிர்ணய உரிமை, பயங்கரவாதம், தேசிய பாதுகாப்பு என்பதன் வரைவிலக்கணம் என்ன? வன்முறை சார்ந்த இயக்கத்திலும் வன்முறை சாராத, அரசியல் கருத்தை மட்டும் வலியுறுத்துகிற ஒருவர் அங்கத்தவராக இருக்க முடியாதா? அகதிகளுக்கும் அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கும் குடியுரிமை பெற்றவர்களை விட உரிமைகள் குறைவாக உள்ளதா? இது போன்ற முக்கியமான கேள்விகளுக்கு விடைகள் இனித்தான் இங்கு விவாதிக்கப்பட உள்ளன. அந்த வகையில் இது நல்ல துவக்கம் தான்.

எனினும் பாதுகாப்பு காரணங்களைச் சுட்டி, உரிமைகளைத் தட்டிப் பறிக்கும் ஆபத்தான போக்கு இன்னும் பலம் பெற்று வருவதையும், அப்போக்குக்கு மரபு வழி ஜனநாயகத்தில் துறைபோன அரசுகளும் உயர் நீதிமன்றங்களும் ஆதரவு தெரிவித்திருப்பதையும் அச்சத்துடன் பார்க்கிறோம். கனடிய உயர் நீதிமன் நீதிபதிகள் அரசியல் செல்வாக்கால் நியமிக்கப்படுபவர்கள் அல்லர். போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைக்கு எதிரான நீதிமன்றங்களில் பணிபுரிந்த Louis Arbour போன்ற முக்கியமான சர்வதேச சட்ட அறிஞர்களும் அடிப்படை உரிமைவாதிகளும் இந்த நீதிமன்றத்தில் உள்ளனர். இப்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு 'சமரசத்' தீர்ப்பு என்று சொல்லப்படக் கூடிய ஒன்று. எனினும் நீதிபதிகள் குறிப்பிடும் ஒரு வசனம் மிகவும் கவனத்துக்குரியது. அடிப்படை மனித உரிமைகளைக் காற்றில் பறக்க விட்டு விட்டுப் பயங்கரவாதத்துக்கு எதிராக யார் பெறுகிற வெற்றியும் அவலம் நிறைந்த வெற்றியே (Pyrrhic Victory) தவிர வேறொன்றும் அல்ல.

ஜனநாயகம், அரசியல் யாப்ப அடிப்படை உரிமைகள், பல்வேறு கருத்துக்கள் முட்டிமோதும் களங்கள் போன்றவை எங்களுக்குக் கிடைக்க எவ்வளவு காலம் ஆகும்?

---

# தமிழ்த் தேசியத்தின் பாராளுமன்ற வருகை


சி. சகாதேவன்

2002 தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்க் கூட்டணிக் கட்சிகள் தம்மை, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு" என்று பிரகடனப்படுத்தியுள்ளது. இப்பெயருக்கு வேண்டிய உத்தியோக பூர்வ பதிவு இன்னும் செய்யப்படவில்லையெனினும் இலங்கை அரசியலில் கடந்த 50 வருடங்களாக இலைமறை காயாக இருந்து விடுதலை இயக்கங்களினால் பட்டவர்த்தனமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த தமிழ்த் தேசியம் என்ற சொற்றொடர் இப்பொழுது இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் உத்தியோக பூர்வப் பெயராக வந்து விட்டது.

இது இலங்கையின் அரசியல் கருத்தாடலில் ஒரு மைல்கல் நிலையாக எனக்குப் படுகிறது. "சாகியம்" (Community) என்ற சொல்போல், இனக்குழுமம் (ethnic) என்பது வந்து, இப்பொழுது தமிழ்த்தேசியம் சேர்த்து வந்து விட்டது. தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி,தமிழர் ஒருமை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்று வந்த தமிழ் நிலை கட்சி மாற்றுருவாக்கக் கூறும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் என்று வந்த தமிழ் இளைஞர் தீவிரவாத இயக்கங்களும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிறுவியுள்ளனர். புளொட் இதில் சேரும் என எதிர் பார்க்கப்படுகிறது.







இந்தத் தமிழ்த் தேசியத்தின் முன் வைப்பு என்ன என்பது மிக முக்கியமான ஒன்றாகும். அது சிங்கள மக்களின் காதில் நன்கு விழுந்துள்ளது. "தமிழ்ப் பிரச்சினைக்கான தீர்வை விடுதலைப் புலிகளுடன் மாத்திரமே பேசித் தீர்க்க வேண்டும்", என்பதுதான் இவர்கள் நிலைப்பாடு.

தமித் தேசியத்தின் இன்றைய "அரசியற்சாரம்" (பிழிசாறு) இதுதான். இந்த நிலை எப்படி ஏற்பட்டது? இந்த நிலை (வருகை) தவிர்க்க முடியாததாக ஏன் வந்தது?

பாராளுமன்றத்துள் இந்தக் குரல் ஒலிப்பதிவே ஒரு சுவாரசிய வரலாற்று முரண் உள்ளது.

இந்த வாய்ப்புக்கான ஆறாவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போது (1984?) பாராளுமன்றத்துக்கு வருவோர் மாத்திரமல்லாமல் அரசாங்க நிலையில் எந்தப் பதவி ஏற்கு நபரும், தான் இலங்கையின் அரசியல் யாப்பையும் ஏற்றுக் கொள்வதாகவும், அதற்கு எதிராகத் தொழிற்பட மாட்டேன் என்றும் சத்தியம் செய்ய வேண்டும்.

இந்த ஆறாம் திருத்தம் காரணமாகவே அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்க முடியாது போயிற்று.

இப்பொழுது "விதியின் கோட்டைக் கிழித்தாச்சு. முன்பு விட்ட குறையை வந்து தொட்டாச்சு"

இப்பொழுதுள்ள இலங்கை ஆட்சி யாப்பை மாற்ற வேண்டும். தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கும் வகையில் மாற்ற வேண்டும். என்பது இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் குரலாக ஒலிக்கின்றது.

இந்த ஒலிப்புக்கு கடந்த (ஏறத்தாழ) இருபது வருட காலத்து இலங்கை அரசியலின் ஸ்ரீலங்கா கட்சியாளர்களின் "விடுபாடுகள்" நன்கு தெரிகின்றன.

1984-85 தொடக்கம் 2002க் காலப்பிரிவில் இலங்கைத் தமிழ், மக்களின் அரசியற் குறைபாடுகளை, ஆட்சிநிலை முறைப்பாடுகளை அகற்ற, குறைக்க முயற்சி எடுக்கப்படாத காரணத்தினால், இன்று தமிழ்த் தேசியம் ஒதுக்கப்பட முடியாத ஒரு எண்ணக் கருவாக நிலைபெற்று விட்டது.

இந்தத் தமிழ்த் தேசியம் இலங்கையை நிராகரிக்கும் தமிழ்த் தேசியம் அல்ல என்பதாகப்படுகிறது.

அதேவேளை தன் அடையாளத்தை இலைமறை காயாக விரும்பும் அரசியல் நிலைப்பாடும் அல்ல. ஸ்ரீலங்கா, இலங்கையாகவும் இருக்க வேண்டுமென்பதுதான் இதன் நிலைப்பாடு. இது ஒரு தற்காப்பான வளர்ச்சியாகவே வந்துள்ளது என்ற வரலாற்றுண்மையை அரசும் சிங்கள மக்களும் மறந்து விடக்கூடாது.

உண்மையென்னவென்றால் அரசுகளும், ஆட்சியாளர்களும் தாம், செய்யத் தவறுவதைத் தமிழர்களின் இனவாத ஆக்ரோஷம் என்ற சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவது வழக்கமாகி விட்டது. அதற்கு மதநிலை அங்கீகாரமும் உண்டு.

இவற்றால் சிங்கள மக்களின் பீதியுணர்வு வளர்க்கப்படுகிறதே தவிர தார்மீக உணர்வு மழுங்கடிக்கப்படுகிறது. இந்த உண்மையைச் சிங்கள மக்கள் சகலரும் உணரும் நாள்வரையில், இலங்கையின் "தேசியப் பிரச்சினை" தீரப் போவதில்லை.

வரலாற்றிலிருந்து நாம் படிப்பதெல்லாம், நாம் வரலாற்றிலிருந்து எதையும் படிப்பதில்லை என்பதைத்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# புலிக்குப் பயந்த பசங்களெல்லாம் வந்தென்மேலே விழுங்கடா!

- எஸ்.எம்.ஜி





"புலிக்குப் பயந்த பசங்களெல்லாம் வந்தென்மேலே விழுங்கடா"

பலவருடங்களுக்கு முன்னர் வெளிவந்த தமிழ்த் திரைப்படமொன்றில் இந்தப் பாடல் வரிகள் இடம் பெற்றிருந்தன. இதற்கான காட்சியும் இடம் பெற்றிருந்தது.

ஒரு கிராமத்தினுள்ளே ஒரு புலி புகுந்து விட்டது. "புலிவருகுது புலிவருகுது" என்று மக்கள் கிலி பிடித்துக் கூச்சலிட்டனர்.

இதைப் பார்த்த ஒருவர் புலிக்குப் பயந்தவர்களெல்லாம் வந்து என் மேலே விழுங்கடா என்று கூச்சலிட்டான். எல்லோரும் வந்து அவர் மேலே விழுந்தால் இவர் கீழே பாதுகாப்பாக இருப்பார், புலிவந்தால் மேலே கிடப்பவனைத் தானே தாக்கும் என்பது அவர் சிந்தனை.

இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள சில அரசியல்வாதிகளின் சிந்தனையும் இப்படித்தான் போகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வுகாணப்பட வேண்டும் என்பது இந்திய அரசு ஏற்றுக் கொண்ட கொள்கை

எல்லா நாடுகளும் இதையே தான் எடுத்துச் சொல்லி வந்தன. இந்தியாவும் இதையே கூறிவந்தது.

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் புதிய பிரதம மந்திரியாகப் பதவியேற்றதும் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் வாஜ்பாயையும் மற்றும் தலைவர்களையும் சந்தித்துப் பேசிவிட்டு வந்தார். இலங்கையின் இனப்பிரச்சினை பற்றியும் பேசினார். பிரதமருடன் இந்தியா சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ இந்தியாவிலிருந்து திரும்பியதுமே இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுப் பேச்சுக்களில் இந்தியாவும் நேரடியாகப் பங்கு பற்றுவதற்கு ஒப்புக் கொண்டு விட்டது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்திருந்தார்.

பேச்சுவார்த்தைக்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தரப்பில் கலந்து கொள்ளும் முக்கிய பிரமுகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ் நாட்டில் அல்லது தென்னிந்தியாவின் ஒரு நகரத்தில் தான் தங்கியிருந்தாலே தலைவர் பிரபாகரனுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்குமென்று தெரிவித்தார். அவர் மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட்ட ஒரு நோயாளியும் கூட இதனால் அவரது உடல் நிலையையும் கருத்தில் கொண்டே இக்கோரிக்கை விடப்பட்டது.

இந்தக் கோரிக்கையைப் பற்றி இந்தியப் பிரதமரோ இந்திய அரசோ யோசிப்பதற்கு முன்னரே சுப்பிரமணிய சுவாமியும் வாழப்பாடிராமமூர்த்தியும், புலிகளா, தமிழ் நாட்டுக்கா என்று துள்ளிக் குதித்தனர். போதாக்குறைக்கு இலங்கையின் நலனை மொத்தமாகக் குத்தகை எடுத்திருப்பதாகக் கருதும் சென்னை "இந்து"ப் பத்திரிகை விடுதலைப் புலிகள் ஏதோ கூட்டு வைத்து மீண்டும் இந்தியாவில் காலடி வைப்பதற்கு வழி பார்க்கிறார்கள். இதற்கு இடம் கொடுத்தால் குடியே முழுகிப் போய் விடும் என்று ஓலமிட்டது.

இதன் பின்னரும் ஜெயலலிதா சும்மா இருப்பாரா? நான் தானே விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடை செய்ய வேண்டுமென்று முதலில் வற்புறுத்தி வெற்றியும் பெற்றேன். மீண்டும் அவர்கள் இங்கே கால் வைக்க இடம் கொடேன் என்று கர்ஜித்தார்.

இவர்கள் எல்லோரும் தங்கள் தேசபக்தியை இதன் மூலம் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

சுப்பிரமணிய சுவாமி ஜெயலலிதா தயவால் சில மாதங்கள் மதுரைத் தொகுதி எம்.பி யாக இருந்தவர். ஜெயலலிதா வாஜ்பாய் அரசைக் காலை வாரிவிட்டதைத் தொடர்ந்து நடந்த தேர்தலில் சுவாமி மக்களால் நிராகரிக்கப்பட்டார்.

வாழப்பாடி ராமமூர்த்தி பல தடவைகள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர். இவர்களை இப்போது மக்கள் மறந்தே விட்டார்கள். தங்கள் இருப்பைக் காட்டிக் கொள்வதற்கு இப்பொழுது புலியின் வாலைப் பிடித்துக் கொள்ள முனைந்திருக்கின்றனர்.

ஊழல் வழக்குகளில் கருணாநிதி அரசு நியமித்த விசேஷ நீதிமன்றம் விதித்த சிறைத் தண்டனைகளை இப்பொழுது சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி தள்ளியிருப்பதால் தான் ஊழல் அற்றவர் என்று காட்டிக் கொள்ள முனைந்துள்ள ஜெயலலிதா இப்பொழுது புலியின் வாயைப் பிடித்துத் தன் தேசக்தியை எடுத்துக் காட்டப் பாடுபடுகிறார்.

இனப்பிரச்சினை தீர்வுக்காக நடக்கும் பேச்சுவார்த்தைகளில் இந்திய நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இந்தியா கூறிவந்திருக்கிறது.

தமிழ் நாட்டில் அல்லது தென்னிந்திய நகரமொன்றில் அன்ரன் பாலசிங்கம் தங்கியிருந்தால் தானே இந்தியா தனது நலனையும் கவனித்துக் கொள்வதற்கு சுலபமாக இருக்கும்.

பாகிஸ்தானுடன் எல்லையில் முறுகல் நிலையிலிருக்கும் இந்தியா இலங்கையிலும் ஒரு பகுதி மக்களுடன் தொடர்ந்தும் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டுமா?

இந்திய மத்திய அரசு அன்ரன் பாலசிங்கத்தின் கோரிக்கையை மறுபரிசீலனை செய்து வருகிறது.

பாலசிங்கத்தின் கோரிக்கை நிறைவேறிவிட்டால் சுப்பிரமணியம் சுவாமியும் வாழப்பாடியும் ஜெயலலிதாவும் என்ன செய்வார்கள்?

பாலாவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் இந்தியாவின் யோசனைகளைக் கேட்க முடியாது என்று விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டால் நிலைமை என்னவாகும்.

இந்தியா பொறுப்பு மிக்க பெரியதேசம். இந்தக் குட்டிகள் குலைத்து வைத்து நாய் தலையில் வைத்த கதை நடவாது என்று நம்பலாமா?

பயங்கரவாதம் பற்றி சுப்பிரமணிய சுவாமியும் வாழப்பாடியும் பேசுகிறார்கள். காந்தி மகாத்மாவின் சாத்வீகப் போராட்டம் இந்தியாவுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்ததாகக் கூறுகிறார்கள். இங்கு அந்த சாத்வீகப் போராட்டம் ஏன் வெற்றியளிக்கவில்லை.

சாத்வீகப் போராட்டத்துக்கிடையில் தானே இந்தியாவில் வன்செயலும் இடம் பெற்றது. நெல்லைக் கலாட்டா, ஆஷ்துரை என்ற வெள்ளைக்காரனை வாஞ்சி நாதய்யர் என்ற இளைஞன் தானே மணியாச்சி ரயில் நிலையத்தில் சுட்டுக் கொலை செய்து விட்டு தானும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதை யாரும் நியாயப்படுத்தவில்லை. எவர் கொலை செய்யப்பட்டாலும் அது கொலை தான். இந்திய அமைதிப் படை யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலைகளுக்குள் நுழைந்து நோயாளிகளையும் மருத்துவர்களையும் தாதிகளையும் சுட்டுக் கொன்றது கொலையில்லையா? இதற்காக இதுவரை எந்த இந்தியராவது கவலை தெரிவித்திருக்கிறார்களா, வருத்தம் தெரிவித்திருக்கிறார்களா?

நடந்தவை நடந்தவையாகட்டும். இனிமேலும் கொலைகள் நீடிக்கக் கூடாது என்பதற்காகத் தானே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது. இதற்கு ஒரு கொலையைக் காரணம் காட்டி முட்டுக்கட்டை போடவேண்டுமா?

# கதிர்காமரும் தேசபக்தியும் சிறிலங்கா மாதாவும்!

- கோபு

லக்ஸ்மன் கதிர்காமர் தமிழராகப் பிறந்திருந்தாலும் சிறிலங்கா மாதாவுக்கு அவர் ஆற்றியுள்ள அரும் பெரும் சேவையை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் எழுதித் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

ஆசிரிய தலையங்கங்கள், கட்டுரைகள், ஆசிரியருக்கு கடிதங்கள் (அதிலும் மகரகமையிலிருந்து ஒரே மாதிரியான கடிதங்கள் வெவ்வேறு பெயர்களில்' பத்திரிகைகளில் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

ஆட்சி மாறினாலும் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த கதிர்காமர், வேறு எந்தச் சிங்களவரும் இதே பதவியிலிருந்த போதும் செய்திராத, செய்ய முடியாத அரும்பெரும் சேவையைச் செய்திருப்பதாக இந்தப் பத்திரிகைகள் கதிர்காமரின் புகழ் பாடியிருக்கின்றன.

புதிதாக ஆட்சிபீடமேறியிருக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு லக்ஸ்மன் கதிர்காமரையே ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக அனுப்பி வைக்க வேண்டுமென்று இந்தப் பத்திரிகைகள் தங்கள் ஆசிரியத் தலையங்களில் சிபார்சு செய்திருக்கின்றன. இப்பத்திரிகைகளுக்கு வாசக நேயர்கள் எழுதும் கடிதங்களும் இதே யோசனையையே சிபார்சு செய்வது தான் வித்தை!

பொன்னம்பலம் இராமநாதனுக்கு அந்த நாளில் வாழ்ந்த சிங்களத் தலைவர்கள் நன்றி தெரிவிப்பதற்கு வார்த்தைகளே இல்லாமல் கப்பலில் இருந்து இறங்கி வந்த பொன் இராமநாதனை குதிரைகள் பூட்டிய "சாரட்"" வண்டியில் ஊர்வலமாக அழைத்துச் செல்லவே



ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பயங்கரமான கப்பல் பயணத்தையும் பொருட்படுத்தாது இராமநாதன் 'தொரை" லண்டன் சென்று தங்களுக்காக வாதாடி தங்கள் உயிரைக் காப்பாற்றியதற்காக சிங்களத் தலைவர்கள் குதிரைகளை அவிழ்த்து விடச் செய்து தாங்களே "சாரட்"" வண்டியை இராமநாதனை வைத்து இழுத்து வந்தனர்.

இப்பொழுது அதை நினைவு கூர்ந்தாலே "தன்மானமுள்ள"" சிங்கள மக்களுக்குக் கோபம் வரும். ஆனால் கதிர்காமரின் சேவையை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் புகழ்ந்து போற்றி அவரது சேவைக்கு நன்றிக் கடனாகவும் தொடர்ந்தும் அவர் இலங்கை மாதாவுக்குத் தொண்டாற்றவும், ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப் படவேண்டுமென்று சிபார்சு செய்கின்றன.

இப்படி அவர் செய்த அளப்பரிய சேவை என்ன?

கதிர்காமர் ஒரு தமிழராக இருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் படுபயங்கர வாதிகள் என்று உலகத்துக்கு எடுத்துச் சொன்னார். கதிர்காமரைப் போல இதுவரை எவரும் ஆணித்தரமாகவும், ஆதாரபூர்வமாகவும் புலிகள் பயங்கரவாதிகள் என்பதை எடுத்துச் சொன்னதில்லை. கதிர்காமரின் இந்த வாதத் திறமையால் தான் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கம் படுபயங்கரவாத இயக்கம் என்று அந்த நாடுகளில் தடை செய்ய முடிந்தது என்று சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் எழுதித் தள்ளியிருக்கின்றன.

இன்னும் பல நாடுகளும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதற்கு எதிர்பார்த்துக் காத்திருப்பதும் கதிர்காமரினால் தான் என்றும் இவை எழுதுகின்றன.

லக்ஸ்மன் கதிர்காமர் தமிழர் என்று இந்தப் பத்திரிகைகள் எழுதுகின்றன. "நீலப் பெருமாள் குடும்பம்"" பற்றி எழுதிய ஜேம்ஸ் ரி. இரத்தினம் இருந்திருந்தால் இது பற்றியும் ஆராய்ந்து எழுதியிருப்பார்.

இல்லையென்றால் தமிழ் இளைஞர்கள் எதற்காக ஆயுதம் ஏந்தினார்கள், விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தியிருக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் எதற்காக விரும்புகிறார்கள்? என்பதை கதிர்காமர் அறிந்திருப்பார்.

ஜனநாயக முறையில் தங்கள் உரிமைகளை வாதாடிப் பெறுவதற்காக தமிழ் மக்களின் தாயக பூமியாகிய வடக்கு கிழக்கு மக்கள் பொதுத் தேர்தல் சமயங்களில் தங்களின் விருப்பத்தைத் தெரிவித்து ஆணை வழங்கி பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தார்கள்.

ஜனநாயக முறையில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி வந்த தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தங்கள் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த போதெல்லாம் ஜனநாயக ரீதியில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பெரும்பான்மைச் சமூகப் பிரதிநிதிகள் அவற்றை நிராகரித்து ஓரங்கட்டி விட்டனர்.

பெரும்பான்மை ஜனநாயகத்தில் சிறுபான்மை ஜனநாயகத்துக்கு இடமில்லை.

ஜனநாயகம் கைகொடுக்கவில்லை. காந்தியடிகளைப் பின்பற்றி சாத்வீகப் போராட்டத்தின் மூலம் உரிமைகளைத் தட்டிக் கேட்டும் பெறுவோம் என்ற தமிழ் மக்கள் மீது ஆயுதப் பலம் பிரயோகிக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

1958 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை காலத்துக்குக் காலம் ஆயுதப் படைகளினால் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டதுடன் ஆட்சியிலிருந்தவர்களின் தூண்டுதலினால் பேரினவாதிகளின் உதவியுடன் தமிழ் இன அழிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. தமிழ் மக்கள் உயிர் உடமை இழந்து அநாதைகளாகினர்.

இந்நிலையில் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். இதனால் இன அழிப்பு தடுக்கப்பட்டது. ஆயுதம் ஏந்திய இளைஞர் பலர் திசைமாறிய போதிலும் தமிழ் மக்களின்

தொடர்ச்சி 19ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குமார் கொலை துலங்கும் மர்மங்கள்

- பாலரட்ணம்

குமார் பொன்னம்பலம் நயவஞ்சகமாகப் படுகொலை செய்யப்பட்டார். அவரது படுகொலையில் சம்பந்தப்பட்டவர்களையும் இக்கொலையின் சூத்திரதாரிகளையும் கூட நயவஞ்சகமாகப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆட்சிபீடத்திலேற்பட்ட மாற்றம் இப்படுகொலை சம்பந்தமான அந்தரங்கங்கள் வெளியே வருவதற்கு வழிவகுத்திருக்கிறது.

குமார் பொன்னம்பலம் படுகொலை சம்பந்தமாக தேசியப் பத்திரிகைகள் என்று தம்பட்டமடிக்கும் பத்திரிகைகள் ஏதும் ஆர்வம் காட்டவில்லை. ஆர்வம் காட்டாதது மட்டுமல்ல இதை மூடிமறைக்கவுமே அவை உதவி புரிந்திருக்கின்றன.

தமிழராகப் பிறந்தாலும் நாட்டுக்குப் பெரும் சேவை செய்திருப்பவர் கதிர்காமர் என்று புகழாரம் சூடும் இந்தப் பத்திரிகைகள் குமார் பொன்னம்பலத்தின் கொலைக்கு சூத்திரதாரிகளாக இருந்தவர்களையோ கொலைக்குக் காரணமானவர்களையோ அம்பலத்துக்குக் கொண்டுவர முயற்சி செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆனாலும் இங்கு நீதிநியாயம் கண்மூடிக்கிடக்கவில்லையென்பதை "ராவய"" என்ற சிங்களப் பத்திரிகையும் "சண்டேலீடர்"" என்ற ஆங்கிலப் பத்திரிகையும் எடுத்துக் காட்டியிருக்கின்றன.

குமார் பொன்னம்பலத்தின் படுகொலைக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விருந்தினர் விடுதியில் தான் திட்டங்கள் தீட்டப்பட்டன.

இந்தத் திட்டங்களை வகுத்த சூத்திரதாரி முன்னாள் பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் மகன். இந்தப் படுகொலை சம்பந்தமாகப் பெற்ற பொலிஸ் அறிக்கை மீது ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவில்லை.

மகேன் ரத்வத்தையின் தூண்டுதலின் பேரில் சீடர்களான பாதாள உலகத்தைச் சேர்ந்த மொறட்டுவ சமன் மற்றும் சஜீவ ஆகியோர் படுகொலை செய்தனர் என்ற தகவல் பொலிஸ் அதிகாரியினால் வெளியிடப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பந்துல விக்கிரமசிங்க, குமார் பொன்னம்பலம் கொலை சம்பந்தமாக ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தும் கொலையாளிகளைப் பாதுகாக்குமுகமாக அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று புகார் கூறப்படுகிறது.

இரண்டாயிரமாம் ஆண்டு பிறந்த ஐந்தாம் நாள் காலை சாந்த என்ற ஒருவர் குமார் பொன்னம்பலம் வீட்டுக்கு வந்து அவசரமாக அவரை அழைத்துச் சென்றார். இது சாந்த என்பவருடைய சொந்தப் பெயரல்ல. இவர் சில மாதங்களாகவே குமாருடன் தொடர்பு வைத்து நட்புக் கொண்டாடி வந்திருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு குமாரின் கொலைச்சதி பற்றித் தெரிந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இப்பத்திரிகைகள் ஆதாரத்துடன் எழுதியிருக்கின்றன. கொலையாளிகள் தப்புவதற்கும் கொலை சூத்திரதாரியைப் பாதுகாப்பதற்கும் ஜனாதிபதி முயற்சி செய்ததாகவும் இவை எழுதியிருக்கின்றன. குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்ட செய்தி கிடைத்ததும் அதிர்ச்சியடைந்தது போல் ஜனாதிபதி காட்டிக் கொண்டாரென்றும் இப்பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

குமார் பொன்னம்பலத்தின் ஒரே மகனான கஜேந்திர குமார் இப்பொழுது யாழ் மாவட்ட எம்.பியாவார். நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற சிந்தனையோ அரசியலில் ஈடுபடவேண்டுமென்றோ 27 வயதான கஜேந்திரகுமார் நினைத்திருக்கவில்லை.

தந்தை குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தான் கஜன் அரசியலுக்கு வரக் காரணமாய் இருந்தது. தந்தையின் தந்தை ஜீ.ஜீ. பொன்னம்பலம் பிரபல்யம் வாய்ந்த குற்றவியல் வழக்கறிஞர் சிறந்த நாவன்மை படைத்தவர். தந்தை குமார் பொன்னம்பலம் அஞ்சாநெஞ்சன். சிறந்த சட்டத்தரணி, கொழும்பிலிருந்தே தமிழ் மக்களின் நலனுக்காக அஞ்சாமல் குரல் கொடுத்தவர்.

**ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு குமாரின் கொலைச்சதி பற்றித் தெரிந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இப்பத்திரிகைகள் ஆதாரத்துடன் எழுதியிருக்கின்றன. கொலையாளிகள் தப்புவதற்கும் கொலை சூத்திரதாரியைப் பாதுகாப்பதற்கும் ஜனாதிபதி முயற்சி செய்ததாகவும் இவை எழுதியிருக்கின்றன. குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்ட செய்தி கிடைத்ததும் அதிர்ச்சியடைந்தது போல் ஜனாதிபதி காட்டிக் கொண்டாரென்றும் இப்பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.**



தந்தையின் கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டு பிடித்து குற்றவாளிக் கூண்டில் நீதியின் முன்னால் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு கஜன் உறுதி பூண்டிருக்கிறார்.

குமார் பொன்னம்பலம் கொலை பற்றி குற்றப்புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பந்துல விக்கிரம சிங்க, ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவுக்கு சமர்ப்பித்த அறிக்கை அரசியல் நோக்கம் கொண்டது என்றே கஜேந்திர குமார் பொன்னம்பலம் கூறுகிறார்.

இந்தக் கடிதத்தில் மூன்று சந்தேக நபர்களின் பெயர்களில் முன்னாள் அமைச்சர் ஒருவரின் மகனுடைய பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவர்கள் அனைவரும் கருவிகள் தான். இவர்கள் அதை நிறைவேற்றியவர்கள் தான். அதாவது செய்து முடித்தவர்கள், இதன் பின்னணியிலுள்ளவர்கள் வெளிக் கொணரப்படவில்லை.

இதனால் பாதிக்கும் குறைவானது தான் வெளியாகியிருக்கிறது. இன்னும் வெளிவர வேண்டியவை நிறைய இருக்கின்றன. அவைவெளிவரும் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கிறார்.

பந்துல விக்கிரமசிங்கவின் அறிக்கை கிடைத்த பின்னர் என்னுடனோ எங்கள் குடும்பத் தவர் எவருடனோ அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எவருடனோ ஜனாதிபதி தொடர்பு கொள்ளவில்லை இது சம்பந்தமாக எந்த நடவடிக்கை எடுக்கப்படுகிற தென்றோ சொல்லவுமில்லை என்றும் கஜன் சொன்னார்.

தந்தையின் கொலை பற்றி நாடாளுமன்றத்தில் எங்கள் கட்சியின் ஒரே உறுப்பினரான விநாயகமூர்த்தி பல தடவைகள் எடுத்துப் பேசியிருக்கிறார். கொலையை மூடிமறைக்கும் செயல் என்று விநாயகமூர்த்தி குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். எங்கள் குடும்பத்தினரும் இது ஒரு மூடிமறைக்கும் நடவடிக்கை என்றே கருதுகிறோம். முதலில் இப்படுகொலையை விடுதலைப் புலிகள் மீது பழி போட முயற்சி எடுக்கப்பட்டது. இதை மக்கள் நம்பமாட்டார்கள் என்பதை உணர்ந்த அரசாங்கம் இதை மற்ற ஆயுதக் குழுக்கள் மீது சுமத்த முற்பட்டது. இதுவும் செல்லுபடியாது என்றதும் அரசாங்கம் வேறுபாதாள உலகக் கோஷ்டி மீது போட்டது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக எனது தகப்பனார் இருப்பதால் ஆத்திரமடைந்து பாதாள உலக கோஷ்டியைச் சேர்ந்த சிலர் இக்கொலையைச் செய்ததாக அரசாங்கம் திசை திருப்ப முயன்றது. இந்த அறிக்கையெல்லாம் பந்துல விக்கிரமசிங்கவும் ஒரு கருவியாக இருந்திருக்கிறாரென்பதை அல்லது இதை மூடி மறைப்பதில் ஜனாதிபதிக்கு உடந்தையாய் இருந்திருக்கிறாரென்பதையே காட்டுவதாகவும் கஜன் சொன்னார். இவையெல்லாம் மூடிமறைக்கும் செயல்களே என்றும் கஜன் தெரிவித்தார்.

எப்படியோ இரண்டு ஆண்டுகளாக மூடிமறைக்கப்பட்டு வந்த குமார் பொன்னம்பலத்தின் படுகொலை இனியும் மூடிமறைக்க முடியாது என்பது தெளிவாகி விட்டது. குமார் மறைந்தாலும் அவரது குரல் கஜன் வடிவில் நாடாளுமன்றத்தில் அவருக்காக மட்டுமல்ல அவர் எந்த மக்களுக்காக அஞ்சாமல் குரல் கொடுத்தாரோ அது தொடர்ந்தும் ஒலிக்கும் என்று நம்புவோம்.

# ஊழலும் தாமதமும்

-கௌதம்

யாழ்ப்பாணம் போவதற்கு விமான டிக்கட் பெற இனி பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையில்லை யாமே"" பத்திரிகை ஒன்றில் வந்திருந்த செய்தியைப் படித்துவிட்டு எனது நண்பர் ஒருவரிடம் கேட்டேன்.

"ஓமோம் அப்படித்தான் பேப்பரிலை போட்டிருக்கிறான் ஆனால் அங்கை போனால் தான் உண்மை தெரியும்""

"என்ன சொல்கிறாய் எனக்கு விளங்கவில்லை""

"பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இல்லாமல் ஒண்டும் போகேலாது. பேப்பர் காரருக்கு உது விளங்கேல்லை. ஆனால் ஒண்டு நடக்குது. இனி ரிக்கட் எடுக்கிறதுக்கு பாதுகாப்பு அமைச்சின்ரை அனுமதி தேவையில்லை. கேக்கிற திகதியே சீற் இருந்தால் அவை உடனை டிக்கட் தருகினம். ஆனால் பாதுகாப்பு அமைச்சு அனுமதி இல்லாமல் பிளேனிலை ஏறேலாது""

"அப்படி எண்டால்""

"வழமை போலை அப்பிளிக் கேசன் எடுத்து ஒரு மூண்டு நாலு கிழமை காத்திருந்து தான் போகோணும்""

"அப்ப எல்லாரும் எப்பிடிப் போகினம்""

"பாதுகாப்பு அமைச்சுக்குப் பதிலாக எம்.பி.மாரின்ரை மந்திரிமாரின்ரை சிபாரிசிலை ஆக்கள் போகினம். எம்.பி. மாரிட்டை சிபாரிசு வாங்கிக் குடுக்கிறது இப்ப ஒரு தொழிலாகவே நடக்குது எம்.பி.மாருக்கு தெரியுமோ என்னவோ, இடைத்தரகர்கள் நல்லா உழைக்கினம்""

"அப்ப யாழ்ப்பாணத்துக்கு போக வேணுமெண்டால் கிட்டத்தட்ட ஒரு மாதம் காத்திருக்கத்தான் வேணும் என்கிறாயோ?""

"அப்படியெண்டில்லை. வெறும் டிக்கட் காசோடை மட்டும் போறதெண்டால் காத்திருக்கத்தான் வேணும்""

"அப்ப வெளிநாட்டில் இருந்து வாறவைக்கு அப்படிக் காத்திருக்க முடியுமோ...""

"அதுதானே சொல்லிறன்... அவைக்காகத்தான் 'ஊழலே" இருக்குது. எங்கையும் தாமதம் தான் ஊழலுக்கு காரணம் ஊழல் இருக்கிறதாலை தான் தாங்களும் வசதியாக இருக்க முடியு தெண்டியுதாலை அப்படி வைச்சிருக்கினம், பாதுகாப்பு அமைச்சு ஆக்கள் இதாலை களபேர் பிழைக் கினம். வெளிநாட்டிலை இருந்து வாறவைக்கு 6000, 7000 குடுக்கிறது சின்ன விசயம்..."

"அப்ப உந்த ஊழலை நிப்பாட்டேலாதே?"

"எனக்குத் தெரியாது பாதுகாப்பு அமைச்சின்ரை அனுமதி தேவை எண்டு இருக்கு மட்டும் உதை நிப்பாட்டலாம் எண்டு நான் நிலைக்கேல்லை..""

நண்பர் சிரித்தார்.

"சிபாரிசுக் கடிதம் எழுதிக் குடுக்கிற எம்பிமார், அனுமதி இல்லாமல் அனுப்பச் சொல்லி அரசாங்கத்திடம் வலியுறுத் தலாம் தானே"" - இது நான்.

"உதை அவையிட் டைத்தான் கேக்கோணும், ஒருவேளை அவையின்ரை ஆக்களின்ரை உழைப்பு போயிடுமெண்டு யோசிப் பினமோ என்னவோ"

நான் பதில் பேசவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜனாதிபதிக்கு எதிரான ஒழுக்கவழுவுரைப் பிரேரணை



ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ஒழுக்க வழுவுரைப் பிரேரணை (இம்பீச்மென்ற்) விரைவில் கொண்டுவரப்பட வேண்டு மென்பதில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி மிக ஆர்வமாக இருக்கிறது.

ஒழுக்கவழுவுரைப் பிரேரணையொன்றை அரசாங்கம் கொண்டுவந்தால் அதை ஆதரித்து கையொப்பமிடுவதென்று தமிழ்க் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் பலரும் கூட ஜனாதிபதிக்கு எதிராக ஒழுக்க வழுவுரைப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றனர். இதற்குப் பல்வேறு காரணங்களை அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் ஒழுக்கவழுவுரைப் பிரேரணையை அவசரமாகக் கொண்டுவருவதால் இப்பொழுது சுமுகமாக இயங்கிவரும் அரச நிர்வாகம் சில சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியிருக்கும். என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கருதுவதாகக் கூறப்படுகிறது.

குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா உரிய நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதே அவர் மீது ஒழுக்க வழுவுரைப் பிரேரணைக்கு ஆதரவாக தமிழ்க் காங்கிரஸ் செயல் படுவதற்குக் காரணமாகும்.

குமாரின் படுகொலை சம்பந்தமாக புதிதாக புலன் விசாரணைகளைத் தொடர்ந்து எடுக்கப்படும் நடவடிக்கைக-ளைப் பொறுத்து மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டியவை பற்றி ஆராயலா மென தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்கள் பலர் கருதுவதாகத் தெரிகிறது.

ஒழுக்கவழுவுரைப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்குத் தாமதமானாலும் குமாரின் படுகொலையில் பின்ன-ணியிலிருந்தவர்களை வெளிக் கொண்டு வருவதற்கு பாரபட்சமற்ற விசாரணைக் குழுவொன்று நியமிக்கப் படவேண்டு மென்று தமிழ்க் காங்கிரசார் கருதுகின்றனர்.

முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மகன் மகேன் ரத்வத்தை இக்கொலையில் சம்பந்தப் பட்டிருப்பதாக ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்ட செய்தி வெளிவந்திருப்பதால் இச்சம்பவம் பற்றி பாரபட்சமற்ற விசாரணை செய்யப்பட வேண்டு மென்று குமார் பொன்னம்பலத்தின் மகனும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திர குமார் தெரிவித்திருக்கிறார்.

மகேன் ரத்வத்தையின் பெயர் இச்சம்பவத்தில் இடம் பெற்றிருந்தாலும் ரத்வத்தையைவிட மேலும் உயர்ந்தவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று கஜன் கருதுகிறார். இதனால் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கஜன் வலியுறுத்தியிருக்கிறார்.

ஒழுக்க வழுவுரைப் பிரேரணைக்கு முன்னர் விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென்று கஜேந்திர குமார் பொன்னம்பலம் வலியுறுத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

# சிங்கள பௌத்த ஊடகங்களே இலங்கையில் இருக்கின்றன

**பிபிசி** சங்தேசயவின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக கடமையாற்றி வரும் பிரியத் லியனகே சமீபத்தில் ஹிரு பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் இலங்கையிலுள்ள ஊடகங்கள் அனைத்தும் சிங்கள பௌத்த ஊடகங்களே என துணிந்து கூறியிருக்கிறார். மேலும் அவரது செவ்வியில்!

'இலங்கையின் சிங்கள ஊடகவி-யலாளர்கள் நினைக்கிறார்கள் இது தமது



யுத்தமென்று. எனவே இந்த கடமையைப் [illegible]பவர்கள் இராணுவத்தினர். ஆக, சிங்கள பௌத்த அரசினது வெற்றியை மனதில் இருத்திக் கொண்டே தமது கடமையை [illegible]ய விளைகிறார்கள். கொழும்பிலிருந்து கொண்டு இவர்கள் இந்த யுத்தத்தை இப்படி செய்ய வேண்டும், இந்த ஆயுதங்களை [illegible]ந்தால் சரியான அடி கொடுக்கலாம் என எழுது[illegible]கின்ற ஊடகவியலாளர்களேயொழிய [illegible]ந்த சமூக யதார்த்தத்தை சரியாக அலசுப-வர்கள் அல்ல. சுதந்திர ஊடக இயக்கம் கூட [illegible]ாற்றமொன்றுக்காக" என்ற கோசத்துக்கூடாக மாறி மாறி ஐக்கிய தேசிய கட்சிக்கும், பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஆதரவளித்து மாயையை ஏற்படுத்தி வருவதையே காணலாம்.."

ஆப்கான் பிரச்சினையில் பி.பி.சி. ஊடகம் என்கிற அளவில் முகம் கொடுக்க நேர்ந்த சிக்கல் குறித்து எடுக்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் மேற்கு ஊடகங்கள் பல இந்த சவாலை எதிர்கொள்ள முடியாமல் போய் விட்டது. பி.பி.சிக்குள் ஆரம்பத்தில் இந்த சிக்கல் இருந்தது. என்றாலும் உள்ளே பலருமாகப் போராடி அந்நிலைமையை மாற்றக்கூடியதாக இருந்தது. டோனிபிளேயர் கூட ஊடகவியலாளர்களை தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்துக்கு அழைத்து யுத்தத்துக்கு ஆதரவு வழங்கும் படி கோரினார். ஆனால் கலந்துரையாடலின் இறுதியில் அந்த கோரிக்கையை நிராகரித்து எழுத்து மூலம் அதனை அறிவித்தனர். பிரித்தானிய ஊடகத்துறை சொர்க்கம் அல்லா விட்டாலும் அதற்குள் போராடுவதற்கு இடமுண்டு.

# பாதுகாப்பு....

ஜ.பா.பி.வுக்கு இருந்ததாகவும் அது குறித்த தன்னுடன் ஜனாதிபதி கலந்துரையாடி இருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

05. 2000 ஜனவரி 02

அனோஜா வீரசிங்கவின் மொனராகல வீட்டைத்தாக்கி அழித்த சம்பவம் ஜ.பா.பி.வால் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது. ஜனாதிபதியை வசை பாடிய கெசட் ஒன்றில் அனோஜா குரல் மாற்றி பேசியிருந்ததை கேட்டதாகவும் அதன் விளைவாகவே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

06. 2000 ஜனவரி 05. குமார் பொன்னம்பலம் கொலை.

குமாரின் படுகொலையுடன் தொடர்புள்ள ரணசிங்க மற்றும் மொரட்டுவ சமன் ஆகியோர் அனுருத்த ரத்வத்தவின் மகனுடன் மட்டுமல்ல ஜ.பா.பி.வுடனும் தொடர்புள்ளவர்கள் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

07. 2000 ஜனவரி 20 ரூகாந்த குணதிலக சந்திரலேகா ஆகியோரின் மீதான தாக்குதலின் பின்னணியில் ஜ.பா.பி. தொடர்பிருந்தமைக்கும் ஆதாரங்கள் உள்ளன. தாக்குதலுக்கு முன் அப்படியொரு கும்பல் வருவதாகவும் உடனடியாக இடத்தை விட்டு போகும்படியும் ரூகாந்தவுக்கு கைத்தொலைபேசியின் மூலம் ஜ.பா.பி.வைச் சேர்ந்த ஒருவர் அறிவித்த போதும் ரூகாந்த அந்த வேளை போதையில் இருந்ததால் தொலைபேசி அழைப்பினை உள்வாங்கும் நிலையில் அவர் இல்லாதிருந்திருக்கலாம்.

இதுபோன்ற பல சம்பவங்களுடன் ஜ.பா.பி.க்குத் தொடர்பிருப்பதாக தகவல்கள் தொடர்ந்தும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அது 'பாதுகாப்புப் படை" அல்ல, படுகொலைப் படையே!

# கதிர்காமரும்...

பாதுகாப்புக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் தொடர்ந்து போராடுபவர்கள் விடுதலைப் புலிகளே. இதனால்தான் இவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தி அழித்தொழிக்க கதிர்காமரும் உடந்தையாக இருக்கிறார்.

ஆனால் கதிர்காமர் உண்மையான தேசப்பற்றுடன் செயற்பட்டால் அமைச்சர் பதவியை இழந்த பின்னரும் அமைச்சுப் பதவி தந்த சுகபோகத்தை துறக்க மனமின்றியிருப்பாரா?

தேர்தலில் தோல்விடைந்த அமைச்சர்கள் எல்லோரும் தங்கள் அமைச்சர் பதவிகளைத் துறந்து தங்களிடமிருந்த மோட்டார் வாகனங்கள், பாதுகாப்பு வசதிகள் அனைத்தையும் கைகழுவி விட்டனர்.

ஆனால் கதிர்காமர் மட்டும் இந்த சுகபோகங்களைத் துறக்க வேண்டிய அவசியமில்லாத அதிர்ஷ்டக்காரர்.

கதிர்காமர் வசம் இப்பொழுதும் 15 ஆடம்பர மோட்டார் கார்கள் இருக்கின்றன. 125 சிறப்பு இராணுவக் கமாண்டோக்களின் பாதுகாப்பு, 10 எம்.எஸ்.டி. பாதுகாப்பு அதிகாரிகள், 17 வாகனச் சாரதிகள், தனிப்பட்ட அவரது சமையற்காரர், தோட்டக்காரர், உதவியாளர் என மூன்று ஊழியர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அரசாங்கமே சம்பளம் கொடுக்கிறது.

இந்த அமைச்சின் உத்தியோகத்தர் சிலர் இன்னமும் கைப்பாவனையில் உள்ள தொலைபேசிகளை உபயோகிக்கின்றனர். அரசாங்க செலவு தான்.

சமீபத்தில் கதிர்காமரும் அவரது துணைவியார் சுகந்தியும் பத்து மோட்டார் வாகனங்கள் புடைசூழ கண்டிக்குச் சுற்றுலா சென்றிருந்தனர். ஜனாதிபதி மாளிகையில் தான் இவர்கள் தங்கியிருந்தனர். மோட்டார் வாகனங்களுக்கு எரிபொருள் செலவும் அரசாங்கம் தான் செலுத்த வேண்டும்.

இவை தான் கதிர்காமரின் தேசபக்தியின் அடையாளம். பொன் இராமநாதனை சிங்கள மக்கள் மறந்திருக்கலாம், ஆனால் கதிர்காமரின் உண்மைச் சொரூபமும் சுயநலமும் சிங்கள மக்களுக்கு விளங்கினால் அதன் விளைவு எப்படியிருக்குமோ?

# புலித்தடை...

பயிற்சித் திட்டங்கள் என்பவற்றை வளர்த் தெடுப்பதன் மூலம் ஆசியாவில் புதிய கேந்திர தள வாய்ப்புக்களை விரிவாக்க வழி வகுக்கலாமென அமெரிக்கப் படைத்துறை சார் ஆய்வு நிறுவனமான RAND குறிப்பிடுகிறது. (United states and Asia: Implications for military and USAF) இங்ஙனம் சிறி லங்காவில் வளர்ச்சி பெற்ற இராணுவ மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்திட புலிகளின் போரிடும் ஆற்றலைத் தணித்து சிறிலங்கா அரசை உறுதிப்படுத்த வேண்டிய தேவை 90களின் பிற்கூற்றில் அமெரிக்காவிற்கு உண்டாகிய வேளையிலே புலிகள் மீதான தடைகள் படிப்படியாக போடப்படலாயின என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

மேற்குலகில் உள்ள பின்தளத்திலிருந்து கிடைக்கும் நிதியிலேயே புலிகளின் மரபு வழிப்படைபலம் தங்கியுள்ளது எனவும் அதைச் சற்று இறுக்கினால் புலிகளை சிறிலங்காவில் தனது கேந்திர நோக்கங்களுக்கு அமைய வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்ற எண்ணத்திலேயே மேற்படி நெகிழ்வுடன் கூடிய தடைகள் அமெரிக்காவினாலும் அதன் கேந்திர பாதுகாப்பு உடன்படிக்கை நாடுகளாலும் போடப்படுகின்றன என்பதும் வெள்ளிடைமலை. அத்துடன் அமெரிக்காவுடன் இதே ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள சிங்கப்பூரிலும் தாய்லாந்திலும் புலிகளின் நடவடிக்கைகள் மீது சில நெருக்குதல்கள் திடீரென கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்டதையும் நாம் இந்தப் பின்னணியிலேயே பார்க்க வேண்டும்.

1983 -1987 வரை எமது தேசிய விடுதலைப் போரைப் பயன்படுத்தி தனது கேந்திர நலன்களை முன்னெடுக்க இந்தியா வகுத்த வியூகத்தின் அதே அடிப்படைகள் இங்கும் உள்ளதை நீங்கள் காணலாம். ஆனால், இது மிக நுட்பமானதும் அதைவிட மிக மிக விரிவானதுமாகும். ஆனால் எந்த வல்லரசின் வியூகத்தையும் சமாளித்து எமது தமிழ் தேசிய நலன்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எமக்கு மேலும் படிப்பும் மதிநுட்பமும் தேவை. அதற்கு மேலாக எமது தேசிய நலன்களின் அடித்தளமாக அசைக்க முடியாத ஒரு நவீன மரபுவழி படைப்பலமும் கட்டாயம் தேவையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registred as a Newspaper


# நிகரி
NIHARI

83, பிலியந்தலை வீதி, மஹரகம
தொலைபேசி : 851672, 851673 தொலைமடல் 851814
மின்னஞ்சல் : nihari02@yahoo.com


## மீண்டும் உங்கள் முன் !

வணக்கம்

உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் இந்த முதலாவது இதழைப் புரட்டும் போதே உங்கள் புருவங்கள் நிச்சயம் மேலெழுந்திருக்கும் - ஆச்சரியத்தால்.

ஆம் உங்களுக்குப் பரிச்சயமான எழுத்துக்கள்: அதே பரிச்சயமான கருத்துகள்: கடந்த ஒரு வருடத்துக்கு முன்பு வரை ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக ஒலித்துக் கொண்டிருந்த அதே மாற்றுக் குரல். பெயரையும், அதன் அமைப்பையும் பார்த்து நீங்கள் சரியாகவே நிகரியை இனங்கண்டிருப்பீர்கள்.

ஆம் உங்கள் ஊகம் சரிதான்.

புதிய பெயருடன் மீண்டும் "ஒரு போர்க் குதிரையின் மீதேறி" உங்கள் முன் வந்து நிற்கிறோம். உங்கள் அன்பான ஆதரவையும் வாழ்த்துக்களையும் எதிர்பார்த்து - அவை நிச்சியமாக கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்.

நியாயத்திற்காக, மக்களின் உரிமைக்காக, ஒடுக்கப்படும் மக்களின் குரலாக ஒலிப்பதற்காக மக்கள் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்பதற்காக உறுதியுடன் செயற்பட உங்கள் முன் பிறப்பெடுத்திருக்கிறது நிகரி. அரசியல், சமூகம், பொருளாதாரம், அறிவியல், மொழியியல் மற்றும் சூழலியல் உள்ளிட்ட அனைத்துத் துறையிலும் மாற்றுச் சிந்தனையை உருவாக்க நிகரி முன் நின்று செயற்படும்.

மக்களின் நலன் என்ற அடிப்படைக் கோட்பாட்டில் நின்று உறுதியுடன் செயற்படுவேன் என்று நிகரி பிரகடனம் செய்கிறது.

சமூக ஜனநாயக வாழ்வை வாழவும் அதை அனுபவிக்கவுமான மக்களுக்குள்ள உரிமைக்கான எத்தகைய தளர்வுமின்றி நிகரி செயற்படும்.

இலங்கைத் தமிழ்ச் சூழலில் நிகரியின் வருகை ஒரு புதிய பாய்ச்சலை ஏற்படுத்த வேண்டும். துணிவும் வளைந்து கொடுக்காத ஆத்ம பலமும் கொண்டதாக நமது ஊடகத்துறை உருவாகுவதற்கு நிகரியின் செயற்பாடு முன்மாதிரியாக அமைய வேண்டும். அதற்கு வேண்டிய ஆதரவும் ஒத்துழைப்பும் உங்களிடமிருந்து நிகரிக்கு நிச்சயம் கிடைக்கும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

உயர் தர தாளில், பல்வர்ணப் பக்கங்களுடன் ஏகப்பட்ட பொருட் செலவில் கவர்ச்சிசகரமாக விதத்தில் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கும் ஒரு சூழலில் வெறும் கறுப்பு வெள்ளைப் பத்திரிகையாக நிகரி வெளிவருகிறாள். தாளும் வர்ணமும் பத்திரிகையின் பொறுப்புக்கு - அவை அழகுக்கு மெருகூட்ட முடியுமாயினும் - அதன் ஆழத்திற்கு அடிப்படையானவை அல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். நிகரி கவர்ச்சியை அடிப்படையாக கொண்ட ஒரு வியாபாரப் பத்திரிகை அல்ல. அது எம் ஒவ்வொருவரதும் உள்ளத்தின் குரல்: உணர்வின் வெளிப்பாடு.

நிகரி எல்லாவிதமான மாற்றுக் கருத்துக்களுக்கும், கருத்துகள் தொடர்பான விவாதங்களுக்குமான ஒரு களமாக அமைகின்ற அதேவேளை, எழுதுபவர்களது கருத்துச் சுதந்திரத்தை உயர்த்திப் பிடித்தும் நிற்கும்.

சுதந்திரமாக எழுதவும் விவாதிக்கவும் வெளிப்படையாகவும் உண்மையாகவும் பேசுவதற்கும் சரியான ஒரு களம் இல்லை என்ற குறை நிகரியால் இல்லாமல் போகிறது.

எமது அன்பான வாசகர்கள் இதை நன்றாகப் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சமாதானத்துக்கான பாதை திறபட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன், அதற்காக தன்னாலான முழுப் பங்களிப்பையும் வழங்கும் துடிப்புடன் உங்கள் முன் வந்துள்ள நிகரியை ஏற்று ஆதரியுங்கள்.

மீண்டும் சந்திப்போம்!

நன்றி
வணக்கம்

# பாதுகாப்புப் படையல்ல..! படுகோலைப்படை.....!

எஸ்.பி. திசாநாயக்காவை கொலை செய்யவென ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவால் (President Security Division) ஆயுதம் தாங்கிய 9 நபர்களைக் கொண்ட குழு ஒன்று அங்குரங்கெதவுக்கு அனுப்பப்பட்ட சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு தலைவராகக் கடமையாற்றிய நிஹால் கருணா ரட்ணவுக்கு எதிராக கடுமையான குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 3ம் திகதி மத்துரட்ட பொலிசில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரோகண திசாநாயக்காவினால் இரு கப் ரக வாகனங்களுடன் பயணம் செய்த 9 பேரைக் கைத செய்து அவ்வாகனத்தில் இருந்த பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட 9 பேரில் ஜ.பா.பி.வைச் சேர்ந்த பொலிஸ் ஒருவரும், கான்ஸ்டபிள் ஒருவரும் படையில் இருந்து தப்பி ஓடிய மூவரும் பாதாள உலகத்தைச் சேர்ந்த நால்வரும் அடங்குவர். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ரொக்கட் லோஞ்சர் ஒன்றும் ஜ.பா.பி.வுக்கு உரிய பிறவுன்ஸ் ரக துப்பாக்கிகள் மூன்று, ரீ.56 ரக துப்பாக்கிகள் நான்கு அவற்றுக்கான தோட்டாக்கள் 400, கைக்குண்டுகள் 40 என்பவை அடங்கும்.



நிஹால் கருணாரத்ன
(ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவர்)

இரு வாகனங்களும் விசேட அதிரடிப்படையினரது என்று விசாரணையின் போது கூறுப்பட்ட போதும் மேலதிக விசாரணையின் பின் அவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு (ஜனாதிபதி வாசஸ்தலமான அலரிமாளிகையின் மதிலுக்கு பின்னால் அமைந்துள்ளது) சொந்தமானவையென கண்டுபிடிக்கப்பட்டது. சில தினங்களுக்கு முன் மத்துரட்ட பிரதேசத்தில் சுற்றிக் கொண்டிருந்த இந்த வாகனத்தின் மீது சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவை கைப்பற்றப்பட்டன. இப்பகுதியில் எஸ்.பி.திசாநாயக்காவின் கூட்டமொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேலும் வடக்கில் யுத்தமுனையில் பயன்படுத்துகின்ற ரொக்கட் லோன்ஞ்சர்களை அவர்கள் ஏன் கைவசம் வைத்திருந்தார்கள் என்பது குறித்து மேலதிக விசாரணைகள் நடக்கின்றன.



இதற்கிடையில் இவர்கள் கைது செய்யப்பட்டவுடன் ஜ.பா.பி.வின் தலைவர் நிஹால் கருணாரத்ன பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரான்ங் அலஸ்ஸுடன் தொடர்பு கொண்டு அவர்கள் அனைவரும் ஜ.பா.பி.வில் முன்னர் கடமையாற்றியவர்கள் என்றும் அவர்களை உடனடியாக விடுவிக்கும் படியும் கேட்டுள்ளார். பொதுவில் கடமைக்கு அனுப்பப்படுபவர்கள் விசேட அதிரடிப் படையினரே. ஆனால் ஜ.பா.பி.வைச் சேர்ந்த இருவருடன் வெளியார் 7 பேரை அனுப்பியிருந்தது மற்றும் அவர்கள் வசம் இருந்த ஆயுதங்களில் ரொக்கட் லோன்ஞ்சரும் இருந்தமை சந்தேகத்துக்கு இடமளிப்பதாகவும் அவர்களை விடுவிக்க முடியாதனவும் பொலிஸ் மா அதிபர் கூறியிருக்கிறார். ஆத்திரமடைந்த நிஹால் தான் ஜ.பா.பி.வில் இருந்து 3000 பேரை அழைத்து வந்து சுற்றி வளைத்து அவர்களை விடுவித்துச் செல்வதாக மிரட்டியிருக்கிறார். இதன் பின் ஜனாதிபதியும் பிரதி பொலிஸ் மா அதிபருடன் தொடர்பு கொண்டு "என்ன காரியம் செய்து விட்டாய்?" எனக் கூறி திட்டியிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

பின்னர் நிஹால் இதனை கவனமாகக் கையாள வேண்டுமென நிதானமாக காய் நகர்த்தியிருக்கிறார்.

இது தொடர்பான பொலிஸ் விசாரணைகள் இழுபறி நிலையில் இருந்த போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் "நிஹால் கூறுவதை மாத்திரம் பதியுமாறு கூறியிருக்கிறார்."" மத்துரட்டவுக்கு அனுப்பப்பட்ட குழுவுக்கு ஆயுதங்களை கொடுத்தது தான் தான் என்றும் அவை ஜ.பா.பி.வுக்குரியவை என்றும் ஒப்புக் கொண்டுள்ளார். எதற்காக வெளியார் அனுப்பப்பட்டனர். எதற்காக ரொக்கட் லோன்ஞ்சர்கள் வழங்கப்பட்டன என்பன போன்ற கேள்விகளுக்கு நிஹால் தெளிவான பதிலை அழிக்கவில்லை. நிஹால் தலைமையில் ஜ.பா.பி.வின் மீது ஏலவே பல குற்றச்சாட்டுக்கள் விசாரணையில் உள்ளன.

01. 1998 ஜூன் 16 'சண்டே லீடர்" பத்திரிகை ஆசிரியர் லசந்த குமாரவின் வீட்டின் மீதான துப்பாக்கிப் பிரயோகம்.

02. 1999 ஜூலை 15 ஐக்கிய தேசிய கட்சியின் ஆர்ப்பாட்டத்தை செய்தியிடச் சென்ற ஊடகவியலாளர்களைத் தாக்கி புகைப்படக் கருவிகள் கைப்பற்றப்பட்டன.

03. 1999 செப்டம்பர் 07 ரோகண குமார படுகொலை. இது தொடர்பாக் கைது செய்யப்பட்டிருக்கும் தார அஜித்தின் வாக்கு மூலத்தின்படி இதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் ஜ.பா.பி.வுக்கு சொந்தமானதாகும். மேலும் அவ்வாகனமானது ஜனாதிபதியின் ஊடகவியல் ஆலோசகர் சனத் குணதிலக்க உத்தியோகபூர்வமாக பயன்படுத்திய வாகனம் என அறியப்படுகிறது.

04. 2000 ஜனவரி ஆரம்பத்தில் ஜனாதிபதியினாலேயே பாதி வெளிப்படுத்தப்பட்ட ஊடகவியளாளர்கள் இருவரது கொலையின் பின்னணியில் ஜ.பா.பி. சம்பந்தப்பட்டுள்ளது. டிசம்பர் 22ம் திகதி ஜனாதிபதி சத்தியப்பிரமானம் செய்து கொள்ளச் சொன்றிருந்த போது லீடர், ராவய ஆசிரியர்கள் தமது பட்டியலில் முன்னணியில் இருப்பதாக சனத் குணத்திலக்க மிரட்டி இருந்தார். எஸ். பி . திசாநாயக்காவின் அறிவிப்பின்படி அவ்விரு பத்திரிகைகளுக்கும் குண்டு வீச்சு நடத்துவதற்கான திட்டம்

தொடர்ச்சி 19ம் பக்கம்...

இப்பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியந்தல வீதி 83ஆம் இலக்க ராவ அச்சகத்தில் 2002ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் [illegible] வெளியிடப்பட்டது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்